KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 33, 06 March 2026 இதழ்:- 09

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# தேசிய மக்கள் சக்தி - இன்றைய ஜே.வி.பியை தமிழ்த் தரப்பு புரிந்து கொள்ள வேண்டும்!



தமிழ்த் தரப்பினர் தமது அரசியலைச் சரி செய்ய வேண்டும் என்றால், மெய்யாகவே முன்கொண்டு செல்ல வேண்டும் என்றால், தேசிய மக்கள் சக்தியைப் புரிந்து கொள்ள வேண்டும். தேசிய மக்கள் சக்தியை (அதாவது இன்றைய அரசாங்கத்தை) புரிந்து கொள்ள வேண்டும் என்றால் இன்றைய ஜே.வி.பியைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்றைய ஜே.வி.பியைப் புரிந்து கொள்ள முடியாதோரின் கண்களுக்கு ரோஹண விஜேவீர, சோம வன்ஸ அமரசிங்க போன்ற முகங்களே தென்படும். அந்த முகங்கள் பிரதிபலித்த பழைய தீவிர இன வாத முகத்தையும் அது மேற்கொண்ட பகிரங்க வெறுப்பு நடவடிக்கைகளுமே நினைவில் எழும். அவ்வாறு தோன்றுவதால் தான் பழைய ஜே.வி.பியை நினைத்துக் கொண்டு தமிழ்த்தரப்புப் பேசு கிறது. எழுதுகிறது தீர்மானங்களை எடுக்கிறது. போராட்டங்களை நடத்துவதற்கு முயற்சிக்கிறது. மொத்தத்தில் தன்னுடைய அரசியலை முன்னெடுக்கிறது. இது தவறான ஒரு வழிமுறை அணுகு முறை ஆகும். என்பதால் தமிழ்த்தரப்பு மேலும் பின்னடைவையும் (17ம் பக்கம் பார்க்க)



# ஈரானின் பாதுகாப்பு பலவீனங்களும் காமேனியின் இறுதி நிமிடங்களும்

மத்திய கிழக்கின் அரசியல் வரைபடம் கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி முதல் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஈரானின் ஆன்மீக மற்றும் அரசியல் அதிகாரத்தின் உச்சமாகத் திகழ்ந்த அயதுல்லா அலி காமேனி, இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் துல்லியமான கூட்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார். பல தசாப்தங்களாக உலகின் மிகவும் பாதுகாக்கப்பட்ட மனிதர்களில் ஒரு வராகக் கருதப்பட்ட காமேனியின் வீழ்ச்சி, நவீன உளவுத்துறையின் வெற்றியையும் ஈரானிய பாது காப்பு கட்டமைப்பின் மறைமுகப் பலவீனங் களையும் அம்பலப்படுத்தியுள்ளது. (21 ம்பக்கம்)

# இலங்கைக் கடற்பரப்புக்குள் ஈரானின் போர்க் கப்பல்கள்? அமெரிக்கத் தாக்குதலில் 1 கப்பல் மூழ்கடிப்பு! 80 பேர் பலி!

இரானின் கடற்படை கப்பல் ஒன்று இலங்கையின் காலி துறைமுகத்தி லிருந்து 40 கடல் மைல் தொலைவில் மூழ்கியது. இரானிய கப்பல் மூழ்கிய தற்கான உண்மையான காரணம் தெரியவில்லை என இலங்கை பாது காப்பு இணை அமைச்சர் அருணா ஜெயசேகரா பிபிசி சிங்கள மொழி சேவையிடம் தெரிவித்துள்ளார். எனினும் அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் பீட் ஹெக்சேத் தற்போது நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பில், 'சர்வ தேச கடலில் பாதுகாப்பாக இருப்பதாக கருதப்பட்ட இரானிய போர்க்கப்பல் ஒன்றை இந்திய பெருங் கடலில் அமெரிக்கா மூழ்கடித்ததாக' தெரிவித்தார்.' அக்கப்பல் நீர்மூழ்கிக் குண்டால் மூழ்கடிக்கப்பட்டது' என அவர் தெரிவித்தார். ஆனாலும், தாக்குதலுக்கு உள்ளான இரானிய கப்பலின் பெயரை அவர் குறிப்பிட வில்லை. இந்த நிலையில் அமெரிக்க தாக்குதலில் மூழ்கிய (2ம் 4ம் 24ம் பக்கங்களைப் பார்க்க(

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
33 வது ஆண்டு விழா
விபரங்களுக்கு 5ம் பக்கம் பார்க்க

# இலங்கையின் கடற்பரப்பில் நீர்மூழ்கிக் கப்பல் தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்ட இரான் கப்பல் தொடர்பில் அமெரிக்கா கூறியது என்ன?



இரானின் கடற்படை கப்பல் ஒன்று இலங்கையின் காலி துறைமுகத்திலிருந்து 40 கடல் மைல் தொலைவில் மூழ்கியது. இரானிய கப்பல் மூழ்கியதற்கான உண்மையான காரணம் தெரியவில்லை என இலங்கை பாதுகாப்பு இணை அமைச்சர் அருணா ஜெயசேகரா பிபிசி சிங்கள மொழி சேவையிடம் தெரிவித்துள்ளார்.அ எனினும் அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் பீட் ஹெக்சேத் தற்போது நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், 'சர்வதேச கடலில் பாதுகாப்பாக இருப்பதாக கருதப்பட்ட இரானிய போர்க்கப்பல் ஒன்றை இந்திய பெருங்கடலில் அமெரிக்கா மூழ்கடித்ததாக' தெரிவித்தார்.

'அக்கப்பல் நீர்மூழ்கிக் குண்டால் மூழ்கடிக்கப்பட்டது' என அவர் தெரிவித்தார். ஆனாலும், தாக்குதலுக்கு உள்ளான இரானிய கப்பலின் பெயரை அவர் குறிப்பிடவில்லை. இந்த நிலையில் அமெரிக்க தாக்குதலில் மூழ்கிய இரான் கப்பலில் இருந்த 80 பேரின் உடல்கள் கண்டறியப்பட்டதாக, பாதுகாப்பு துறை செயலாளர் சம்பத் துய்யகொந்தா பிபிசியிடம் தெரிவித்துள்ளார்.

மீட்கப்பட்ட உடல்கள் காலி தேசிய மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக களத்தில் இருக்கும் பிபிசி செய்தியாளர் தெரிவிக்கிறார். அமெரிக்காவின் அறிவிப்பு தொடர்பில் இலங்கை கடற்படையிடம் பிபிசி தமிழ் வினவியது. கடலுக்குள் அடியில் அவதானிக்கும் வசதி இலங்கையிடம் கிடையாது என கடற்படை செய்தித் தொடர்பாளரான கமாண்டர் புத்திக்க சம்பத் தெரிவிக்கின்றார்.

அதே சமயம், இலங்கையில் நீர்மூழ்கிக் கப்பல் தாக்குதலால் கப்பல் மூழ்கியதாக வெளியான செய்திகளை நிராகரிப்பதாகவும், மூழ்கியதற்கான காரணம் தெரியவில்லை என்றும் இலங்கை கடற்படை செய்தித் தொடர்பாளர் புதிகா சம்பத் முன்னர் தெரிவித்திருந்தார். இலங்கையின் பாதுகாப்பு துறை செயலாளர் ஏர் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா பிபிசி சிங்கள மொழி சேவையிடம் இதனை உறுதி செய்தார்.

காயமடைந்த 32 பேர் காலி தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், கப்பலில் இருந்த 140க்கும் மேற்பட்டோரைக் காணவில்லை என,சம்பத் துய்யகொந்தா பிபிசியிடம் தெரிவித்தார். தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்க தரப்பு கூறுகின்றது. எனினும், எங்களுக்கு விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளதாகவே தகவல் கிடைத்தது. விபத்து தொடர்பிலான நடவடிக்கைகளையே நாங்கள் முன்னெடுத்தோம் என அவர் குறிப்பிட்டார்.

நீர்மூழ்கி கப்பலைக் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் வெளியிட்ட செய்தியை கடற்படை நிராகரித்திருந்தமை தொடர்பிலும், பிபிசி தமிழ், இலங்கை கடற்படை பேச்சாளரிடம் வினவியது. நீர்மூழ்கி கப்பலைக் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டதை இலங்கை கடற்படை உறுதிப்படுத்தியதாக, வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. அந்தச் சந்தர்ப்பத்தில் கடற்படை அவ்வாறான தகவலொன்றை வெளியிட்டிருக்கவில்லை. இலங்கை கடற்படையை மேற்கோள் காட்டி தெரிவித்த கருத்தையே நான் நிராகரித்தேன். நாங்கள் தாக்குதல் நடத்தப்பட்டதாக எந்தவொரு இடத்திலும் தகவல் வெளியிடவில்லை. நான் விபத்து என்றே கூறியிருந்தேன். கடற்படை கூறியதாக பரவிய கருத்தையே நான் நிராகரித்தேன் என அவர் தெளிவுப்படுத்தினார்.

அத்துடன், இலங்கையை அண்மித்த கடற்பரப்பிற்குள் நீர்மூழ்கி கப்பலொன்று ஊடுருவுவதை அவதானிக்கும் தொழில்நுட்ப வசதி இலங்கையிடம் இல்லை என பிபிசி தமிழ், கடற்படை ஊடகப் பேச்சாளரிடம் வினவியது. எந்தவொரு படகையும் அவதானிக்க முடியும். எனினும், எமது கடல் பரப்பிற்குள் வருவதில் தான் பிரச்னை உள்ளது. எமது கடல் பரப்புக்கு வருகைத் தர வேண்டும் என்றால் மாத்திரமே அறிவிக்க வேண்டும். சர்வதேச கடலில் பயணிக்க எங்களிடம் அறிவிக்க தேவையில்லை. முழு இலங்கையையும் அவதானிக்கும் திட்டமொன்று இல்லை. ஏதேனும் தகவல் கிடைத்தால் அந்த இடத்தை மாத்திரமே அவதானிக்க முடியும். கடலுக்குள் அவதானிக்கும் வசதி இலங்கையிடம் இல்லை என அவர் குறிப்பிட்டார்.

இரான் கப்பல் மூழ்கியதற்கு நீர்மூழ்கி தாக்குதல் தான் காரணம் என்கிற செய்தியை தாங்கள் முற்றிலும் மறுப்பதாக இலங்கை கடற்படையின் செய்தித் தொடர்பாளர் புத்திக்க சம்பத் தெரிவித்தார். செய்தியாளர் சந்திப்பின் போது வெளிநாட்டு ஊடகங்களை மேற்கோள்காட்டி, இரானிய கப்பல் நீர்முழ்கி தாக்குதலுக்கு உள்ளானதாக கடற்படை தெரிவித்துள்ளதா என்கிற கேள்வி அவரிடம் முன்வைக்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர், 'கடற்படை தரப்பிலிருந்து இந்தக் கூற்றை முழுவதுமாக நிராகரிக்கிறோம்.' என்றார்.

'விபத்து நேர்ந்த விதம் தொடர்பில் பின்னரான காலத்தில் நடத்தப்படும் விசாரணைகளின் ஊடாகவே உறுதிப்படுத்த முடியும். விசேட நிபுணத்துவத்துடனான விசாரணை குழு, தொழில்நுட்ப விசாரணைகள் குழுவின் ஊடாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். அதற்காக அதிகாரம் உள்ள நிறுவனங்கள் தொடர்புப்பட வேண்டும். (23ம் பக்கம் பார்க்க)

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART
4A WADE AVE
TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO**

**5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங் களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தை களின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# நாமலின் விளாசலைக் கொஞ்சம் படியுங்கள்! ஈரான் கப்பல் தாக்கப்பட்டது புலனாய்வுப் பலவீனமாம்!



இலங்கையின் பிரத்யேகப் பொருளாதார மண்டலத்திற்குள் ஈரானியக் கப்பலொன்று தாக்குதலுக்குள்ளாகியுள்ளதாக சர்வ தேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ள நிலையில், இது குறித்து அரசாங்கம் நாட்டுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப் பாளர் நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

நேற்று 05 மார்ச் 2026 வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றிய நாமல் ராஜபக்ஷ, இலங்கைக் கடல் எல்லை க்குள் இடம் பெற்றதாகக் கூறப்படும் கப்பல் தாக்குதல் மற்றும் நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் குறித்து பல முக்கிய கேள்விகளை எழுப்பியுள்ளார்.

ஈரானியக் கப்பலொன்று இலங்கையின் பிரத்யேகப் பொருளாதார மண்டலத்திற்குள் தாக்குதலுக்குள்ளானதாகத் தகவல்கள் வருகின்றன. காயமடைந்தவர்கள் காலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நாட்டின் கடல் எல்லைக்குள் இவ்வாறான தாக்குதல் எப்படி நடந்தது? இது புலனாய்வுப் பிரிவின் பலவீனத்தையே காட்டுகிறது.

மத்திய கிழக்கில் போர் பதற்றம் நிலவி வரும் சூழலில், தற்போதைய அரசாங்கம் இரகசியமான முறையில் சில சர்வதேச ஒப்பந்தங்களைச் செய்துள்ளதா? இந்தக் கப்பல் தாக்குதல் அத்தகைய ஒப்பந்தங்களின் விளைவா என்பதை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும். மத்திய கிழக்கு மற்றும் வளைகுடா பிராந்தியங்களில் நிலவும் பதற்றத்தால் இலங்கையின் சுற்றுலாத்துறை, தேயிலை ஏற்றுமதி மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களின் வருமானம் ஆகியவற்றுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டு ள்ளது. இதற்கு முகங்கொடுக்க அரசாங்கத்திடம் முறை யான திட்டம் உள்ளதா?

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான அறிக்கைகளை மறைத்தவர்களைப் பாதுகாப்பதற்காகவே, தற்போது புலனாய்வுப் பிரிவினர் வேட்டையாடப்படுவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார். பயங்கரவாதத்தை ஒழிக்கப் பாடு பட்டவர்களைச் சிறையிலடைப்பதன் மூலம் நாட்டின் பாது காப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

நாட்டின் கௌரவம் மற்றும் பாதுகாப்பு குறித்த நீண்ட காலத் தொலைநோக்குத் திட்டம் அரசாங்கத்திடம் இல்லை' எனச் சுட்டிக்காட்டிய நாமல் ராஜபக்ஷ, குறுகிய கால அரசியல் லாபங்களை விடுத்து நாட்டின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நிலைத்தன்மை குறித்து சிந்திக்குமாறு அரசாங்கத்தைக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை இலங்கை கடற்பரப்பில் மீட்கப்பட்ட ஈரானிய கடற்படைக்குச் சொந்தமான 'IRIS Dena' கப்பலில் இரு ந்து 80 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக இலங்கை பாது காப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த கப்பலில் இருந்து மீட்கப்பட்ட 32 பேருக்கு காலி கராபிட்டிய போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. இந்த தாக்குதலுக்கு அமெ ரிக்கா பொறுப்பேற்றுள்ளது.

அமெரிக்க இராணுவம் நடத்திய தாக்குதலால் இலங்கை கடற்கரையில் ஈரானிய போர்க்கப்பல் மூழ்கடிக்கப்பட்டது, இதன் விளைவாக இலங்கை கடற்படை ஈரானிய மாலுமி களை மீட்கத் தொடங்கியது என்று மூன்று அமெரிக்க அதிகாரிகள் புதன்கிழமை ரொய்ட்டரிடம் தெரிவித்தனர்.

இது இவ்வாறிருக்க யாழ்ப்பாணத்தில் இருந்து கடற்தொழி லுக்கு சென்ற இரு கடற்தொழிலாளர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர். வலி.வடக்கு ஊரணி பகுதியில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை கடற்தொழிலுக்காக படகொன்றில் இரண்டு கடற்தொழிலாளர்கள் கடலுக்கு சென்ற நிலையில் காணாமல் போயிருந்தனர்.

காணாமல் போன இருவரையும் , உறவினர்கள் தேடி வந்த நிலையில் , காணாமல் போன இருவரும் பயணித்த படகு கடலில் பழுதடைந்த நிலையில் இருவரும் கடலில் தத்தளித்த வேளை அவர்களை மீட்ட இந்திய கடற்தொழி லாளர்கள் அவர்களுக்கு உணவளித்து அவர்களை படகு டன் இலங்கை கடற்பரப்புக்கு அழைத்து வந்து விட்டு சென்றனர். அந்நிலையில் மீண்டும் அவர்களின் படகு நீரோட்டத்தில் அடித்து செல்லப்பட்டு இந்திய கரையில் கரையொதுங்கிய நிலையில் இந்திய கடலோர காவல் படை யினரால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# இலங்கை கடற்பரப்புக்குள் நின்ற இரான் கடற்படைக் கப்பல்! 208 பணியாளர்களை பாதுகாப்பாக கரைக்கு கொண்டு வந்த கடற்படை



இலங்கையின் கடற்பரப்பிற்கு அருகில் இருந்த ஈரானிய கடற்படை கப்பலான IRIS Bushehr-இல் பணியாற்றியிருந்த 208 கப்பற் பணியாளர்களையும் இலங்கை கடற்படை பாதுகாப்பாக மீட்டு கரைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை இலங்கை கடற்படை எடுத்தது.

இலங்கை கடற்படையினரின் தகவலின் படி, இலங்கை கடற்பரப்பிற்கு அருகில் ஏற்பட்ட அவசர நிலையைத் தொடர்ந்து குறித்த ஈரானிய கடற்படை கப்பலில் இருந்த அனைத்து 208 பணியாளர்களும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மீட்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, கப்பலில் இருந்த பணியாளர்கள் தற்போது கொழும்பு நோக்கி கரைக்கு கொண்டு வரப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கு தேவையான பாதுகாப்பு மற்றும் உதவி நடவடிக்கைகள் இலங்கை கடற்படையினரால் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், IRIS Bushehr கப்பலை இலங்கை கடற்படை தற்காலிக கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து, அதை திருகோணமலை துறைமுகத்திற்குக் கொண்டு செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நடவடிக்கை பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான காரணங்களை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் தொடர்ந்தும் இடம் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கப்பலில் ஏற்பட்ட அவசர நிலைமை குறித்த விவரங்களை உறுதிப்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.இதேவேளை தாக்குதலுக்குள்ளான ஐரிஸ் டெனா கப்பலிருந்த 90 பேரது சடலங்கள் தொடர்பான பிரேத பரிசோதனைகள் நேற்று வியாழக்கிழமை காலி - கராப்பிட்டிய வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டன.

குறித்த சடலங்களை ஈரானுக்கு அனுப்பி வைக்கும் வரை அவற்றை வைத்திருப்பதற்கான அதிகுளிரூட்டப்பட்ட இரு கொள்கலன்கள் கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அத்தோடு குறித்த தாக்குதலுக்கு உள்ளான கடற்பிராந்தியத்தில் தொடந்தும் கண்காணிப்பு மீட்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அறிவிப்பு!



இலங்கையிலுள்ள அமெரிக்கப் பிரஜைகளுக்காக இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் விசேட அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது. கட்டுநாயக்க விமான நிலையத்தின் நடவடிக்கைகள் வழமை போன்று முன்னெடுக்கப்பட்ட போதிலும், மத்திய கிழக்கு வான்பரப்பு மூடப்பட்டுள்ளதன் காரணமாக உலகளாவிய விமானப் போக்குவரத்து இன்னும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், மத்திய கிழக்கு ஊடாகச் செல்லாத சில வர்த்தக விமான சேவைகளைப் பயன்படுத்த முடியும் எனவும், விமானத் தாமதங்கள் அல்லது ரத்துச் செய்தல்கள் குறித்து அந்தந்த விமான நிறுவனங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கிடையில் இலங்கையிலுள்ள சுற்றுலாப் பயணிகள் மாற்றுப் பயணத் திட்டங்களை வகுப்பதற்கு வாய்ப்பளிக்கும் வகையில், இலங்கை அரசாங்கம் 14 நாட்களுக்கு இலவச விசா நீடிப்பை வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது.

அவசர உதவி தேவைப்படின், அமெரிக்கத் தூதரகத்தின் அமெரிக்கப் பிரஜைகள் சேவைப் பிரிவை 94 11 202 8500) தொடர்பு கொள்ளலாம் எனவும், திங்கள் முதல் வியாழன் வரை வேலை நாட்களில் பிற்பகல் 1.00 மணி முதல் 2.00 மணி வரை இச்சேவை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விமானப் பயணங்கள் தவிர்ந்த ஏனைய விடயங்களுக்கு இலங்கை சுற்றுலாத்துறையின் 1912 என்ற இலக்கத்தைத் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்கால பாதுகாப்பு தொடர்பான மேலதிக தகவல்களுக்கு இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் இணையதளம் மற்றும் உத்தியோகபூர்வ சமூக ஊடகக் கணக்குகளைப் பின்பற்றுமாறு பிரஜைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை துபாயில் சிக்கியிருந்த பிரெஞ்சு குடிமக்களை பரிஸுக்கு மீட்டுக் கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்ட Air France AF4190 விமானம், ஏவுகணை தாக்குதல்கள் காரணமாக மீண்டும் திரும்பி சென்றதாக கூறப்படுகின்றது. இத்தகவலை பிரான்ஸ் போக்குவரத்து அமைச்சர் Philippe Tabarot இதை அறிவித்தார். பாதுகாப்பு நிலைமை மோசமாக இருந்ததால் மீட்பு விமானப் பயணம் நிறுத்தப்பட்டது.




# நலிவுற்றோர் நலம் பேண கை கொடுப்போம் வாரீர்!



உங்கள் அபிமான ஈழநாடு eelanadu.ca பத்திரிகையின்

## 33 வது ஆண்டு விழா

தமிழகத்தின் முன்னணித் திரைப்படப் பாடகரும்
பிரபல கர்நாடக இசைக் கலைஞருமான
**சத்தியப்பிரகாஷ்**
இந்திய - கனேடிய பக்கவாத்தியக்
கலைஞர்களுடன் இணைந்து வழங்கும்

## ஏழிசைக் கீதங்கள்

(பாரதியார் பாடல்கள், தமிழிசைப் பாடல்கள், கர்நாடக இசை கலந்த திரைப்படப் பாடல்கள்)

Saturday MARCH 21 2026
5:30PM

அன்பளிப்பு
VIP
$100
$50

சிறப்புச் சொற்பொழிவு: ஈழத்திலிருந்து வருகைதரும்
**தமிழருவி சிவகுமாரன்**
**தாயகத்து வேர்களும் கனடிய விழுதுகளும்**



ARMENIAN COMMUNITY CENTRE
50 HALLCROWN PLACE, TORONTO
(VICTORIAL PARK & CONSUMER ROAD)

விழா சரியாக 5.30 மணிக்கு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும்.
தயவு செய்து நுழைவுச் சீட்டுடன் மண்டபத்திற்கு வரவும். நேரடி ஒளி-ஒலிபரப்புக்கு அனுமதி இல்லை.


AJITH SABARATNAM INSURANCE & INVESTMENTS INC.
Ajith Sabaratnam
647.401.5800
647.594.9573
email:ajithsaba@gmail.com
10 THORNMOUNT DR SCARBOROUGH, ONTARIO M1B 3J4 Tel: 416.439.2800

Cash Point PAWN BROKERS
$1000 $20/month
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000

VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com

Vijaya Jewellery
3341, Markham Road, Unit 127 Scarborough ON m1x0A5
+1 (437) 833-3197, (647) 329-3062
Email:yugan14@hotmail.com

நியூ ரங்கனாஸ் தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர், டுபாய் தங்க நகைகளை
கோடைகால சிறப்புத் தள்ளுபடி விலையில் கொள்வனவு செய்ய அரிய சந்தர்ப்பம்.
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles,Yellow Building,6055 Unit C-102 Scarbrough,ON M1X 0A7 - Canada. 647 702 2159

உங்கள் அனைத்து விதமான சட்ட ஆலோசனைகளுக்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்!
SASITHARAN LAW PROFESSIONAL CORPORATION
T: 416-949-0404
F: 416-948-0303
Vivekananthan Sasitharan - Rajabalini Sasitharan
Barristers, Solicitors & Notaries Public
10 Milner Business Court, Suite # 709, Scarborough Ontario, M1B 3C6

கனகாம்பிகை அடகுமாடம்
தங்க நகைக் கடன் மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்படும்
தொடர்புகட்கு 416-754-7198
At Woodside Square Mall, 1571 SANDHURST CIRCEL #159D (Finch & McCowan) Scarborough, ON
2613 EGLINTON AVE, (Brimley & Eglinton) Toronto, ON

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Outstanding Agent for Outstanding Results.
Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com
RE/MAX

PACELAW
Over 40 years of putting our clients first
Poorany Sornabala BD Specialist
Desmond Sornabala Paralegal
Call Us Today
647-968-7059
Get In Touch
191 The West Mall Suite 1100 Toronto ON, M9C 5K8
psornabala@pacelawfirm.com
www.pacelawfirm.com
Personal Injury
Corporate & Commercial
Immigration
Family Law
Real Estate
Wills and Estates
Employment Law
Civil Litigation
Criminal Defence Law
Business Facilitation Services

AJAX CREMATORIUM & VISITATION CENTRE
CALL: DHARMA
Licenced Funeral Pre-Planner
647-713-6049

Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
1.5% 2%
416-757-0034 · 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough. ammapawnbroker@gmail.com

CSC Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor

N.K.S DRAPERY & BLINDS FABRIC
Custom Made Vertical Blinds • Venetian Blinds • Draperies • Curtain • Shutters • Roller Blind
Contact: Ketha
416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:info@nksdrapery.com Web:www.nksdrapery.com

MORTGAGE LOAN
ALMOST ALL SERVICES AVAILABLE
J.R.B UNIVERSAL INC.
Best Rate Mortgage in Town, Bad Credit New Immigrants bankruptcy, 0% Down Payment, 1st, 2nd & 3rd Mortgage upto 100%
Loans, Mortgages, Insurances, RESP Real Estate, Credit Counseling Accounting and Tax Services
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164

FUNERAL ARRANGEMENTS OF YOUR LOVED ONES
Chapel Ridge FUNERAL HOME CREMATION CENTRE
Funeral Director
S. Christeen
416-258-6759

INCOME TAX SERVICE
PERSONAL, SMALL BUSINESS, UNINCORPORATED AND INCORPORATED TAXES, TAXES AND ASSOCIATED SERVICES
THANAM KANAGARATNAM
Tax Analyst
416.298.6718
1080 Tabscott Rd, Unit 5
Scarborough, ON M1X 1E7

Century 21 Innovative Realty Inc.
Jude GNANENDRAN
Sales Representative
416-827-2347 Direct
jude.gnanendran@century21.ca
www.century21jude.com
2250 Markham Road, Unit 3, Toronto ON M1B 2W4
Office: 416-298-8383 Fax: 416-298-8303

Chapel Ridge Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

நந்தா NANTHA CATERS
Catering, Bakery & Take Out
Brimley & Steeles - 4915 Steeles Ave.E | Warden & Finch - 3268 Finch Ave.E
Kipling & Steeles - 5010 Steeles Ave. |
Call 416 NANTHA 1 • 416 626 8421

வீடு வாங்க, விற்க அல்லது அது சம்பந்தமான விடயங்கள் அறிய இலவச ஆலோசனைகளுக்கு
உங்கள் நண்பன் ஆனந் தர்மலிங்கம்
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
1265 Morningside Ave, Suite 203 Toronto ON M1B 3V9
ANANTH Tharmalingam
Sales Representative
416.939.9525

Santha Panchalingam
சாந்தா பஞ்சலிங்கம்
Board of Director
பணிப்பாளர்
416-200-5470
santha@tamilcentre.ca
www.tamilcentre.ca

விழா சிறப்புற வாழ்த்துகிறோம்
Netwyn
www.netwyn.com
Kula Sellathurai
CEO
10 Thornmount Drive
Scarborough, ON M1B 3J4
D: 416.902.9462
O: 416.906.1414
kula@netwyn.com

# பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்ய இலங்கை அரசு ஆக்கபூர்வமாக செயற்பட வேண்டும்!

ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 61வது கூட்டத்தொடரில், இலங்கை தொடர்பான முக்கிய குழு (பிரித்தானியா, கனடா, மலாவி, மொண்டெனேக்ரோ மற்றும் வடக்கு மெசிடோனியா) சார்பில் விசேட அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. இதனை பிரித்தானியாவின் மனித உரிமைகள் தூதுவர் எலினோர் சாண்டர்ஸ் முன்வைத்தார்.

இலங்கையில் நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தை (PTA) நீக்க வேண்டும் அல்லது அதனைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை இலங்கை தொடர்பான முக்கிய குழு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள 'பயங்கரவாதத்திலிருந்து அரசை பாதுகாப்புச் சட்டம்' முந்தைய சட்டத்தை விடவும் பாரிய கவலைகளைத் தோற்றுவிப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எந்தவொரு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் இலங்கையின் சர்வதேச மனித உரிமைப் பொறுப்புகளுக்கு இணங்க இருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

அதேநேரம், இராணுவத்தின் வசமுள்ள காணிகள் சில விடுவிக்கப்பட்டுள்ள போதிலும், அந்தச் செயல்முறை மிகவும் மந்தகதியில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த கால மோதல்களில் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்குப் பல்வேறு பின்னணிகளைக் கொண்ட சமூகங்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளமையை வரவேற்ற தூதுவர், இது நல்லிணக்கத்திற்கு மிக




அவசியம் எனத் குறிப்பிட்டார்.

நிலைமாறுகால நீதி, இனவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் முக்கியமான மனித உரிமை மீறல் வழக்குகள் குறித்து ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகளை முக்கிய குழு கவனத்தில் கொண்டுள்ளது.

இருப்பினும், களத்தில் அதன் முடிவுகள் இன்னும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளன. சாட்சிகள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள் தொடர்வதாகவும், முக்கிய நிறுவனங்கள் இன்னும் பலவீனமாகவே இருப்பதாகவும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வலுவான மற்றும் சுயாதீனமான உள்நாட்டு நிறுவனங்கள் அவசியம் எனச் சுட்டிக்காட்டிய தூதுவர், திட்டமிடப்பட்டுள்ள சுயாதீன அரச வழக்குதொடுநர் அலுவலகம் வெறும் பேச்சளவில் இன்றிச் செயல்பாட்டுக்கு வர வேண்டும் என வலியுறுத்தினார்.

இறுதியாக மோதல் காலங்களில் இடம்பெற்ற பாலியல் வன்முறைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் (OHCHR) அறிக்கையை ஏற்றுக் கொண்ட முக்கிய குழு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்ய இலங்கை அரசாங்கம் ஆக்கபூர்வமாகச் செயல்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டன.

## மன்னார் ஆயர் கோரிக்கை

பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்குவதில் அரசு மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் அந்தோனிப் பிள்ளை ஞானப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலாக வேறு சட்டங்களை முன் மொழியாது, மக்களின் உணர்வுகளைப் புரிந்து மக்களோடு பயணிக்க அரசு தயாராக இருக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மறைமாவட்ட மக்களுக்கு எழுதிய தவக்கால திருமடலில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.


பெரும்பான்மை வாக்குகளால் ஆட்சி பீடமேறிய இன்றைய அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டிருந்த பல எதிர்பார்ப்புகள், இன்றும் எதிர்பார்ப்பு



களாகவே உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். தமிழ் மக்களைப் பொறுத்த வரை, பல பிரச்சினைகளுக்கு இன்றைய அரசாங் கம் தீர்வுகளைத் தராமல் காலத்தை தாமதித்துச் செல்வது மன வருத்தத்திற்குரியது எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். இந்நிலையில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் மற்றும் தற்போது கடற்றொழில் சமூகம் எதிர்நோக்கும் பாரிய தொழில் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் அதிக அக் கறையோடு விரைந்து செயலாற்ற வேண்டும் என மன்னார் மறைமாவட்டஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப் பிரகாசம் கோரிக்கை விடுத்துள்ளார்.



# அமெரிக்காவின் டெக்சாஸ் துப்பாக்கிச் சூட்டில் தமிழ்மாணவி பலி! கொலையாளியின் உடையில் ஈரானியக் கொடி அல்லாஹ்வின் சொத்து



அமெரிக்காவின் டெக்சாஸ் ஆஸ்டினில் மார்ச் 2, 2026 அன்று பார் ஒன்றில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் செல்வி சவிதா சண்முகசுந்தரம் (21) உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் படித்து வந்த இவர், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மாணவி ஆவார். ஆஸ்டினில் உள்ள ஒரு மதுபான விடுதிக்கு வெளியே நடந்த துப்பாக்கிச் சூட்டில் 21 வயது இந்திய-அமெரிக்க மாணவி உட்பட நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர் 53 வயதான நிடியாகா டியாக்னே என அடையாளம் காணப்பட்டுள்ளார். சந்தேக நபரின் உடையில் ஈரானியக் கொடி வடிவமைப்பும் 'அல்லாஹ்வின் சொத்து' என்ற வாசகங்களும் இருந்தன என்று அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

வார இறுதியில் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையே புதிய மோதல் வெடித்த நிலையில், துப்பாக்கிச் சூடு மற்றும் தற்போது உயிரிழந்த துப்பாக்கிச் சூடு நடத்தியவரின் ஈரானுடனான தொடர்புகள் குறித்து சந்தேகம் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

செல்வி சவிதா சண்முகசுந்தரத்தின் இழப்புக் குறித்து அவரது குடும்பத்தாருக்கு வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை (FeTNA), பேரவையின் உறுப்பினர் அமை ப்புகள் மற்றும் ஆதரவாளர்களின் சார்பாக ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

செல்வி சவிதா மற்றும் அவர்களின் குடும்பத்தினர் சமூகப் பணிகளில் ஆர்வத்துடன் பங்கேற்பவர்கள். குறிப்பாக, FeTNA-வின் உறுப்பினர் அமைப்பான ஆஸ்டின் தமிழ்ச் சங்கத்தில் அவர்கள் தொடர்ந்து தன்னார்வத் தொண்டாற்றி வருகிறார்கள். இளம் தலைவராகவும் சாதனையாளராகவும் திகழ்ந்த செல்வி சவிதா, அமெரிக்காவின் சிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் ஒன்றான The University of Texas at Austin-இல் இரட்டை இளங்கலைப் பட்டப்படிப்புகளை பயின்று, கல்வியில் சிறப்புடன் முன்னேறி வந்தார் எனவும் தெரிவித்துள்ளது.

# இலங்கையர்கள் 6 பேரை நாடு கடத்திய அமெரிக்கா!

அமெரிக்காவில் தங்கியிருப்பதற்கான விசா இருந்த போதிலும் நிரந்தர வதிவிட அனுமதிப்பத்திரமான 'கிரீன் கார்ட்' இல்லாத காரணத்தினால், அங்கு தங்கியிருந்த 06 இலங்கையர்கள் அந்த நாட்டு அரசினால் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவிற்குச் சொந்தமான OAE-4013 என்ற விசேட விமானம் மூலம் இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டனர். இந்த விசேட விமானத்தில் இலங்கையர்கள் 6 பேருடன் சேர்த்து, அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 162 பேர் இருந்துள்ளனர்.

இவர்கள் கட்டுநாயக்கவில் இறக்கப்பட்டதன் பின்னர் குறித்த விமானம் நேபாளத்தின் காத்மண்டு நகரை நோக்கிப் பயணித்துள்ளது. திருப்பி அனுப்பப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, நெடுந்தீவு மற்றும் பமுணுகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆண்கள் என தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதியின் கடுமையான குடியேற்றக் கொள்கைகளின் கீழ் இந்த நாடு கடத்தல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாடு கடத்தப்பட்டவர்களில் ஒருவரது மனைவியும் அவர் அண்மையில் பிரசவித்த குழந்தையும் இன்னமும் அமெரிக்காவிலேயே தங்கியிருப்பதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு குடியகல்வு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட 6 பேரும் பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அங்கு மேற்கொள்ளப்பட்ட விரிவான விசாரணைகளின் போது, இவர்கள் இலங்கையில் எவ்விதமான குற்றச் செயல்களுடனும் தொடர்புபடாதவர்கள் என்பது உறுதி செய்யப்பட்டது. அதன் பின்னர், அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# இனப்பிரச்சனைக்குச் சரியானதொரு தீர்வை உருவாக்க வேண்டும் -ரில்வின்

இனப்பிரச்சினைக்கு நிலையானதொரு மாற்றுத் தீர்வைக் கண்டுபிடிக்கும் வரை மாகாண சபை முறைமை நீக்கப்படமாட்டாது என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார். மேலும் கூறுகையில்

இனப்பிரச்சினைக்குச் சரியானதொரு தீர்வை உருவாக்க வேண்டும் என்பதை எமது தேர்தல் அறிக்கையிலேயே நாம் உறுதியளித்திருந்தோம். மாகாண சபைகள் அந்த நோக்கத்தை முழுமையாக நிறைவேற்ற உதவவில்லை என்பது எமது கருத்து.

எவ்வாறாயினும் ஒரு சிறந்த மாற்றுத் தீர்வைத் தேடும் வரை மாகாண சபைகள் அவ்வாறே இருக்கும். முறையான மாற்றுத் தீர்வொன்றை எட்டாமல் அவற்றை நாம் அகற்றப்போவதில்லை.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டச் சிக்கல் காரணமாகவே மாகாண சபைகளை தற்போது இயக்க முடியாத சூழல் காணப்படுகிறது. இந்த ஆண்டில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த நாம் திட்டமிட்டிருந்த போதிலும் டித்வா' புயல் அனர்த்த காரணங்களால் அது சாத்தியப்படவில்லை.

மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் அதனை எவ்வாறு நடத்துவது என்பதே தற்போதைய கேள்வி. தேர்தலை நடத்துவதற்குத் தடையாக உள்ள சட்டச் சிக்கல்கள் நீக்கப்பட வேண்டும். அத்துடன் எல்லை நிர்ணயம் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. எல்லை நிர்ணய நடவடிக்கைகளை முன்னெடுப்பதா இல்லையா என்பது குறித்து நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது.

இது குறித்து விரிவாக ஆராய்வதற்காக தற்போது ஒரு விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றார்.

# அரசாங்கத்தின் செல்வாக்கு?

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் செல்வாக்கு அதிகரித்திருப்பதாக ஒரு சுயாதீன கருத்துக் கணிப்பு வெளியாகியிருக்கின்றது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் செல்வாக்கு படிப்படியாக குறைவடைந்த செல்கின்றது என்றவாறான எதிரணி அபிப்பிராயங்களின் மத்தியில்தான், இவ்வாறான கணிப்பு வெளியாகியிருக்கின்றது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி பிரதானமாக வெற்றி பெற்ற போதிலும் கூட வாக்குகளின் அடிப்படையில் பின்னடைவை சந்தித்திருந்தது. இவ்வாறானதொரு பின்னணியில் அரசாங்கம் மாகாணசபைத் தேர்தலை நடத்தும் எண்ணமின்றி இருப்பதாக எதிரணி கூற முற்பட்டனர்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் புதிய கருத்துக் கணிப்பு அரசாங்கத்தின் செல்வாக்கு அதிகரிப்பதாக கூறுவது முக்கியமானது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை பொறுத்தவரையில் நாட்டின் பொருளாதார நிலைமையை சரி செய்வதில் பின்னவுடைகளை சந்திக்கவில்லை எதிர்பார்த்ததை விடவும் முன்னோக்கியே செல்கின்றது. நாடுகளை எதிர்கொள்ளும் வெளிவிவகார அணுகுமுறையிலும் இதுவரையில் பெரியளவில் பின்னடைவுகளை சந்திக்கவில்லை - ஒப்பீட்டடிப்படையில் முன்னைய ஆட்சியாளர்களின் தவறுகளிலிருந்து கற்றுக் கொண்டிருப்பதாகவே தெரிகின்றது.

அதேவேளை ஜனாதிபதி அநுரகுமார மக்களால் விரும்பப்படும் ஒரு தலைவராக இருக்கின்றார். இதுவே தேசிய மக்கள் சக்தியின் மிகப் பெரிய பலமாக இருக்கின்றது. மகிந்த ராஜபக்ஷ மக்களால் விரும்பப்பட்ட ஒரு தென்னிலங்கை தலைவராக இருந்தார், ஆனால் அது சிங்கள மக்களுக்கு மட்டுப்பட்டதாகவே இருந்தது மேலும் மகிந்தவும் ஏனைய மக்களை அரவணைத்துச் செல்லும் நோக்கம் கொண்ட அரசியல்வாதியாக இருக்கவில்லை.

ஆனால் அநுரகுமார திஸாநாயக்க இந்த இடத்தில் முற்றிலும் மாறுபட்ட முகத்தோடு இருக்கின்றார். இந்த ஆண்டு சட்டத்துக்கு முன்னால் அனைவரும் சமம் என்பதை நிரூபிக்கும் ஆண்டாக இருக்கும் என்று கூறுகின்றார். ஊழலுக்கு எதிராக அவர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் மக்களால் ஆதரிக்கப்படுகின்றன. கட்சியின் செல்வாக்கு அதிகரிப்பதற்கு இதுவும் ஒரு முக்கியமான காரணம்.

சாதாரண மக்களுக்கு நெருக்கமான ஒரு அரசாங்கமாக தங்களை நிரூபிப்பதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வெற்றி பெற்றிருப்பதும் அவர்களின் ஆதரவுக்கு இன்னொரு அதி முக்கியமான காரணம். மற்றும்படி எதிர்க்கட்சிகள் பேசுகின்ற எதிர்ப்பு வாதங்களை சாதாரண மக்கள் பொருப்படுத்துவதாகவும் தெரியவில்லை.

தமிழ் நிலையில் மாகாண சபைத் தேர்தல் என்னும் ஒரு விடயத்தை தவிர வேறு எந்தவொரு விடயத்திலும் பிரதான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கக்கூடிய நிலையும் இருப்பதாகத் தெரியவில்லை - தமிழ் மக்களுக்கான அதிகாரப்பகிர்வு விடயத்தில் குற்றம் சாட்ட பெரிதாக ஒன்றுமில்லை. ஏனெனில் தமிழ் மக்களின் ஆதரவுடன் வெற்றி பெற்ற மைத்திரியின் காலத்திலும் அது நடக்கவில்லை. அந்த அடிப்படையில் உச்சமான அரசியல் தீர்வு ஒன்றை எந்தவொரு தென்னிலங்கை அரசியல் கட்சியிடமும் எதிர்பார்க்க முடியாது

# புதிய அறிவியல் மைய வடிவமைப்பை வெளியிட்ட ஒன்ராறியோ அரசு

400,000 சதுர அடி பரப்பளவில், அதிநவீன வசதிகளுடன் கூடிய புதிய ஒன்ராறியோ அறிவியல் மையக் கட்டுமானத்திற்கான ஒப்பந்தத்தை ஒன்ராறியோ அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதனை 2029ஆம் ஆண்டுக்குள் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புது மெருகூட்டப்பட்ட 'ஒன்ராறியோ பிளேஸ்'இன் முக்கிய அங்கமாக, ஊடாடும் (Interactive) கண்காட்சிகள், இணைக்கப்பட்ட வளாகங்கள் மற்றும் மறுவடிவமைக்கப்பட்ட திரைக்கூரை ஆகியவற்றைக் கொண்டு முன்னரை விடவும் அதிகமான நிகழ்ச்சிகளை உள்ளடக்கியதாக இது அமையவுள்ளது.

மிகப்பெரும் அளவிலான இம்மறுசீரமைப்புத் திட்டம் 5,700 வேலைகளை உருவாக்குவதுடன், கட்டுமானக் கட்டத்தில் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 420 மில்லியன் டொலர் வரையிலான பங்களிப்பை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்கார்பரோ மற்றும் ரொறன்ரோ வாசிகளுக்கு, ஏரிக்கரையை அண்டிய இவ்விடமாற்றம், புதிய 'ஒன்ராறியோ வழித்தடம்' (Ontario Line) மற்றும் கண்காட்சி நிலையத்தில் மேம்படுத்தப்பட்ட 'கோ' (GO) போக்குவரத்து இணைப்புகள் மூலம் அணுகலை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இப்புதிய வளாகத்தின் நீண்டகால தொலைநோக்குப் பார்வை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள், 'ஒன்ராறியோ மக்கள் நீண்டகால நினைவுகளையும் வாழ்நாள் முழுமைக்கும் நீடிக்கும் அனுபவங்களையும் பெறக்கூடிய ஒரு இடத்தை நாம் உருவாக்கி வருகிறோம்' என்றார்.

ஏரிக்கரைப் பகுதியை குடும்பங்கள் பொழுதுபோக்க ஏற்ற முதன்மையான இடமாக மாற்றுவதன் மூலம், மாநிலம் குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதுடன், சுற்றுலாவை ஊக்குவித்து ஆண்டு தோறும் ஆறு மில்லியன் பார்வையாளர்களை ஈர்க்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் 3வது பிரதிவாதியாக சுரேஷ் சலே



தற்போது தடுப்புக்காவலில் உள்ள அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பிரதானி சுரேஷ் சலே, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக கோட்டை நீதவான் நீதிமன்றில் நிலுவையில் உள்ள வழக்கின் மூன்றாவது சந்தேக நபராக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் பெயரிடப்பட்டுள்ளார்.

அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பிரதானியும், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரலுமான சுரேஷ் சலே, கடந்த பெப்ரவரி 25ஆம் திகதி பேலிய கொடையில் வைத்து கைது செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் தற்காலிக ஏற்பாடுகளின் கீழ் சுரேஷ் சலேயை 90 நாட்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சரிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அனுமதி பெற்றுக்கொண்டது.

இந்த சூழலில் போதுமான ஆதாரங்கள் இன்றி தனது கட்சிக்காரர் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள உத்தரவை மேல் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்துவதற்காக, இது தொடர்பான வழக்குக் கோப்புகளின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை வழங்குமாறு சுரேஷ் சலேயின் சட்டத்தரணிகள் கோட்டை நீதவான் நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

தனது கட்சிக்காரரைச் சந்திப்பதற்கு மேலதிக ஒரு நாளை ஒதுக்கித் தருமாறும், அவருக்கு வீட்டிலிருந்து உணவு கொண்டு வருவதற்கு அனுமதி அளிக்குமாறும் சட்டத்தரணிகள் கோரினர். வழக்குக் கோப்புகளின் பிரதிகளை வழங்க நீதவான் உத்தரவிட்ட போதிலும், ஏனைய கோரிக்கைகளை நிராகரித்தார்.

சுரேஷ் சலேயைக் கைது செய்து தடுப்புக்காவலில் வைத்திருப்பது குறித்து குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அதுவரை நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்காததே இதற்குக் காரணமாக அமைந்தது. இவ்வாறானதொரு பின்னணியில், சுரேஷ் சலேயைத் தடுப்புக்காவலில் வைத்திருப்பது குறித்து குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கோட்டை நீதவான் நீதிமன்றில் விடயங்களை அறிக்கையிட்டது.

வவுணதீவு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளை திசை திருப்பப்பட்டமை, சாய்ந்தமருது வீட்டில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளுடன் தொடர்புடையதாக கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் நிலுவையில் உள்ள 35882.:.24 இலக்க வழக்கின் மூன்றாவது சந்தேக நபராக சுரேஷ் சலே பெயரிடப்பட்டுள்ளார்.

தற்போது தடுப்புக்காவலில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வரும் சந்தேக நபரை, நீதவான் பொருத்தமான ஒரு நாளில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு வருகை தந்து பார்வையிடுமாறும் திணைக்கள அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதவான், இதற்கான விடயங்களை எழுத்துப் பூர்வமாகப் பதிவு செய்ய உத்தரவிட்டதுடன், விரைவில் அங்கு சென்று சந்தேக நபரைப் பார்வையிடுவதாகவும் தெரிவித்தார்.

## பாலைதீவுக்குச் சென்ற படகு விபத்தில் 2 பேர் பலி!

யாழ்ப்பாணம் குருநகர் இறங்குத்துறையில் இன்று படகு ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளான நிலையில் காணாமல் போன இருவரை தேடும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விபத்துக்குள்ளான குறித்த படகில் பயணித்த நிலையில் மீட்கப்பட்டிருந்தவர்களில் இருவர் உயிரிழந்தனர். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி இதனை உறுதிப்படுத்தினார்.

நீரில் மூழ்கி விபத்துக்குள்ளானவர்களில் 13 பேர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் இரண்டு ஆண்கள் உயிரிழந்தனர், மேலும் மூவர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் (2 பெண்கள் ஒரு ஆண்). மேலும் 8 பேர் சாதாரண நோயாளர் சிகிச்சை அறையில் சிகிச்சை பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டார். பாலைத்தீவு திருவிழாவுக்கு யாத்திரிகர்கள் சென்ற படகு ஒன்றே காலை 6 மணியளவில் விபத்துக்குள்ளானது. குறித்தப் படகில் 25 பேர் பயணித்துள்ள நிலையில் அவர்களில் 23 பேர் இதுவரை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

படகு விபத்துக்கான உண்மையான காரணங்களைக் கண்டறியும் வகையில் கடற்படையினர் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் இணைந்து விரிவான விசாரணைகளை முன்னெடுக்குமாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் பணிப்புரை விடுத்துள்ளார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com




# வெறும் வாய் சப்பும் இனவாதிகளுக்கு சுரேஷ் சாலே நல்ல அவலாகியுள்ளார்!

**கட்டுரையாளர்:- பனங்காட்டான்**

தமிழ் மக்கள் தொடர்பாகவும் அவர்களின் தமிழ் தேசிய செயற்பாடுகள் தொடர்பாகவும் இனவாதம் கக்கி வருபவர்களுக்கு அவ்வப்போது புதிது புதிதாக ஏதோ ஒன்று கிடைத்துவிடும்.



இலங்கையின் அரச புலனாய்வு பணிப்பாளராகவிருந்த சுரேக்ஷ் சாலேயின் கைது இப்போது இவர்களுக்கு ஓர் ஆயுதமாகக் கிடைத்துள்ளது. ராணுவ மேஜர் ஜெனரலாக பதவி வகித்த இவர் கடந்த காலங்களில் முக்கியமாக ராஜபக்சக்களின் ஆட்சிக் காலத்தில் செல்லப்பிள்ளையாக இருந்தவரென கூறப்படுவதுண்டு. ஈஸ்டர் நாளில் கத்தோலிக்க தேவாலயங்களில் சிறப்பு ஆராதனை இடம்பெறும். 2019 ஏப்ரல் 21ம் திகதி ஈஸ்டர் நாளன்று கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய நகரங்களில் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டதில் 269 அப்பாவிப் பொதுமக்களும் 45 வெளிநாட்டவர்களும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. சுமார் 500 பேர் வரை காயமடைந்தனர்.

தேசிய தௌவீத் ஜமாத் என்ற உள்நாட்டு இஸ்லாமிய அமைப்பும் சர்வதேச இஸ்லாமிய அமைப்பும் இதில் சம்பந்தப்பட்டதாக அப்போது கூறப்பட்டது. 2019 மார்ச் 15ம் திகதி கிறீஸ்சேர்ச் பள்ளிவாசல் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் எதிரொலியாக ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டது என்று அப்போதைய பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் றுவான் விஜேவர்த்தன (ரணில் விக்கிரமசிங்கவின் தாய்மாமன் மகன்) அறிவித்திருந்தார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக நீதியும் நேர்மையுமான விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை என்று கத்தோலிக்க திருச்சபை தொடர்ந்து தெரிவித்து வந்தது. கைதாகி தடுப்புக் காவலில் இருக்கும் பிள்ளையானிடம் இது தொடர்பாக விசாரிக்கப்பட்டதாக அரசல் புரசலாக செய்திகள் வந்ததுண்டு. இருப்பினும் எதுவும் நிரூபிக்கப்படவில்லை.

குண்டுத்தாக்குதல் இடம்பெற்று ஏழு வருடங்களுக்கு இரண்டு மாதங்கள் இருக்கும் வேளையில் சுரேஸ் சாலே கைதாகி 90 நாட்கள் விசாரணைக்காக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவர் மீது இன்னும் குற்றப்பத்திரிகை தாக்கலாகவில்லை. இப்போதைக்கு இவர் சந்தேக நபர் மட்டுமே. எவர் ஒருவரையும் விசாரணைக்காக அழைக்கவும் கைது செய்யவும் நீதிமன்ற உத்தரவு பெற்று தடுத்து வைத்திருக்கவும் சட்டத்தில் இடமுண்டு. பயங்கரவாத தடைச்சட்டம் இப்போதும் இருப்பதால் இவ்விடயங்களில் கால நீடிப்புக்கும் இடமுண்டு.

இதெல்லாம் நன்கறிந்த, இவ்விடயங்களில் நேரடி அனுபவமுள்ள முன்னாள் எம்.பிக்களும் முன்னாள் அமைச்சர்களுமான சிலர், சுரேஸ் சாலேக்காக குரல் கொடுப்பதாகக் காட்டிக் கொண்டு வழமையான இனவாத விசத்தை கக்க ஆரம்பித்துள்ளனர். கோதபாயவின் தனிப்பட்ட வழக்கறிஞராக இருந்து அவரது ஜனாதிபதி காலத்தில் நீதி அமைச்சராக நியமனம் பெற்ற அலி சப்ரியே முதலில் குரல் கொடுத்தவர். தமது முன்னாள் எஜமான் கோதபாய கைது செய்யப்படலாம் என்ற அச்ச உணர்வு இவரது முதல் குரலுக்கு காரணமாக இருக்கலாம்.

அடுத்துக் குரல் கொடுத்தவர்கள் மூவர். முன்னாள் அமைச்சர்களான உதய கம்மன்பில, விமல் வீரவன்ச, சரத் வீரசேகர ஆகியோர். ராஜபக்சக்கள் குடும்பத்தோடு இரண்டறக் கலந்திருந்த முதல் இருவரும் ஏதோ காரணத்தால் கோதபாயவுடன் முரண்பட்டு அவரிடமிருந்து பிரிந்து சென்ற முக்கியமானவர்கள். கோதபாய துரத்தப்பட்ட போதும் தப்பியோடிய போதும் ஜனாதிபதி பதவியை துறந்த போது அதனைப் பார்த்து ரசித்த இவர்கள் இப்போது சுரேஸ் சாலேக்காக குரல் கொடுப்பதற்கு வேறு காரணங்கள் உண்டென்று விடயம் அறிந்தவர்கள் சொல்கிறார்கள்.

அடுத்தவர் சரத் வீரசேகர. முன்னாள் கடற்படை அதிகாரி. போர்க்காலத்தில் கடல் வலயப் பாதுகாப்பில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி விடுதலைப் புலிகளை அழிப்பதில் முன்னின்றவர். கோதபாயவின் ஆலோசனைக் குழுவான வியத்மகவில் முக்கியமாகவிருந்தவர். இந்த மூவர்களோடு இன்னொரு முன்னாள் அமைச்சரான எஸ்.பி.திஸநாயக்கவும் இறுதியாக இணைந்துள்ளார். இவர் முன்வைத்துள்ள வாதம் சுரேஸ் சாலேயின் கைதினால் இலங்கையின் தேசிய பாதுகாப்பு வீழ்ச்சியடையும் அபாயம் இருக்கிறதென்பது. இந்தக் கைதினால் அநுர அரசை ஒரு சுனாமி சுற்றியடிக்கப் போகிறதென்றும் எச்சரித்துள்ளார். எஸ்.பி.திஸநாயக்க தவிர்ந்த மற்றைய மூவரும் எதற்கெடுத்தாலும் கூச்சல் போடுவதில் ஒத்த கருத்துடையவர்கள். நாமல் ராஜபக்ச சில நாட்களுக்கு முன்னர் பிரித்தானிய பல்கலைக்கழகங்கள் இரண்டில் உரை நிகழ்த்துவதற்கு அழைக்கப்பட்டவர்.

இப் பல்கலைக்கழகங்களின் தமிழ் மாணவர்களும் பிரித்தானியாவிலுள்ள தமிழர் அமைப்புகளும் ராஜபக்சக்களின் ஆட்சிக்கால படுகொலைகளையும் மனித உரிமை மீறல்களையும் வெளிநாட்டு விசாரணைப் பொறிமுறையை மறுத்ததையும் சுட்டிக் காட்டி நாமல் ராஜபக்சவின் உரையை நிறுத்தக் கோரினர். அவ்வாறே அவை நிறுத்தப்பட்டன. 2010ம் ஆண்டில் நாமலின் தந்தையான மகிந்த ராஜபக்சவும் பிரித்தானியாவிலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் ஆற்றவிருந்த உரை தமிழ் மக்களின் கடுமையான எதிர்ப்பினால் ரத்துச் செய்யப்பட்டதை மறந்துவிட முடியாது.

நாமல் ராஜபக்சவின் உரை நிறுத்தப்பட்டதை விடுதலைப் புலிகளை ராஜபக்சக்கள் ஒழித்துக் கட்டியதன் எதிரொலி என உதய கம்மன்பில, விமல் வீரவன்ச, சரத் வீரசேகர ஆகியோர் உடனடியாக கருத்துத் தெரிவித்தனர். விடுதலைப் புலிகளை நிர்மூலமாக்கிய ராணுவத்தைக் காட்டிக் கொடுப்பதா என்ற கேள்வியும் இவர்கள் கருத்தில் முதன்மை பெற்றது. புலம்பெயர்ந்துள்ள தமிழ் சமூகத்தினரை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகவா இவ்வாறான தடைகள் மேற்கொள்ளப் படுகின்றன என்ற குற்றச்சாட்டும் இவர்களுடையது. கடந்த பொதுத்தேர்தலின் போது தங்களின் சிங்கள மக்களாலேயே நிராகரிக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்ட இந்த இனவாதிகள், விடுதலைப் புலிகள் - புலம்பெயர் தமிழர் என்ற பெயர்களை எடுத்து சிங்களவர்களிடையேயுள்ள இனவாதிகளை உசுப்பேத்தி மீண்டும் இனஅழிப்புகளை ஆரம்பித்து அதில் குளிர்காய முனைவது தெரிகிறது.

அநுர குமர திஸ்ஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானது எனப் படம் காட்டி, புலிகளை ஆதரிக்கும் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் பக்கமே இன்றைய ஆட்சி செயற்படுகிறது எனவும் காட்டுவதற்கு படாத பாடு படுகின்றனர். சுரேஸ் சாலேயின் கைது ராஜபக்சக்களை கொஞ்சம் ஆட்டம் காண வைத்துள்ளது என்பதை கொழும்பிலிருந்து வரும் ஊடகங்களின் ஊடாக அறிய முடிகிறது. இவ்விடயம் தொடர்பாக இதுவரை எந்தவொரு அறிக்கையையும் ராஜபக்சக்களோ அல்லது அவர்களின் பொதுஜன பெரமுனவோ தெரிவிக்கவில்லை. உதய கம்மன்பில, விமல் வீரவன்ச, சரத் வீரசேகர ஆகியோரின் உளறல்களால் தங்களுக்கு மேலும் நெருக்கடிகள் ஏற்படலாமோ என்ற அச்சம் ராஜபக்சக்களிடம் காணப்படுகிறது. கடந்த பொதுத்தேர்தலில் தோல்வியடைந்ததை அடுத்து தாம் அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதாக அப்போது அறிவித்த முன்னாள் அமைச்சர் அலி சப்ரி, எதற்காக சுரேஸ் சாலே கைது செய்யப்பட்ட விடயத்தில் அவசரப் பட்டு கருத்துக் கூறினார் என்ற கேள்வியும் பெரமுனகாரரிடம் எழுந்து ள்ளது.

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் தரப்பிலிருந்து வந்திருக்கும் கோரிக்கை நியாயமானது. இது தொடர்பாக தற்போது முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு எவரும் முட்டுக்கட்டை போடவோ இடையூறு விளைவிக்கவோ வேண்டாமென்று கத்தோலிக்க திருச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (கத்தோலிக்க திருச்சபை இங்கு சுட்டிக் காட்டுவது அந்த மூவரை நோக்கியே என்பதை பெயர் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதில்லை).

ஈஸ்டர் தாக்குதல் திட்டமிட்ட மனிதப் படுகொலை எனப்பார்க்கும் கத்தோலிக்க திருச்சபை, சுரேஸ் சாலே கைது தொடர்பாக தேவையற்ற வியாக்கியானங்களை நிராகரிக்கிறது. இதனுடைய உண்மை கண்டறியப்பட வேண்டுமெனவும் கோருகிறது.

ஆரம்பிக்கப்பட்டிருக்கும் விசாரணையை குழப்ப முயற்சிப்பதானது இத்தாக்குதலில் உயிரிழந்த மற்றும் அங்கவீனமுற்ற பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் பாரிய அநீதியாகும். மக்கள் அனைவரும் பொறுமையுடன் காத்திருந்து உண்மைகள் வெளிவர ஒத்துழைக்க வேண்டும். குற்றப் புலனாய்வுத் திணைக்களம் முன்னெடுக்கும் சுதந்திரமான விசாரணை இது. எனவே இதனை அரசியல் மயமாக்காமல் விசாரணைகள் அதன் போக்கில் முன்னெடுக்க இடமளிக்க வேண்டும். மக்கள் அனைவரும் பொறுமையுடன் காத்திருந்து உண்மைகள் வெளிவர ஒத்துழைக்க வேண்டுமென்று திருச்சபையின் வேண்டுகோள் சுட்டிக்காட்டியுள்ளது.

உண்மையைக் கண்டறியவும் நீதியான விசாரணைக்கும் ஏழாண்டுகள் காத்திருந்த பாதிப்புக்குள்ளான கத்தோலிக்க சமூகம் சுயாதீனமான குற்றப் புலனாய்வுத்துறையினரின் விசாரணையில் நம்பிக்கை வைத்திருப்பதை இந்த அறிக்கையினூடாக கண்டறிய முடிகிறது.

உண்மை கண்டு பிடிக்கப்படாதிருக்க வேண்டுமென்ற நோக்குடன் குறுகிய அரசியல் பார்வையிலும் இனவாத நோக்கிலும் தம்மிஸ்டப்படி அறிக்கை விடும் அரசியல்வாதிகள் கத்தோலிக்க திருச்சபையின் வேண்டுகோளை ஏற்று புலனாய்வுத்துறை விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டியது அவசியம்.

இதனைப் புரிந்து கொள்ளாது எதற்கெடுத்தாலும் எடுத்த எடுப்பில் விடுதலைப் புலிகளையும் புலம்பெயர் தமிழ் மக்களையும் இனவாதத்துக்குள் வம்புக்கிழுப்பவர்களைப் பற்றி என்ன சொல்லலாம். நாய்க்கு எங்கு காயம் ஏற்பட்டாலும் அது கால்களைத் தூக்கிக் கொண்டே ஊளையிடும். இனவாத அரசியலையே கனவிலும் கொள்ளும் சிலர், புலிகள் - புலம்பெயர் தமிழர் என்று கூச்சலிட்டுக் கொண்டேயிருப்பார்கள். இது அவர்களுக்கு தீரா வியாதி.

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

21 பெப்ரவரி 2026 முதல் 28 பெப்ரவரி 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பேரின்பராணி தவரத்தினம்

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பேரின்பராணி தவரத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவுநாள் 02 மார்ச் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லம் செஞ்சோலை இல்லம் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பேரின்பராணி தவரத்தினம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து மூன்று இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி பத்மாவதி துரைச்சாமி

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப்பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி துரைச்சாமி அவர்களது 31ம்நாள் நினைவுநாள் 06 மார்ச் 2026 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லம் செஞ்சோலை இல்லம் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பத்மாவதி துரைச்சாமி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து மூன்று இல்லக் குழந்தைகளும் ஈழநாடுவாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி துஷியந்தி நவநாதன்

யாழ்.கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 04 மார்ச் 2026 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி, செஞ்சோலை ஆகிய மூன்று இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள் திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து மூன்று இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3ம் மாத நினைவஞ்சலி



### திருமதி பிருந்தா இரத்தினவடிவேல்

மூளாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பிருந்தா இரத்தினவடிவேல் அவர்களது மூன்றாம் மாத நினைவு நாள் 23 பெப் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 24 பெப் 2026 செவ்வாய்க்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பிருந்தா இரத்தினவடிவேல் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம்

வீரபத்திரர் கோவிலடி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நோர்த்யோர்க் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களின் ஏழாவது ஆண்டு நினைவு தினம் 05 மார்ச் 2026 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 38வது ஆண்டு நினைவஞ்சலி



### சங்கீதபூஷணம் இசை ஆசிரியர் திரு நாகலிங்கம் சண்முகலிங்கம்

புங்குடுதீவைச் சேர்ந்த சங்கீதபூஷணம், இசை ஆசிரியர் திரு நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களது 38வது ஆண்டு நினைவு நாள் 07 மார்ச் 2026 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




23 பெப் 2026 திங்கட்கிழமை மூளாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பிருந்தா இரத்தினவடிவேல் அவர்களது மூன்றாவது மாத நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 24 பெப் 2026 செவ்வாய்க்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



26 பெப் 2026 வியாழக்கிழமை யாழ்.அத்தியடியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா முத்துலிங்கம் அவர்களது 29வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



26 பெப் 2026 வியாழக்கிழமை மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு விஸ்வலிங்கம் சுப்பிரமணியம் அவர்களது 9வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



26 பெப் 2026 வியாழக்கிழமை அனலைதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பொன்னம்பலம் விசுவலிங்கம் அவர்களது முதலாவது ஆண்டுத் திதியாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



27 பெப் 2026 வெள்ளிக்கிழமை நாவலர்மடம் நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி தனபாலசிங்கம் அவர்களது 14வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



02 மார்ச் 2026 திங்கட்கிழமை கோப்பாயைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பேரின்பராணி தவரத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



02 மார்ச் 2026 திங்கட்கிழமை கோப்பாயைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பேரின்பராணி தவரத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



02 மார்ச் 2026 திங்கட்கிழமை கோப்பாயைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பேரின்பராணி தவரத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



04 மார்ச் 2026 புதன்கிழமை கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



04 மார்ச் 2026 புதன்கிழமை கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



04 மார்ச் 2026 புதன்கிழமை கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



05 மார்ச் 2026 வியாழக்கிழமை வீரபத்திரர் கோவிலடி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நோர்த்யோர்க் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



06 மார்ச் 2026 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி துரைச்சாமி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



06 மார்ச் 2026 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி துரைச்சாமி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



06 மார்ச் 2026 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி துரைச்சாமி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

# ஈரான் மீதான தாக்குதல்! ஒட்டவா வாழ் ஈரானிய மக்கள் மத்தியில் உள்ள உணர்வுகள் என்ன?



ஈரானில் நிலவும் ஒடுக்குமுறை மற்றும் பொருளாதாரச் சீர்கேடு காரணமாக ஓராண்டுக்கு முன்பு கனடாவிற்குக் குடிபெயர்ந்த ஷிரின் மொர்தசாவி இந்தத் தாக்குதல் செய்தியைக் கேட்டு 'மிதமான நம்பிக்கை' அடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். இறுதியாக ஏதோ ஒன்று நடக்கிறது, இதன் மூலம் ஈரான் மக்கள் விடுதலையடைவார்கள் என்று அவர் கூறியுள்ளார்.

பல தசாப்தங்களாக நீடிக்கும் சர்வாதிகார ஆட்சிக்கு இந்தத் தாக்குதல்கள் ஒரு முற்றுப்புள்ளியாக அமையும் என அவர் நம்புகிறார். ஈரானில் கடந்த இரண்டு மாதங்களாக மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடி வரும் நிலையில், அரசாங்கம் இணைய முடக்கம் மற்றும் வன்முறை மூலம் அந்தப் போராட்டங்களை ஒடுக்கி வருகிறது.

எங்கள் உரிமைகளுக்காகப் போராடும் போது அவர்கள் எங்களைக் கொல்கிறார்கள் இத்தகைய சூழலில் வெளியிலிருந்து யாராவது உதவிக்கு வருவது அவசியமாகிறது என ஷிரின் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் ஒரு இராணுவ நடவடிக்கை என்பதைத் தாண்டி, ஈரானின் ஒரு இருண்ட வரலாற்றின் முடிவாக இருக்கும் என அவர் கருதுகிறார்.

கனடாவிலுள்ள ஈரான் ஜனநாயக சங்கத்தின்' இயக்குநர் ஷஹ்ராம் கோலெஸ்தானே இந்தத் தாக்குதல் எதிர்பார்க்கப்பட்ட ஒன்று தான் எனக் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற மலை (Parliament Hill) அருகே திரண்டிருந்த ஈரானிய கனடியர்களிடையே பேசிய அவர், ஈரானில் நடைபெற்று வரும் போராட்டங்களே மக்கள் மாற்றத்தை விரும்புவதற்கான சான்று என்று சுட்டிக் காட்டினார். அதேவேளை, சமூகத்தின் மற்றொரு தரப்பினர் இந்தத் தாக்குதல்கள் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளனர்.

வான்வழித் தாக்குதல்கள் சாதாரண மக்களின் துயரத்தை மேலும் அதிகரிக்கும் என்றும், நீண்டகால அரசியல் மாற்றம் என்பது ஈரானிய மக்களிடமிருந்தே வர வேண்டுமே தவிர, வெளிநாட்டுத் தலையீடுகள் மூலம் அல்ல என்றும் அவர்கள் வாதிடுகின்றனர். ஒட்டுமொத்தத்தில், ஒட்டாவாவில் உள்ள ஈரானிய சமூகம் இந்த விவகாரத்தில் எச்சரிக்கையுடனான நம்பிக்கையுடனும், எதிர்காலம் குறித்த கவலையுடனும் பிரிந்து காணப்படுகிறது.

இதேவேளை ஈரானின் காம் நகரில் உள்ள ஜம்கரன் மசூதியின் உச்சிப் பகுதியில் சிவப்புக் கொடி பறக்க விடப்பட்டுள்ளமை சர்வதேசத்தின் கவனத்தை திருப்பியுள்ளது.

ஈரானின் முக்கியமான மத வழிபாட்டுத் தளமான இந்த மசூதியில் சிவப்பு நிறக் கொடி பறக்கவிடப்பட்டதற்கு ஒரு காரணமும் உண்டென கூறப்படுகிறது.

மசூதியில் ஏற்றப்பட்ட சிவப்புக் கொடியானது கோபம், பழி தீர்க்கும் நோக்கத்தை குறிக்கிறது என்கின்றனர். அமெரிக்கா இஸ்ரேல் நடத்திய கூட்டுத் தாக்குதலில் ஈரானின் உயர் தலைவர் அலி காமேனி கொல்லப்பட்டதையடுத்து, அவரது ஆதரவாளர்கள் மத்தியிலும் ஈரான் முழுவதிலும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. அது மட்டுமன்றி, பல்வேறு நாடுகளிலும் போராட்டங்கள் நடத்தப்பட்டு, ஈரான் மீதான தாக்குதலுக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளன.

ஈரானின் உயர் தலைவரின் கொலைக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்றும் தாக்குதலுக்கு உரிய தரப்பினர் பதில் சொல்ல வேண்டும் என்பதை கோபத்துடன் ஈரான் வலியுறுத்துவதையும் பழிவாங்கத் துடிப்பதையும் வெளிப்படுத்தும் விதமாகவே இந்த சிவப்புக் கொடி மசூதியில் பறக்க விடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

01மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமை ஈரான் உயர் தலைவர் உயிரிழந்த செய்தியை அந்நாட்டு அரசு ஊடகங்கள் உறுதிப்படுத்தியது. இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு அலி காமேனியின் இறப்பை அறிவித்து தமது வெற்றிக் களிப்பை வெளிப்படுத்தினர்.

இவ்வாறான போர்ச்சூழலில் அலி காமேனியின் ஆதரவாளர்களின் கோபத்தையும் பழிவாங்கும் உணர்வையும் பிரதிபலிக்கும் வகையில் இந்த சிவப்பு நிறக் கொடி மசூதியின் உச்சியில் பறக்கவிடப்பட்டுள்ளது.

ஈரான் தாக்கப்பட்டதையடுத்து, அமெரிக்காவின் இராணுவ தளங்கள் காணப்படும் இடங்களிலும் அமெரிக்க ஆதரவு மத்திய கிழக்கு நாடுகளிலும் ஈரான் ட்ரோன், ஏவுகணை மூலம் பதில் தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## ஈரான் மசூதியில் பறக்கும் சிகப்பு கொடி! காரணம் என்ன?

## நாம் தமிழர் கட்சியும் நமது தமிழ்க்கட்சிகளும்

(20ம் பக்கத் தொடர்ச்சி) முன்னர் ஒப்பீட்டுரீதியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியிடம் அவ்வாறான ஒரு வலையமைப்பு உயர்ந்த நிலையில் இருந்தது. இன்று தலைவர்களுக்கு ஜால்ரா போடும் ஒரு கூட்டம் மட்டும் அங்கு காணப்படுகிறது. அதுவும் சார்பு நிலைக் குழுக்களாக அல்லது மதில்மேல் பூனைகளாக இருக்கின்றன.

மக்களைச் சரியான வழியில் கொண்டு செல்வதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள், அரசியல் அணுகுமுறைகள், அதற்கான கட்டமைப்புகள் போன்ற எதுவும் எந்தவொரு கட்சியிலும் இயங்குநிலையில் இல்லை. தேர்தல் ஒன்று வரும் போது மட்டும் ஒவ்வொரு கட்சியும் பெரிய அரசியல் இயக்கங்கள் போன்ற பிரமைகளை மட்டும் தோற்றுவிக்க முயலுகின்றன. அல்லது ஏதாவது கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து பாராளுமன்ற ஆசனங்களுக்காக ஆலாய் பறக்கின்றன. தமிழ் அரசியல் கட்சிகள் பாரப்பதற்கு அழகாக வெளியில் தெரிந்தாலும் அவற்றின் அத்திபாரங்கள் மிகப்பலவீனமானவை என்பதே உண்மை.

வேண்டுமானால் மற்றக்கட்சியை விட எமது கட்சி பலமானது என பெருமை பேசலாம். ஆனால் எல்லாமே அடிப்படையில் பலவீனமானவையே. தமிழ் நாட்டில் திராவிட மாயையிலும், திரைப்பட மாயையிலும், இந்தியத் தேசிய மாயையிலும் ஊறி நிற்கின்ற மக்களிடம் தமிழ்த்தேசிய உணர்வை சீமானால் சிறப்பாகக் கட்டி வளர்க்க முடிகிறதென்றால் ஏலவே நன்கு கட்டி வளர்க்கப்பட்ட அந்த உணர்வை எமது தலைவர்களால் ஏன் பாதுகாக்க முடியாமல் உள்ளது?

அணைகின்ற தீயில் இன்றும் குளிர்காய எத்தனிக்கிறார்களேயன்றி அத்தீயை அணை யாது தொடர்ந்து பாதுகாக்க வேண்டுமென்ற கரிசனை இன்று எத்தனை தலைவர் களிடம் உள்ளது? அதுவும் இன்று அதனை அணைப்பதற்கு மிக சூட்சுமமான காய் நகர்த்தல்கள் பல மேற்கொள்ளப்படும்போது இன்னும் விழிப்பாக இருக்க. வேண்டிய தொரு நிலையில், ஒருபுறத்தில் தூங்கிக் கொண்டும் இன்னொருபுறத்தில் அதற்கான வாய்ப்புகளை தாமாகவே உருவாக்கிக் கொண்டுமல்லவா எமது தலைவர்கள் இருக் கிறார்கள். அவர்கள் குளத்தைக் கலக்கி கொக்குக்கு இரையைச் சுலபமாக ஊட்ட விரும்புகிறார்களா? இலங்கையில் புத்தமதம் இலகுவாக கால் பதித்தமைக்குரிய காரணங்களில் பிரதானமானது அப்போது இங்கு நிறுவன மயப்படுத்தப்பட்ட எந்தவொரு மதமும் இல்லாதிருந்தமை என வரலாறு கூறுகிறது. அதே போலவே தமிழ்த்தேசியம் உறுதியாவும் உணர்வுடனும் மக்கள் மனங்களில் இல்லாது போகுமாயின் இலகுவாக எம்மக்களை பேரினவாத அரசியல் தம்வசப்படுத்தி விடும் என்ற உண்மையை எப்போது நாம் புரிந்துகொள்ளப் போகிறோம்?

## இலங்கையில் அமெரிக்காவின்


(13ம் பக்கத் தொடர்ச்சி) இதன் ஊடாக பிராந்தியத்திலும் இலங்கையை சுற்றிய கடற்பகுதியிலும், இலங்கையை கொண்டு பாதுகாப்பை உறுதிப்படுத்த அமெரிக்கா முற்படுகிறது. இது இலங்கைக்கு பலனளிக்கிறதோ இல்லையோ, அமெரிக்காவுக்கு நன்மையளிக்கும்.

இலங்கை கடற்படைக்கு அமெரிக்கா வழங்கியுள்ள நான்காவது ரோந்துக் கப்பலும் சரி, 10 ஹெலிகொப்டர்களும் சரி, இதற்கான முதலீடுகள் தான். அமெரிக்கா இன்னொரு நாட்டுக்கு எதையாவது கொடுக்கிறது என்றால், ஏதோ ஒரு இலாபம் அல்லது நலன் அதற்கு இருக்கிறது என்று பொருள், இலங்கையும் அதற்கு விதிவிலக்கானது அல்ல.

இலங்கையிடம் இருந்து அமெரிக்கா எதிர்பார்ப்பது இப்போதைக்கு ஒரு தளமாக இல்லா விட்டாலும், அதற்கு இணையான பாதுகாப்பு நலன்களை அடைவதற்கு முற்படுகிறது என்பது மட்டும் உறுதியாகத் தெரிகிறது.

# இலங்கையில் அமெரிக்காவின் எதிர்பார்ப்பு!

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



ஈரான் மீது தாக்குதல் நடத்துவதற்கு அமெரிக்கப் படைகள் தயார் நிலையில் இருப்பதாக, வெள்ளை மாளிகைக்கு, பென்டகன் அறிக்கை சமர்ப்பித்த காலப்பகுதியில், அமெரிக்காவின் பசுபிக் கடற்படைத் தளபதி அட்மிரல் ஸ்டீபன் தோமஸ் கோஹ்லர், இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

அவரது பயணம் அவசரமானதாக இருக்கவில்லை. ஆனால், அந்த மூன்று நாள் பயணம் அமெரிக்காவுக்கு அவசியமான ஒன்றாக இருந்தது. பசுபிக் கடற்படைத் தளபதி அண்மைக்காலத்தில் மேற்கொண்ட இரண்டாவது பயணம் இது.

ஈரான் மீதான தாக்குதலுக்கு அமெரிக்கா தயார் நிலையில் உள்ள சூழலில், பசுபிக் கடற்படைத் தளபதியின் இந்த பயணம் குறித்து பல்வேறு ஊகங்கள் வெளியிடப்பட்டன. ஈரான் மீதான தாக்குதலுக்கு இலங்கையைத் தளமாக பயன்படுத்துவது குறித்து பேசவே அவர் கொழும்புக்கு பயணம் மேற்கொண்டார் என்றும் சில தகவல்கள் வெளியாகின.

ஆனால், அமெரிக்கா அவ்வாறான ஆதரவை கோரியதாக எந்த ஆதாரபூர்வமான தகவல்களும் இல்லை. ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே பிரச்சினை இருந்தாலும் ஈரானுடனும், அமெரிக்காவுடனும், இலங்கை நெருங்கிய உறவுகளைப் பேணுகிறது.

தற்போதைய அரசாங்கம் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுடன் மிக கவனமாக உறவுகளை கையாண்டு வருகிறது. சீன சார்பு அரசாங்கம் என்ற அடைமொழியுடன் ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தன்னை நடுநிலையாளராக காட்டிக் கொள்வதற்கு இந்த இரண்டு நாடுகளுடனும் அதிகபட்ச சகிப்புத்தன்மையுடன் கூடிய உறவுகளை கையாண்டு வருகிறது.

அதேவேளை அமெரிக்காவின் தடைகளுக்கும் மத்தியில், ஈரானுக்கு தேயிலையை ஏற்றுமதி செய்வதை இன்னமும் இலங்கை நிறுத்தவில்லை. ஏற்கெனவே வழங்கிய கடனை, தேயிலை மூலம் திருப்பி செலுத்துவதாக கூறி, இலங்கை அரசாங்கம் இதனை சமாளித்துக் கொண்டிருக்கிறது.

ஈரானுடன் டொலரில் வர்த்தகம் செய்ய முடியாது என்பதால், பண்டமாற்று மூலம் கடனை தீர்ப்பதாக அரசாங்கம் கூறுகிறது. இப்படியான சூழலில், அமெரிக்கா இலங்கையிடம் ஒத்துழைப்பு கோரியிருக்குமா என்ற கேள்விகள் இருந்தாலும், அமெரிக்க நிர்வாகம் இத்தகைய அழுத்தங்களை கொடுக்காது என அறுதியாக கூற முடியாது.

ஈரான் மீது தாக்குதலை நடத்துவதற்கு அமெரிக்காவுக்கு மத்திய கிழக்கில் தளங்கள் இருக்கின்றன. அது தவிர உலகின் மிகப்பெரிய விமானந்தாங்கிக் கப்பலான யூ.எஸ்.எஸ். ஜெரால்ட் ஆர். போர்ட் மற்றும் யூ.எஸ்.எஸ். ஆப்ரஹாம் லிங்கன் போன்ற மிதக்கும் தளங்களை, மத்திய கிழக்கு நிறுத்தியிருக்கிறது அமெரிக்கா.

முன்னர், ஆப்கானிஸ்தான் போர், ஈராக் மீதான படையெடுப்பு போன்றவற்றுக்கு அமெரிக்கா டியாகோகாசியாவில் உள்ள தளத்தை பயன்படுத்தியிருந்தது. டியாகோகாசியா பிரித்தானியாவின் ஆளுகைக்கு உட்பட்ட தீவு.

அதனை மீண்டும் மொரிஷியசியஸிடம் ஒப்படைக்க பிரித்தானியா திட்டமிட்டுள்ளது. அந்த முடிவை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அண்மையில் கடுமையாக விமர்சித்திருந்தார். இவ்வாறான நிலையில் அமெரிக்காவின் பார்வை இலங்கை மீது திரும்பியிருப்பதற்கான வாய்ப்புகளை நிராகரிப்பதற்கில்லை.

ஈரானுக்கும் டியாகோகாசியாவுக்கும் இடையிலான தூரத்தை விட ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான தூரம் குறைவானது. அதற்காக இலங்கையை இந்த தாக்குதலுக்கு பயன்படுத்த அமெரிக்க திட்டமிடுவதாக அர்த்தம் கொள்ள முடியாது.

ஈரான் மீதான தாக்குதல் எந்தளவுக்கு சாத்தியம் அது எந்தளவுக்கு விரிவானதாக இருக்கும் என்ற கேள்விகளுக்கு இன்னமும் பதில் இல்லை.

ஆனாலும், ஒரு தற்காப்பு முன்னேற்பாடாக, இலங்கையில் சில வசதிகளை உருவாக்கிக் கொள்வதற்கு அமெரிக்கா விரும்பியிருக்கலாம். அதற்கான சாத்தியங்களை நிராகரிக்க முடியாது.

ஏற்கெனவே, நல்லாட்சி அரசின் காலத்தில் அமெரிக்காவுடன் நெருக்கமான பாதுகாப்பு உறவுகள் ஏற்பட்டு, சில பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடுகளும் செய்து கொள்ளப்பட்டன.

2007இல் கையெழுத்திடப்பட்ட, கையகப்படுத்தல் மற்றும் பரஸ்பர சேவை ஒப்பந்தம் (ACSA) 2017ஆம் ஆண்டு 10 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டதுடன், அமெரிக்கப்படைகளின் நிலை (SOFA) ஒப்பந்தத்திலும் கையெழுத்திடுவதற்கு பேச்சுக்கள் நடத்தப்பட்டன.




அதேவேளை, அரபிக் கடலிலும், இந்திய பெருங்கடலிலும், நிலை கொண்டிருந்த அமெரிக்க படைகளுக்கான விநியோகங்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாகவும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. எனினும், பின்னர் ஆட்சிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம், அத்தகைய விநியோகங்களுக்கு தடை விதித்தது.

தற்போதைய அரசாங்கம் அதனை விட கடுமையான போக்கில் அமெரிக்காவுடன் செயற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், முன்னைய அரசாங்கத்தை விட நெகிழ்வான போக்கையே கையாண்டு வருகிறது. இப்போது அமெரிக்கா இலங்கையை தனக்கு சாதகமான முறையில் வடிவமைக்க ஆரம்பித்திருக்கிறது.

அனைத்து வழிகளிலும் இலங்கையுடன் ஒத்துழைப்புகளையும் உறவுகளையும் அது வலுப்படுத்திக் கொண்டிருக்கிறது. இலங்கைக்கான அமெரிக்க பதில் தூதுவர் ஜேன் ஹோவெல், தற்போதைய அமெரிக்க நிர்வாகத்தின் வெளியுறவுக் கொள்கை மற்றும் அதன் முன்னுரிமைகள் குறித்து அண்மையில் விளக்கமளித்துள்ளார்

அமெரிக்காவை மிகவும் பாதுகாப்பானதாகவும், வலிமையானதாகவும், செழிப்பானதாகவும் மாற்றுவதே வெளியுறவுக் கொள்கையின் முதன்மை நோக்கம் என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த இலக்கை அடைவதற்கு தம்முடன் ஒத்துழைத்து செயற்படக் கூடிய நாடுகளையும் அதே நிலையில் வைத்திருப்பதற்கு அமெரிக்கா முற்படுகிறது.

அவ்வாறு அமெரிக்கா தனது சிறகுக்குள் வைத்திருக்க விரும்பும் நாடுகளில் இலங்கையும் ஒன்று.

ஒட்டுமொத்த தெற்காசிய பிராந்தியத்தையும், தமது பாதுகாப்புக்கு முக்கியமான பகுதியாக அமெரிக்கா வரையறுத்திருக்கிறது.

அண்மையில் தெற்காசியா தொடர்பான, பாராளுமன்ற துணைக் குழுவின் விசாரணையில் சாட்சியமளித்த, தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் போல் கபூர் (Paul Kapur) இதனை சார்ந்து பல விடயங்களை வெளிப்படுத்தியிருந்தார். இலங்கையின் மூலோபாய இருப்பிடத்தின் முக்கியத்துவத்தும் மிகையான ஒன்று என்பதை அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை மாலைதீவுகள், நேபாளம் மற்றும் பூட்டானை உள்ளடக்கிய தெற்காசியா, அமெரிக்காவுக்கு மிகவும் முக்கியமானது.

அமெரிக்காவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு, இவர்களின் எல்லைகளையும் நீர்வழிகளையும் ஆக்கிரமிப்பு சக்திகளுக்கு எதிராகப் பாதுகாக்க உதவுகிறது.

கவனமாக இலக்கு வைக்கப்பட்ட முதலீடானது இந்த அரசுகளுக்கு, துறைமுகங்கள், தொலைத்தொடர்பு வலையமைப்பு மற்றும் எரிசக்தி தளங்கள் போன்ற முக்கியமான உள்கட்டமைப்புகளுக்கு உயர்தரமான வெளிப்படையான, ஆதரவை வழங்க வேண்டும். கடன் பொறி இராஜதந்திரத்தின் ஆபத்துகளைத் தவிர்க்க அவர்களுக்கு இது உதவும்.

தெற்காசியாவை ஆதிக்கம் செலுத்த விரும்பும் ஒரு விரோத சக்தி, உலகப் பொருளாதாரத்தின் மீது வலிந்த செல்வாக்கை செலுத்தக் கூடும். இது நடப்பதை அமெரிக்கா தடுக்க வேண்டும். பிராந்தியத்தை சுதந்திரமாகவும் திறந்ததாகவும் வைத்திருக்க வேண்டும்.

எமது இலக்குகளை அடைய, சுமையைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒத்த எண்ணம் கொண்ட கூட்டாளர்களுடன் நாம் ஒத்துழைக்க வேண்டும்.

எமது கூட்டாளிகள் மூலோபாய திறனை உருவாக்க உதவ வேண்டும், இதனால் அவர்கள் உலகப் பொருளாதாரத்தில் சிறப்பாக ஒருங்கிணைக்கவும், அவர்களின் சுயாட்சியைப் பாதுகாக்கவும், சுதந்திரமான மற்றும் திறந்த பிராந்தியத்திற்கு பங்களிக்கவும் முடியும்.

இதைச் செய்ய தெற்காசிய நாடுகளுடனான எங்கள் வர்த்தக உறவுகளை விரிவுபடுத்த வேண்டும் என்றும், போல் கபூர் கூறியிருந்தார்.

நாடுகளின் இறைமைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தாமல் அவற்றின் திறனை அதிகரித்து, அதன் ஊடாக, அமெரிக்க நலன்களை பாதுகாத்துக் கொள்வதன் முக்கியத்துவம் அவரால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

கொழும்பு துறைமுகத்தின் மீது அமெரிக்காவின் கவனம் அதிகரித்திருப்பதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும்.

அண்மையில் கொழும்புக்கு வந்திருந்த அட்மிரல் ஸ்டீபன் தோமஸ் கோஹ்லர், கொழும்பு துறைமுகத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள், வர்த்தகத்தை பாதுகாப்பாக விரிவுபடுத்துவதில் உள்ள இடர்ப்பாடுகள் குறித்து ஆராய்ந்திருந்தார்.

அத்துடன் தற்போது இந்தியாவின் மசாகோன் நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்குள் வந்திருக்கின்ற கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்துடனாக உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும், அவர் நேரில் ஆராய்ந்திருந்தார்.

இது தனியே வர்த்தக உறவுகளை பலப்படுத்துவதற்கான நடவடிக்கை அல்ல. கொழும்பு டொக்யார்ட் கப்பல்களை பழுதுபார்க்கும் வசதிகளைக் கொண்டிருக்கிறது.

இந்தியப் பெருங்கடலில் அமெரிக்கா தனது கப்பல்களை பழுது பார்ப்பதற்கான ஒரு வசதியை ஏற்படுத்துவது குறித்து ஆராய்கிறதா என்ற கேள்வியை அட்மிரல் கோஹ்லரின் கொழும்பு டொக்யார்ட் பயணம் எழுப்ப வைத்திருக்கிறது.

அதேவேளை, இந்திய பெருங்கடலின் வழியாக இடம்பெறும் வர்த்தகத்தை ஒழுங்கமைப்பதும், அதற்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் அமெரிக்காவின் இன்றைய முன்னுரிமைக்குரிய விடயங்களாக உள்ளன.

இந்த பாதை அமைதியாகவும் வெளிப்படையானதாகவும் பாதுகாப்பாகவும் இருப்பதன் மூலம் அமெரிக்கா தனது செழிப்பை உறுதிப்படுத்த முனைகிறது.

அமெரிக்காவின் செழிப்பு என்பது இப்போது அந்த நாட்டின் எல்லைப் பரப்புக்குள் மாத்திரம் இல்லை என்று அமெரிக்க இராஜதந்திரிகள் மிகத் தெளிவாக கூறுகிறார்கள்.

அமெரிக்க எல்லைக்குள் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது முதன்மையானது. அதற்கு அடுத்து அதன் வர்த்தகம் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு அடுத்து அமெரிக்காவுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளின் உறுதித் தன்மையும் பாதுகாப்பும் செழிப்பும் பாதுகாக்கப்பட வேண்டும்.

இதன் மூலம் மட்டுமே அமெரிக்கா தனது பாதுகாப்பையும் செழிப்பையும் வலிமையையும், உறுதியாக நிலைப்படுத்திக் கொள்ள முடியும் என அமெரிக்க இராஜதந்திரிகள் உறுதியாக நம்புகிறார்கள்.

அவர்கள் இப்பொழுது அதை நோக்கியே அமெரிக்காவை தயார்படுத்துகிறார்கள். அதனால் தான் அவர்கள் இந்திய பெருங்கடலில் இலங்கை போன்ற நாடுகளை தங்களுக்கு ஏற்றவாறு வடிவமைக்க முற்படுகிறார்கள்.

இலங்கையை தளமாக்குவதற்கு பதிலாக இலங்கையை வலுவாக்க அவர்கள் முற்படுகிறார்கள்.

(12ம் பக்கம் பார்க்க)







# வேலையற்ற பட்டதாரிகளை உற்பத்தி செய்யும் சமூகம்?

இக்கட்டுரை எழுதப்படுகையில் யாழ் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா நடந்து கொண்டிருக்கிறது. அதுதொடர்பாக சமூக வலைத் தளங்களில் ஒரு விவாதம் எழுந்திருக்கிறது.

அரச பல்கலைக்கழகங்களில் நிகழும் பட்டமளிப்பு விழாக்களில் வேலை இல்லாத புதிய தொகுதி பட்டதாரிகள் உற்பத்தி செய்யப்படுகிறார்கள் என்று அந்த வாதப் பிரதிவாதங்களில் சுட்டிக்காட்டப்படுகிறது. அரச வேலை தேடும் மேலும் ஒரு தொகுதி பட்டதாரிகள் இன்று வெளியேறுகிறார்கள் என்று அவர்கள் விமர்சிக்கிறார்கள்.

ஏற்கனவே 4000க்கும் குறையாத பட்டதாரிகள் வேலை தேடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நான் வெளியேற்றப்பட்ட பட்டதாரிகள் என்று எழுதுவதற்கு பதிலாக அரச வேலை இல்லாத பட்டதாரிகள் என்று எழுதுவதே பொருத்தம் என்று கூறுவோர் சமூகத்தில் உண்டு. மேற்படி பட்டதாரிகள் அரச வேலைகளுக்காக காத்திருக்கிறார்கள் என்ற பொருளில் தான் அவ்வாறு அழைக்கப்படுகிறார்கள். அரச வேலை அல்லாத தனியார் நிறுவனங்களில் வேலை செய்ய அவர்கள் தயாரில்லை என்றும் அரச வேலை அல்லாத ஏனைய வேலைகளை அவர்கள் நிரந்தரமானவைகளாகவோ அல்லது பாதுகாப்பானவைகளாகவோ கருதவில்லை என்றும், அதனால் அவர்கள் அரச வேலைகளுக்காக காத்திருக்கிறார்கள் என்றும் விமர்சிக்கப்படுகிறது.

பட்டதாரிகள் ஏன் அரச வேலைக்காக காத்திருக்கிறார்கள்? பின்வரும் காரணங்களை கூறலாம்.

முதலாவது காரணம், ஓய்வு ஊதியம். அதாவது இறக்கும் வரை ஒரு பாதுகாப்பு ஏற்பாடு உண்டு.

இரண்டாவது, அதிகம் கஷ்டப்பட்டு உழைக்க தேவையில்லை. அரச வேலைகளில் குறிப்பிட்ட சில சோதனைகளை எழுதுவதன் மூலமும் மூப்பின் மூலமும் பதவி உயர்வுகளைப் பெறலாம். அங்கே வேலை செய்தால் தான் சம்பளம் என்று இல்லை. எனவே வேலை செய்யாமலும் சம்பளம் வாங்கலாம் என்ற ஒரு நிலை இருப்பதினால் அரசு வேலை கஷ்டப்படத் தேவையில்லாத ஒன்று என்ற கருத்து ஒரு பகுதி பட்டதாரிகள் மத்தியில் உண்டு என்று விமர்சிக்கப்படுகிறது.

மூன்றாவது, அரச உத்தியோகத்துக்கு சமூகத்தில் காணப்படும் மதிப்பு. குறிப்பாக சீதனச் சந்தையில் காணப்படும் மதிப்பு.

மேற்சொன்ன காரணங்களினால் தான் அரச ஊழியத்துக்காக பட்டதாரிகள் காத்திருக்கிறார்கள் என்று விளக்கம் கூறப்படுகிறது. ஆனால் அரச ஊழியத்தில் மேற்கூறிய நன்மைகள் மட்டும் இல்லை. தீமைகளும் உண்டு. குறிப்பாக ஓர் இளம் பட்டதாரி தன் பட்டப்படிப்பை முடித்து வெளியேறும் போது அனேகமாக திருமண வயதை அடைந்திருப்பார். அவர் திருமணம் செய்யும் நபரும் அரசு ஊழியராக இருந்தால், பெரும்பாலும் அவர்களுக்கு கிடைக்கும் முதலாவது அரச ஊழியம் கஷ்டப் பிரதேசத்தில் தான் கிடைக்கும். கஷ்டப் பிரதேசத்தில் அவர்கள் குறைந்தது 8 ஆண்டுகள் வேலை செய்யவேண்டி இருக்கும். இந்த எட்டு ஆண்டுகள் என்ற பருவம் பெரும்பாலும் இல்லறத்தின் தொடக்கப் பருவம். திருமணம் செய்த புதிதில் சந்தோசமாக சுற்றித் திரியும் பருவம். இக்காலகட்டத்தில் அரச ஊழியம் கிடைக்குமாக இருந்தால் அதுவும் கஷ்டப் பிரதேசத்தில் கிடைக்குமாக இருந்தால் என்ன நடக்கும்?

வாழ்க்கையில் அதிகம் சந்தோஷமாக இருக்க வேண்டிய ஒரு பருவம் பயணங்களில் முடிந்து விடும். அரச ஊழியர்களுக்கான பேருந்துக்காக அதிகாலையில் எழுவதிலும், வேலை முடிந்து அந்தி சாய்ந்தபின் வீடு திரும்புவதிலும் அந்தக் காலத்தின் பெரும் பகுதி கழித்து விடும். குழந்தை பெறும் போதும் நிலைமை அப்படித் தான் இருக்கும். வீட்டில் குழந்தையை பராமரிக்க முதியவர்கள் இல்லை என்றால் வாழ்க்கை மேலும் சித்திரவதையாகும். குழந்தையின் மழலையை அனுபவிப்பதற்கும் நேரம் இருப்பதில்லை. ஓடிக் கொண்டே இருக்க வேண்டும்.

எனவே அரச ஊழியத்தில் இருக்கும் பிரதானமான பிரதிகூலம் எதுவென்றால் கஷ்டப் பிரதேசத்தில் வேலை செய்ய வேண்டும் என்பதுதான். திருமண வாழ்வில் ஆரம்பப் பருவத்தை,சந்தோஷமாக இருக்க வேண்டிய ஒரு பருவத்தை இப்படி வேலைக்காக மாவட்டங்களுக்கு இடையில் பயணம் செய்வதிலேயே தொலைத்தால் பிறகெப்பொழுது வாழ்க்கையை அனுபவிப்பது?

ஆனால் அரசு ஊழியத்தை நாடும் பெரும்பாலான பட்டதாரிகள் இதை ஒரு விவகாரமாக எடுத்துக் கொள்வதில்லை. கஷ்டப் பிரதேச வேலையை 8 அல்லது 5 ஆண்டுகளுக்குள் கடந்து விட்டால் பின்னர் வாழ்க்கை முழுக்க சந்தோசமாக இருக்கலாம் என்று அவர்கள் நினைக்கக் கூடும். அதேசமயம் அரச ஊழியம் அல்லாத வேறு வேலைகளுக்குப் போக அல்லது தாமாகவே தொழில் முனைவோராகி, ரிஸ்க் எடுத்து புதிய தொழில்துறைகளை ஆரம்பிக்க எத்தனை பட்டதாரிகள் தயார்? இந்தக் கேள்வியை அதன் பிரயோக அர்த்தத்தில் மறுவளமாக கேட்டால், அரச ஊழியத்துக்கு வெளியே தொழில் முனைவராக எழுவதற்குத் தேவையான துணிச்சலையும் தகைமையும் நமது கல்விமுறை பட்டதாரிகளுக்கு வழங்குகிறதா? என்று கேட்கலாம்.

இல்லை. அதுதான் பிரச்சினையே. வேலையில்லாத பட்டதாரிகள் தொழில் முனைவோர்களாய் எழுவதற்கும் சொந்தத் தொழிலில் ரிஸ்க் எடுப்பதற்கும் தயாராக இல்லை என்பது அவர்களுடைய தொழில் தொடர்பான மனோ நிலை சம்பந்தப்பட்ட ஒரு விடயம் மட்டுமல்ல. அது அதைவிட ஆழமான பொருளில் நமது கல்வி முறையின் மீதான ஒரு விமர்சனமாகத்தான் முன்வைக்கப்பட வேண்டும். நமது கல்வி முறை தொழில் முனைவோரை உருவாக்கத் தவறுகிறது என்பதனை பெரும்பாலான பொருளாதார நிபுணர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். தொழில் முனைவோருக்குத் தேவையான துணிச்சலையும் சுய ஒழுக்கத்தையும் சமூக விழிப்பையும் புதிய சிந்தனையையும் நமது கல்விமுறை போதிய அளவுக்குக் கட்டியெழுப்பவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு பரவலாக உண்டு.

நமது யூடியூப்பர்களில் ஒரு பகுதியினர் சமூகத்தில் அரிதாகக் காணப்படும் தொழில் முனைவோரைத் தேடிச் சென்று படம் பிடித்து வெளியே கொண்டு வருகிறார்கள். அதனால் தூண்டப்பட்டு தாமும் அவ்வாறு ரிஸ்க் எடுப்பதற்கு எத்தனை பட்டதாரிகள் தயாராக இருக்கிறார்கள்?

வேலையில்லாத பட்டதாரிகளின் தொகை அதிகரிப்பது என்பது பட்டதாரிகளின் குற்றம் அல்ல.அது முதலாவதாக கல்வி முறையில் உள்ள குறைபாடு. இரண்டாவதாக,வேலை வாய்ப்புகளை உருவாக்கத் தவறிய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளில் உள்ள பலவீனம். மூன்றாவதாக தொழில் தெரிவுகள் பற்றிய சமூகத்தின் கூட்டு உளவியலில் உள்ள கோளாறு.

எனவே இது விடயத்தில் பட்டதாரிகளைக் குறை சொல்ல முடியாது. அவர்கள் பிழையான கல்விமுறையின் பலியாடுகள் தான். மிகப்பிழையான பொருளாதாரக் கொள்கைகளால் பாதிக்கப்பட்டவர்கள். அவர்கள் பொன்னிறமான கனவுகளோடு பல்கலைக்கழகத்துக்கு வருகிறார்கள். ஆனால் வேலைக்காக காத்திருப்பதிலேயே அவர்களுடைய கனவுகள் நிறமிழந்து போகின்றன. வயதுகளும் தொலைந்து போகின்றன.

எனவே இந்த விடயத்தில் தீர்வைக் கண்டுபிடிக்க வேண்டியது பட்டதாரிகள் மட்டுமல்ல, அரசாங்கமும் கல்விக் கொள்கைகளைத் திட்டமிடும் நிபுணர்களும் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும். குறிப்பாக ஈழத் தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை மிகப்பலமான நிதி வளம்மிக்க புலம் பெயர்ந்த சமூகம் ஒன்று உண்டு. புலம்பெயர்ந்த சமூக வாழ்க்கையை ஒரு சொர்க்கம் என்று கருதும் பட்டதாரிகளே அதிகம். ஓர் ஆங்கில

(22ம் பக்கம் பார்க்க)

# அப்பத்தை எப்படி பங்கிடுவது? அப்பத்தை யார் சாப்பிடுவது?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



தமிழ் நாடு, திருச்சியில், கடந்த வாரம் சீமான் நடத்திய கூட்டம் ஈழத்தமிழர்கள் மத்தியில் உள்ள சீமானின் ஆதரவாளர்களுக்குப் பெரிய உற்சாகத்தைக் கொடுத்திருக்கிறது. அதை ஒரு பிரம்மாண்டமான தமிழ்த் தேசிய வெற்றியாக அவர்கள் போற்றுகிறார்கள்.

அண்மை மாதங்களாக சீமானுக்கும் விஜய்க்கும் ஈழத் தமிழர்கள் மத்தியில் ஆதரவாளர்கள் அதிகரித்து வருகிறார்கள். தமிழகத்தில் சீமானும் விஜேயும் ஒருவர் மற்றவருக்கு எதிராகக் காணப்படுகிறார்கள். ஆனால் ஈழத் தமிழர்கள் மத்தியில் அவர்களுக்கு ஆதரவாளர்கள் கூட்டம் அதிகரித்து வருகிறது. கடந்த வாரம் நடந்த சீமானின் கூட்டத்தோடு அவருடைய ஆதரவாளர்கள் மிகவும் நம்பிக்கையோடு காணப்படுகிறார்கள்.

ஈழத் தமிழர்கள் தமிழகத்தைக் கையாள வேண்டும். ஈழத்தமிழ் ராஜிய நடவடிக்கைகளில் அது முதன்மையானது. ஆனால் அது எப்படி என்பதுதான் இங்குள்ள கோட்பாட்டு அடிப்படையிலான கேள்வி. தமிழகத்தில் பல கட்சிகள் உண்டு. அந்தக் கட்சிகளுக்கு இடையிலான முரண்பாடுகளுக்குள் ஈழத் தமிழர்கள் சிக்கக்கூடாது. அது தமிழ் நாட்டு வாக்காளர்களுடைய பிரச்சினை. அதில் ஈழத் தமிழர்கள் தலையிடத் தேவையில்லை. ஈழத்தமிழ் நோக்கு நிலையில் தமிழகத்தில் உள்ள ஈழ அபிமானிகள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் ஒன்றுதான், தமிழ் நாட்டவர்கள் தான். எனவே தமிழகத்தைக் கையாள்வது என்பது கட்சி பேதங்களைக் கடந்து தமிழக மக்களைக் கையாள்வது தான். அங்கே காணப்படும் கட்சி முரண்பாடுகளுக்குள் ஈழத் தமிழர்கள் சிக்கக்கூடாது என்பது முக்கிய முன் நிபந்தனை.

சீமானோ விஜயோ திமுகவோ அதிமுகவோ, பாரதிய ஜனதாவோகாங்கிரசோ எந்தக் கட்சியாக இருந்தாலும் தமிழகத்தில் யார் ஆட்சியைக் கைப்பற்றுகிறார்களோ அவர்களை ஈழத் தமிழர்கள் அணுக வேண்டும். அது தமிழ்நாட்டு அரசு. தமிழ்நாட்டு மக்களின் தெரிவு. அதை ஈழத் தமிழர்கள் மதிக்க வேண்டும். அதைக் கட்சியாகப் பார்க்கத் தேவையில்லை.

அப்படித் தான் புதுடில்லியிலும் இந்திய மக்களால் யார் ஆட்சியாளர்களாகத் தெரிவு செய்யப்படுகிறார்களோ அவர்களை அணுக வேண்டும். அதை பாரத அரசாக பார்க்க வேண்டுமே தவிர கட்சியாகப் பார்க்கக் கூடாது. இந்தியாவை, தமிழகத்தை கையாளும் போதும் அணுகும் போதும் இந்தத் தெளிவு மிக அவசியம். அரசுகளைக் கையாள்வது. அதுதான் அரச தந்திரம்.

சமூகவலைத் தளங்களில் ஆளுக்காள் மோதிக் கொள்ளும் ஈழத் தமிழர்களிடம் இந்தத் தெளிவு மிகக்குறைவாக இருப்பதை உணர முடிகிறது. அதுமட்டுமல்ல சீமான் திரட்டிய கூட்டத்தைப் பார்த்து வியந்து கொண்டிருக்கும் ஈழத் தமிழர்கள், தாங்கள் ஒரு தேசமாகத் திரள முடியாமல் இருப்பதைக் குறித்து என்ன நினைக்கிறார்கள்?

இங்குள்ள பெரிய கட்சி இரண்டாக உடைந்து நீதிமன்றத்தில் நிற்கிறது. ஒருவர் மற்றவரை எப்படித் துரோகி ஆக்குவது என்ற போட்டி.அதேசமயம் இரண்டாவது முக்கிய கட்சியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவை அரசாங்கத்தின் புதிய யாப்புருவாக்க முயற்சியை நோக்கி குடிமக்கள் சமூகங்களை ஒருங்கிணைத்து வருகிறது. ஒருபுறம் அவர்கள் தமிழகத்தை நோக்கியும் ஐரோப்பாவை நோக்கியும் சென்றார்கள். இன்னொருபுறம் தாயகத்தில் குடிமக்கள் சமூகங்களை நோக்கி வருகிறார்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட தோல்விகளிலிருந்து அவர்கள் கற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

ஆனால் அவர்கள் முன்னெடுக்கும் எல்லா நகர்வுகளுக்கும் போட்டியாக புலம் பெயர்ந்த தமிழ் செயற்பாட்டாளர் ஒருவர் தொடர்ச்சியாகக் காய்களை நகர்த்தி வருகிறார். புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உள்ள குறிப்பிட்டுச் செல்லக்கூடிய புத்திஜீவிகளில் அவர் ஒருவர்.ஒரு காலம் ராஜதந்திரிகளால் ஆர்வத்தோடு பார்க்கப்பட்ட ஆங்கில இணையதளத்தை இயக்கியவர். அவருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையிலான முரண்பாடு கோட்பாட்டு ரீதியிலானதா? ஈகோ சம்பந்தப்பட்டதா? என்ற விவாதத்தை தனியாக வைத்துக் கொள்ளலாம். ஆனால் அந்த



திம்பு கோட்பாடுகளுடன் புதிய அரசமைப்பு வரைவு

யாழில் தமிழ்த் தரப்புகள் ஒருமனதாகத் தீர்மானம்

தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்கும் வகையில், திம்பு கோட் பாடுகளை முழுமையாக உள்ளடக்கிய சுயாட்சி அம்சங்களுடன் கூடிய புதிய அரசமைப்பு யோசனைகளை தயாரிப்பது என்று யாழ்ப்பாணத்தில்

முரண்பாடு தமிழ்த் தேசிய ஆன்மாவின் இதயத்தைத் தாக்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு கோட்பாட்டு விளக்கமுடைய இரண்டு தரப்புகளுக்கும் உண்டு.

சில மாதங்களுக்கு முன்பு ஜெனிவா கூட்டத் தொடரை முன்னிட்டு முன்னணி தாயகத்தில் உள்ள குடிமக்கள் சமூகங்களை ஒருங்கிணைத்து கடிதம் ஒன்றை ஐநாவுக்கு அனுப்பியது. ஆனால் அந்தக் கடிதம் அனுப்பப்பட்ட சிறிது காலத்தில் மற்றொரு கடிதம் அரசியல் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களால் கையொப்பமிடப்பட்டு ஐநாவுக்கு அனுப்பப்பட்டது. இக்கடிதத்தின் பின்னணியில் மேற்சொன்ன புலம்பெயர்ந்த தமிழ்ச் செயற்பாட்டாளரே இருப்பதாக முன்னணி குற்றம் சாட்டியது. அதன் பின் தமிழ்த் தேசியப் பேரவை தமிழகத்துக்குப் போனது. அங்கே மூத்த ஈழத் தமிழ் உணர்வாளர்களில் ஒரு பகுதியினர் அவர்களைச் சந்திக்க மறுத்து விட்டார்கள். தமிழ்நாட்டு விஜயத்தின் போது, தமிழ்த் தேசியப் பேரவை முன் வைத்த கோரிக்கைகள் தொடர்பாக விமர்சித்து அங்குள்ள ஈழ உணர்வாளர்களில் ஒரு பகுதியினர் அறிக்கையும் விட்டார்கள். மேற்சொன்ன புலம் பெயர்ந்த தமிழ்ச் செயற்பாட்டாளர் தான் அதற்கும் பின்னணியில் இருந்ததாக முன்னணி குற்றம் சாட்டியது.

அதன்பின் தமிழ்த் தேசியப் பேரவை, இரண்டு வாரங்களுக்கு முன்பு மற்றொரு நகர்வை முன்னெடுத்தது. யாழ்ப்பாணம் இளங் கலைஞர் மண்டபத்தில் குடிமக்கள் சமூகங்களுடனான ஒரு சந்திப்பு அது. அந்தச் சந்திப்புக்கு சரியாக ஒரு நாள் முன்னதாக திருமலையில் ஒரு சந்திப்பு இடம் பெற்றது. அதுவும் குடிமக்கள் சமூகங்கள் மற்றும் மக்கள் அமைப்புகளூடான சந்திப்பு. அந்தச் சந்திப்பை ஒழுங்குபடுத்தியது திருமலையைச் சேர்ந்த அரசியல் செயற்பாட்டாளர் ஒருவர். அவரை பின்னிருந்து இயக்கியது மேற்சொன்ன புலம்பெயர்ந்த தமிழ் செயற்பாட்டாளரே என்று முன்னணி குற்றம்சாட்டியது. திருமலையைச் சேர்ந்த அந்த அரசியல் செயற்பாட்டாளர் முன்பு முன்னணியின் உறுப்பினராக இருந்தவர். இப்பொழுது இல்லை.

திருமலைச் சந்திப்பில் திருமலைப் பிரகடனம் முன் வைக்கப்பட்டது. இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு தொடர்பான கோட்பாட்டு விவாதங்களை அது புதுப்பித்திருக்கிறது. திருமலைச் சந்திப்பைப் போல மற்றோரு சந்திப்பு அதன்பின் மட்டக்களப்பிலும் நடந்தது. அதில் முன்னணியின் செயலாளர், கஜேந்திரன் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்திருந்தார். எனினும். அதன் பின் வெளி வந்த காணொளிகள், அந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்தவர்களுக்கும் முன்னணிக்கும் இடையிலான முரண்பாடுகளைப் பிரதிபலிப்பவை.

மேற்சொன்ன புலம்பெயர்ந்த தமிழ்ச் செயல்பாட்டாளர் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உள்ள பெரும்பாலான அமைப்புகளை ஒரு மெய் நிகர் சந்திப்பில் ஒருங்கிணைந்திருக்கிறார். இதில் தாயகத்திலிருந்தும் சிலர் கலந்து கொண்டதாக ஒரு தகவல்.நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட இந்த மெய்நிகர் சந்திப்பும் இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கியது தான்.

இதில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கிடையில் நிகழும் வாதப் பிரதிவாதங்களின் சாராம்சம் எதுவென்றால்,கோட்பாட்டு ரீதியாக யார் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்தை தீவிரமாகவும் விட்டுக் கொடுப்பின்றியும் முன்னெடுக்கிறார்கள்? இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு பொறுத்து யார் கோட்பாட்டு ரீதியாக மிகச் சரியான,பொருத்தமான தீர்வை முன்வைக்கின்றார்கள்? என்பது தான்.

ஒருபுறம் தமிழ்த் தேசியப் பேரவைக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையிலான முரண்பாடுகள் தூதரகங்களை அல்லது வெளிநாட்டுப் பிரதிநிதிகளை சந்திக்கு இழுக்கும் ஒரு நிலைக்கு வந்து விட்டது. கட்சிகள் தாங்களாக ஒற்றுமைப்படாத ஒரு பின்னணியில், தூதரகங்கள் தலையிட்டு முன்முயற்சி எடுத்தாலும் அதையும் ஒரு கட்சி குழப்புகிறது. இரண்டு பிரதான கட்சிகளுக்கும் இடையே எக்கிய ராஜ்யவா? சமஸ்ரியா என்ற வாதப்பிரதிவாதம். இன்னொரு புறம் சமஸ்டி வேண்டாம் பொதுஜன வாக்கெடுப்புத்தான் வேண்டும் என்ற கோரிக்கை.

சிறிய ஈழத் தமிழ்ச் சமூகத்தில் நாலில் ஒரு பகுதிக்கும் அதிகமானவர்கள் ஏற்கனவே புலம்பெயர்ந்து விட்டார்கள். புலப்பெயர்ச்சி தொடர்ந்தும் நடந்து கொண்டிருக்கிறது. அனேகமாக எல்லா ஈழத் தமிழ் கிராமங்களும் ஒரு பகுதி ஆளில்லா வீடுகளைக் கொண்ட கிராமங்களாக மாறிவருகின்றன. இளைய தலைமுறையின் ஒரு பகுதி நாட்டில் வேர் கொண்டு பூத்துக் குலுங்குவதை விடவும் நாட்டை விட்டு எப்படித் தப்பியோடுவது என்று தான் சிந்திக்கி ன்றது. அதாவது தாயகத்தில் சனத்தொகை தொடர்ச்சியாக மெலிந்து வருகிறது.

ஒருபுறம் சனத்தொகை மெலிகிறது. இன்னொருபுறம் இருக்கின்ற ஜனத்தொகையைத் திரட்டுவதற்குக் கட்சிகளால் முடியவில்லை. கட்சிகள் ஒருவர் மற்றவரைத் துரோகியாக்கிக் கொண்டிருக்க, தேசிய மக்கள் சக்தி உற்சாகமாக எதிர்பார்ப்போடு அனுர குமாரவை தமிழ்மக்கள் மத்தியில் கதா நாயகனாகக் கட்டியெழுப்புகிறது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த அதேயளவு ஆசனங்கள் தான் அரசாங்கத்துக்கும்.இந்த லட்சணத்தில் தீர்வை நோக்கி ஒருங்கிணைய வேண்டிய தமிழ்த் தரப்போ சிதறிக் கொண்டு போகிறது. பலஸ்தீனர்களுக்கிடையிலான அக முரண்பாடுகளை விமர்ச்சிப்பவர்கள் கூறுவார்கள் பாலஸ்தீனர்கள் அப்பத்தை எப்படிப் பங்கிடுவது என்று விவாதித்துக் கொண்டிருக்க, யூதர்களோ அப்பத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று. இது ஈழத் தமிழர்களுக்கும் பொருந்துமா?



# ஐ.நா. என்றொரு வெள்ளையானை இன்னும் தேவையா?

கட்டுரையாளர்:-
- அழகு குணசீலன் -

மத்திய கிழக்கு எரிகிறது. இந்த தீயை மூட்டிய சக்திகள் யார், யார் என்பது இரகசியம் அல்ல. சர்வதேச சட்டங்களை மீறியும், தேசங்களின் இறையாண்மையை மீறியும் இடம் பெறும் சண்டித்தன அரசியல் அத்துமீறல், அடாவடித்தனம் தொடர்கிறது.. இவ்வாறான சந்தர்ப்பங்களில் சமாதானத்தை சமநிலையை ஏற்படுத்த வேண்டிய ஐக்கிய நாடுகள் சபை என்ற உலக ஒழுங்கிற்கான மேற்பார்வைக்கான கட்டமைப்பு வெறும் பார்வையாளராக இருக்கிறது. ஆக மிஞ்சினால் ஒரு அறிக்கையோடு தனது கடமை முடிந்ததாக கருதுகிறது.

கையாலாகாத, காலாவதியான ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம், சர்வதேச சட்ட நடைமுறைகள் செயலிழந்து விட்டன. இந்த நிலையில் இன்னும் இந்த பெயரளவிலான வெள்ளையானை இன்னும் தேவையா? என்ற கேள்வி தவிர்க்க முடியாததாகின்றது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் கற்றுக் கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பின் நோக்கம் இனியும் அப்படியொரு மூன்றாவது போர் அழிவை தடுப்பதும் தான். ஆனால் கடந்த காலங்களை திரும்பி பார்த்தால் அவை உலகப் போராக உருமாற்றம் பெறாது விட்டாலும், உலகத்தில் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்துகின்ற போர்களாக பல இடம் பெற்றுள்ளன.: இடம் பெற்று வருகின்றன. பொதுவாக இவை அனைத்திற்கும் பின்னால் வெறுமனே இரண்டு, மூன்று சக்திகளே உள்ளன. சமகால உக்ரைன், பாலஸ்தீன, ஈரான் மற்றும் மத்திய கிழக்கு போர்கள் தரும் செய்திகள் இவை.

1979 ஈரானில் அமெரிக்க ஆதரவு ஷா ஆட்சி இஸ்லாமிய புரட்சி மூலம் அகற்றப்பட்ட பின்னர், ஈரான் இஸ்லாமிய குடியரசு நிறுவப்பட்டது. அது ஒரு இஸ்லாமிய மதம் சார்ந்த சட்டம், நீதி, நிர்வாக, சமூக, பொருளாதார, அரசியல் கட்டமைப்பை கொண்டதாக அமைந்தது. அது அந்த மக்களின் சுயதேர்வு சுயநிர்ணயம். காலப்போக்கில் உலக புதிய (?) ஒழுங்கில் ஏற்பட்ட மாறங்களோடு விட்டுக் கொடுக்கின்ற நெகிழ்ச்சிப் போக்கு சமூகம் எதிர்பார்த்த அளவுக்கு ஈரானில் ஏற்படவில்லை என்பது வெளிப்படை. கடந்த நான்கரை தசாப்தங்களுக்கு பின்னர் ஈரானிய மக்கள் ஒரு முறைமை மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர். முறைமையில் மாற்றம் செய்ய ஆட்சியாளர்கள் தயாரில்லை என்றால் ஆட்சிமாற்றத்தை செய்வதற்கான அடிப்படை உரிமை மக்களுக்கானது.

ஆனால் அதை எப்படி அடைவது என்பதை தீர்மானிப்பது அந்த நாட்டு மக்கள். இதனால் எவ்வாறு 1979 இஸ்லாமிய புரட்சிக்கு மாணவர்கள், இடதுசாரிகள், கலை இலக்கிய படைப்பாளிகள், விவசாயிகள், வர்த்தகர்கள் இன்னும் மக்கள் பங்களிப்பு செய்தார்களோ, அதே போன்று, கடந்த 45 ஆண்டு கால அவதானிப்புகள், அனுபவங்களின் அடிப்படையில் அந்த இறுக்கமான கட்டமைப்பில் இருந்து சமகால உலக ஒழுங்கிற்கான ஒரு மாற்றத்தை வேண்டி போராட்டங்களை மேற்கொண்டனர்.

அன்றைய புரட்சிக் காலத்தில் இருந்த, மக்களால் வெறுக்கப்பட்ட மேற்குலக வாழ்வியல் கலாச்சாரத்தை, மேற்குலக மனித உரிமைகள், ஜனநாயக விழுமியங்கள், பெண்கள் உரிமைகள், தனி மனித கருத்து சுதந்திரம் போன்றவற்றை அவர்களின் போராட்டம் வேண்டி நிற்கின்றது. இது வெறுமனே மேற்குலக எதிர்ப்பு, இஸ்லாமிய மத விழுமியங்களால் மட்டும் மக்கள் ஆட்சி ஒன்றை நிலைக்க வைக்க முடியாது என்பதை காட்டுகிறது. அதற்காக 1979 இஸ்லாமிய புரட்சி ஈரானின் சமூக, பொருளாதார, அரசியல் கட்டமைப்பில் ஏற்படுத்திய முன்னேற்றங்களை குறைத்து மதிப்பிடுவதாக கொள்ளத் தேவையில்லை. புரட்சிக்கு பின்னர் கல்வி, சுகாதாரத் துறைகளில் அதிக முதலீடு செய்யப்பட்டதன் விளைவை அந்த நாடு அனுபவிக்கிறது. 93 வீதமானோர் எழுத்தறிவுள்ளவர்கள். பல்கலைக்கழகங்களில் பெண்கள் 60 வீதம். இந்த வளர்ச்சியூடான வேலையின்மை மற்றும் பணவீக்கம், நாணய பெறுமதியின் வீழ்ச்சி, ஊழல், சுதந்திரமின்மைக்கு எதிராக இளைய தலைமுறை போராட்டம் செய்தனர். இதற்காக ஜனநாயக விழுமியங்களை காலால் மிதித்து ஜனநாயகத்தை மீளுருவாக்கம் செய்கிறோம் என்ற அமெரிக்க மேற்குலக சதியை கண்டும் காணாமல் இருக்க முடியாது.



மக்கள் போராட்டங்களை ஈரானிய இஸ்லாமிய அரசு ஒடுக்கிய விதம் ஏற்புடையதல்ல. ஈரான் சமூகம் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இரண்டாக பிளவுபட்டு நிற்கிறது என்பதையும் மறைப்பதற்கில்லை. கடுமையான இறுக்கம் விறைப்பு முறிவை ஏற்படுத்தும். அதுவே அண்மையில் ஈரானில் இடம் பெற்ற மக்கள் எழுச்சியாக அமைந்தது. அந்த எழுச்சி ஒரு ஆட்சி மாற்றத்தை கோருகிறது. அதை செய்ய வேண்டியது ஈரான் மக்கள். ஆனால் அந்த சந்தர்ப்பத்தை அமெரிக்கா தலைமையிலான மேற்குலக சக்திகள் தங்கள் பொருளாதார, இராணுவ தேவைகளுக்காக பயன்படுதிக் கொள்வதை இலக்காக கொண்டு இறைமையுள்ள நாடொன்றின் மீது படையெடுப்பது ஆதிக்க சக்திகளின் வரலாற்று தவறாக தொடர்கிறது. வியட்நாம், ஆப்கானிஸ்தான், ஈராக், லிபியா...... இந்த தொடரில் வெனிசுவேலா இன்னும் அடுத்தது கியூபா என்று சர்வதேச ஆய்வாளர்கள் சந்தேகிக்கின்றனர். ஐரோப்பாவில் உக்ரைன், தென்கிழக்காசியாவில் தைவான் நிலைமைகளும் இந்த போக்கிற்கும், இலக்கிற்கும் மாறுபட்டவை அல்ல.

ஐக்கிய நாடுகளின் சக உறுப்பு நாடொன்றின் மீதான போர் நடவடிக்கைக்கு ஐ.நா. பிரகடனத்தின்படி அதன் அங்கீகாரம் தேவை. இந்த நடைமுறை இங்கு இஸ்ரேல் அமெரிக்க கூட்டணியால் பின்பற்றப்படவில்லை. அமெரிக்க அரசியல் அமைப்பின்படி அமெரிக்க காங்கிரசின் அங்கீகாரம் தேவை. இதுவும் இடம் பெறவில்லை. ஒரு அமெரிக்க அரசியல் அமைப்பையும், ஐ.நா. பிரகடனத்தையும் வன்முறைக்குள்ளாக்கிய ஒரு இராணுவ நடவடிக்கையாக ஈரான் மீதான தாக்குதல் அமைந்துள்ளது. இதில் வேடிக்கை என்னவென்றால் தானே முதலில் தாக்கி விட்டு தற்பாதுகாப்பிற்காக தாக்கியதாக இஸ்ரேல் கூறுகிறது. ஈரான் மீதான இந்த தாக்குதலை ஆரம்பித்ததே இஸ்ரேல் தான், அதைத் தொடர்ந்து தான் சில நிமிட இடைவெளியில் அமெரிக்கா களத்தில் இறங்கியுள்ளது. இந்த நிலையில் தாக்குதல்கள் ஓய்வதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் நான்கு, ஐந்து வாரங்களை குத்துமதிப்பாக கூறியுள்ளார். இந்த காலக்கெடுவை அமெரிக்க மட்டும் நிர்ணயிக்க முடியாது. மறுபக்கத்தில் ஈரானின் இராணுவ, அரசியல் பலம் பலவீனமே அதைத் தீர்மானிக்கும்.

ஈரானுக்கு அதன் நட்பு வட்டத்தில் இருந்து வெளிப்படையான, நேரடியான உதவிகள் இதுவரை கிடைத்ததாக தெரியவில்லை. அமெரிக்காவையும், இஸ்ரேலையும் கண்டிக்கும் அறிக்கைகளே வெளி வந்துள்ளன. ரஷ்யாவுக்கு உக்ரைன் யுத்தம் தொடர்பில் அமெரிக்க அழுத்தத்தை குறைக்க வேண்டிய சொந்த தேவை இருக்கிறது. டொனால்ட் டிரம்புடன் மோதுவது ரஷ்யாவுக்கு சேதாரத்தை ஏற்படுத்தும் என்று அது நம்புகிறது. சீனாவும் வழமை போல் தனது பொருளாதார நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கிறது. சீனாவுக்கு எரிபொருள் வழங்கும் முக்கிய நாடுகளுள் ஈரானும் ஒன்று.

அமெரிக்க வரிவிதிப்புக்குள் சிக்கியுள்ள சீனாவும் பொருளாதாரத்திற்கு சேதாரம் இல்லாமல் தப்பவே காய்களை நகர்த்துகிறது. வடகொரியாவின் ஆயத உதவி வார்த்தைகளை எந்தளவுக்கு நம்பலாம், அதன் தொழில் நுட்பம் அமெரிக்காவுக்கு ஈடுகொடுக்க கூடியதா? என்பது மறுகேள்வி. சிரியா, அசாத்துக்கு பின்னர் அமெரிக்க அதிபரின் செல்லப்பிள்ளையாக மாறிவிட்டது.

இது நாடுகளின் நிலை என்றால் ஈரானின் சுப்ரீம் தலைவரின் அரவணைப்பில் செயற்பட்ட ஹாமாஸ், ஹிஸ்புல்லா, ஹஜீதி, ஈராக் ஆயுதக் குழுக்களின் நிலை என்ன என்ற கேள்வி எழுகிறது. இவை அனைத்தும் பாலஸ்தீன யுத்தத்தில் பெரும் இழப்புக்களை, மனிதவளம், ஆயுத செறிவு, இன்னும் சொன்னால் மக்கள் ஆதரவையும் இழந்து பலவீனமான நிலையில் உள்ளன. ஹிஸ்புல்லாவின் இஸ்ரேல் மீதான தாக்குதல்களை லெபனான் சட்டரீதியற்றவை என்று கூறியுள்ளது. இஸ்ரேல் ஏவுகணைகளில் இருந்து தான் தப்ப லெபனான் வழிதேடுவதை காட்டுகிறது.. மறு பக்கத்தில் அமெரிக்க நேசசக்திகளான வளைகுடா நாடுகளில் ஈரான் மேற்கொண்டு வரும் தாக்குதல் காரணமாக ஈரான் மீதான அனுதாபம் குறைவடைந்திருப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன. அமெரிக்க இராணுவ இலக்குகள் மட்டும் அன்றி, பொதுமக்களும் ஈரானின் ஏவுகணைகளில் பாதிக்கப்பட்டிருப்பது இதற்கு காரணம். குவைற், சவுதி அரேபியா என்பனவற்றின் எதிர்ப்பை ஈரான் சம்பாதித்து விட்டது. உண்மையில் மத்திய கிழக்கில் ஈரான் இன்றைய நிலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என்றே கொள்ள வேண்டும்.

ஆனாலும், அமெரிக்காவும், எக்ஸைல் ஈரானியர்களும் எதிர்பார்க்கின்ற ஆட்சி வீழ்ச்சிக்கு இவை இன்னும் போதுமான நிபந்தனைகளை நிறைவு செய்வதாக இல்லை. பிரான்ஸ், ஜேர்மனி, இங்கிலாந்து அரச தலைவர்களின் கருத்துக்கள் வழமை போல் ஏகாதிபத்திய அத்துமீறலை தற்பாதுகாப்பாக நியாயப்படுத்துகின்றன. எனினும் பக்கச் சார்பற்ற மேற்குலக ஆய்வாளர்கள் ஈரானின் பலத்தை குறைத்து மதிப்பிடவில்லை என்பது அவர்களின் கருத்துக்களில் தெரிகிறது. ஜேர்மன் அலை (Deutsche welle) ஊடகத்தின் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த இராணுவ ஆய்வாளர் ஒருவர் ஈரான் வெனிசுவேலாவும் அல்ல, 2003 இன் ஈராக்கும் அல்ல என்று கூறியுள்ளார். இதனால் அமெரிக்கா கணக்குப் போட்டுள்ள இராணுவ, அரசியல் இலக்குகளை எட்டுவது அவ்வளவுக்கு இலகுவானதாக அமையாது போகலாம். 2025 யூன் மாதத்தில் ஈரானின் அணு வாயுதங்களை முற்றாக அழித்து விட்டோம் என்று கூறிய டொனால்ட் டிரம்ப் இப்போது அங்கு எதைத் தேடுகிறார் என்று தெரிவித்துள்ளார். ஜோர்ஜ் புஷ் சதாம் ஹசைனின் ஈராக்கில் அணுவாயுதம் தேடிய கதையையும், ஈராக், லிபியா தேசங்களை ஜனநாயக மீட்பு என்று கூறி இருந்ததையும் இல்லாமல் செய்து இருப்பதைப் உலகம் நினைவுகூர வேண்டிய சந்தர்ப்பம் இது. ஈரானில் நிபுணத்துவம் உள்ளது. யுரேனியத்தை பெறுவதற்கான வாய்ப்பும் அதற்கு இருக்கிறது. இதனால் இன்றைய தாக்குதல்கள் ஈரான் தன்னால் ஏவுகணைகளை சுயமாகத் தயாரிக்க முடியும் என்பதை நிரூபிக்கின் றன. உண்மையில் ஓமான் மத்தியஸ்த பேச்சு வார்த்தைகளில் அமெரிக்கா ஈரானிடம் முழுமையான 'சரண டைவை' கோரியது. அதை ஈரான் நிராகரித்தது. பேச்சுவார்த்தைக்கு சமாந்தரமாக, பேச்சுவார்த்தையை சாக்குபோக்கு காட்டி இஸ்ரேலும், அமெரிக்காவும் தாக்குதலுக்கு பின்கதவால் தயாரிப்புக்களை செய்தன.

ஐரோப்பிய மத்திய கிழக்கு இராணுவ ஆய்வாளர்களின் கூற்றுப்படி தரைப் படை நகர்வு இல்லாமல் ஈரானில் இராணுவ, அரசியல் கட்டமைப்புக்களை அழிக்கும் திறனை அமெரிக்கா அடைய முடியாது. இறுதிக்கட்டத்தில் அமெரிக்க இஸ்ரரேல் படையினர் தற்கொலை தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் எச்சரிக்க தவறவில்லை. ஆழமான அமைப்பு ரீதியான ஆட்சிச் சரிவின்றி அமெரிக்க கனவு சாத்தியமற்றது. ஈரானுக்குள் அதிசயிக்கத்தக்க வகையில் ஒரு வெகுஜனப்போராட்டம் நடந்தால் மட்டுமே இது சாத்தியம்.

இப் பதிவை நிறைவு செய்ய லிபியத் தலைவர் கடாபியின் மகள் ஆயிஷா கடாபி ஈரான் மக்களுக்கு விடுத்துள்ள போராட்ட அழைப்பில் உள்ள வாசகம் இது. ஒரு ஓநாயுடன் பேச்சு வார்த்தை நடாத்துவது ஆட்டைக் காப்பாற்றாது. அல்லது நிரந்தர அமைதியைக் கொண்டு வராது.

# தேசிய மக்கள் சக்தி - இன்றைய ஜே.வி.பியை தமிழ்த் தரப்பு புரிந்து கொள்ள வேண்டும்!

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -





தமிழ்த் தரப்பினர் தமது அரசியலைச் சரி செய்ய வேண்டும் என்றால், மெய்யாகவே முன்கொண்டு செல்ல வேண்டும் என்றால், தேசிய மக்கள் சக்தியைப் புரிந்து கொள்ள வேண்டும். தேசிய மக்கள் சக்தியை (அதாவது இன்றைய அரசாங்கத்தை) புரிந்து கொள்ள வேண்டும் என்றால் இன்றைய ஜே.வி.பியைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்றைய ஜே.வி.பியைப் புரிந்து கொள்ள முடியாதோரின் கண்களுக்கு ரோஹண விஜேவீர, சோமவன்ஸ அமரசிங்க போன்ற முகங்களே தென்படும். அந்த முகங்கள் பிரதிபலித்த பழைய —தீவிர இனவாத முகத்தையும் அது மேற்கொண்ட பகிரங்க வெறுப்பு நடவடிக்கைகளுமே நினைவில் எழும். அவ்வாறு தோன்றுவதால் தான் பழைய ஜே.வி.பியை நினைத்துக் கொண்டு தமிழ்த்தரப்புப் பேசுகிறது. எழுதுகிறது தீர்மானங்களை எடுக்கிறது் போராட்டங்களை நடத்துவதற்கு முயற்சிக்கிறது. மொத்தத்தில் தன்னுடைய அரசியலை முன்னெடுக்கிறது. இது தவறான ஒரு வழிமுறை அணுகுமுறை ஆகும். என்பதால் தமிழ்த்தரப்பு மேலும் பின்னடைவையும் தோல்வியையுமே சந்திக்கப் போகிறது என உறுதியாகச் சொல்ல முடிகிறது.

எதிர்த் தரப்பைப் பற்றிச் சரியான கணிப்பீட்டைச் செய்து கொண்டால் தான் அதை எதிர்கொள்ளக் கூடிய அரசியற் பொறிமுறைகளை (தீர்மானங்கள், போராட்டங்கள், தந்திரோபாயங்கள், தொடர்பாடல்கள் போன்றவை) முன்னெடுக்க முடியும். இல்லையெனில் தடுமாற்றங்களும் தவறான நடவடிக்கைகளுமே தொடரும். தடுமாற்றங்களும் தவறான நடவடிக்கைகளும் ஒரு போதும் சரியான விளைவுகளைத் தராது. நற்பயன்கள் எதையும் விளைக்காது. பதிலாக மேலும் பின்னடைவையும் சிதைவையும் தோல்வியையுமே வழங்கும்.

இன்றைய ஜே.வி.பி வேறு. அது நெகிழ்ச்சியும் உரு மாற்றத்தையும் கொண்ட அநுரகுமார திசநாயக்கவின் முகத்தை உடையது. உறுதிப்பாடும் நிதானமும் கொண்ட ரில்வின் சில்வாவின் அகத்தைக் கொண்டது. இந்த இரண்டின் கலவையே தேசிய மக்கள் சக்தி. இன்றைய ஜே.வி.பியைப் புரிந்து கொள்ள முற்படுவோருக்கு இந்தக் கலவையின் நுட்பத்தையும் சிறப்பையும் தெரிந்து கொள்வது இலகுவாக இருக்கும். சுலபமாக ஒன்றைச் சொல்லி இதை விளக்கவும் நிரூபிக்கவும் முடியும்.

உள்நாட்டிலும் சரி, வெளியுலகிலும் சரி மிகச் செல்வாக்கான நம்பிக்கைத் தோற்றமுடைய முகம் அநுரகுமார திசநாயக்கவினுடையது. 'மக்களின் நாயகன்' என்று சொல்லக் கூடிய இன்றைய தலைவர் அநுரகுமார திசநாயக்க. இதை யாரும் மறுக்க முடியாது. வெளியுறவுக் கொள்கை உட்பட எதையும் வெளிப்படையாக உரத்துச் சொல்லாத, இனவாதத்தை வெளிக்காட்டாத செல்வாக்கான இந்த முகத்தை வாய்ப்பாகப் பயன்படுத்தி, அநுரகுமார முதலில் ஓரிடத்துக்குச் செல்வார். அடுத்ததாக அவரைத் தொடர்ந்து ஏனைய அரசுப் பிரதிநிதிகள் அந்த இடங்களுக்குச் செல்வார்கள். அதற்குப் பிறகு ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா செல்வார். உள்நாட்டிலும் இது தான் நடக்கிறது. வெளிநாடுகளிலும் இதுவே நிகழ்கிறது.

அநுர முதலில் இந்தியாவுக்குச் சென்றார். இப்பொழுது ரில்வின் சென்று திரும்பியிருக்கிறார். அநுர முதலில் சீனாவுக்குச் சென்றார். ரில்வின் பிறகு சீனாவுக்குச் சென்று திரும்பினார். அநுர முதலில் ஐரோப்பாவுக்குச் சென்றார். ரில்வின் பின்னர் ஐரோப்பாவுக்குச் சென்று திரும்பினார். அநுர முதலில் வடக்குக் கிழக்கிற்கு வந்து சென்றார். ரில்வின் அதற்குப் பிறகு வடக்குக் கிழக்குக்குச் சென்று திரும்பினார். இந்தப் பயண ஒழுங்கினை யாரும் மீள நினைவு கொண்டு நோக்கலாம்.

அநுரகுமார திசநாயக்க தன்னுடைய செல்வாக்கான அடையாளத்தைக் கொண்டு கடினமான பாதைகளை இலகுவாக்கிக் கொடுக்கிறார். அதைப் பயன்படுத்தி, ஏனையவர்கள் தங்களுடைய அடுத்த கட்டச் செயற்பாடுகளை முன்னெடுக்கிறார்கள். ஆக ஜே.வி.பியின் அல்லது தேசிய மக்கள் சக்தியின் நம்பிக்கை நட்சத்திரமும் அரசியல் முதலீடும் அநுரகுமார திசநாயக்கவே. அதை அவரும் மிகச் சரியாகப் பேணிக்கொள்கிறார். மிகச் சாதாரணரைப் போன்ற ஒரு தோற்றத்தில் மிக வலிமையான மனிதராக தலைவராக அநுர தொழிற்படுகிறார். அநுரகுமார திசநாயக்கவுக்கு துணை செய்வதைப்போல அல்லது தேசிய மக்கள் சக்தியின் பயணத்துக்கு வலுச் சேர்ப்பதைப் போல கூடவே பிரதமர் ஹரிணி அமரசூரியவும் விஜித ஹேரத்தும் இருக்கிறார்கள். கடந்த ஓராண்டைக் கடந்த ஆட்சிக் காலத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சர்வதேச ரீதியாக வலுவான உறவைக் கட்டியெழுப்பியிருக்கிறது. நன்மதிப்பைப் பெற்றுள்ளது.

ஒரு வகையான நூதனமான அரசியலைக் கையாண்டு, தன்னைப் பாதுகாத்துக் கொண்டு முன்செல்கிறது தேசிய மக்கள் சக்தி. இதற்கு இசைவாகத் தன்னை நெகிழ்ந்து கொடுக்கிறது ஜே. வி. பி. ஆனால், தேசிய மக்கள் சக்திக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் பெரியதொரு உட்போர் நடந்து கொண்டிருப்பதாக பரவலாகப் பேசப்படுவதுண்டு. இதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எதிர் கொள்ள முடியாமலிருக்கும் ஆற்றாமையின் வெளிப்பாடு. இரண்டாவது, தேசிய மக்கள் சக்தியையும் ஜே.வி.பியின் இன்றைய போக்கையும் புரிந்து கொள்ளத் தவறுவதன் விளைவு.

இந்த இரண்டினாலும் தேசிய மக்கள் சக்திக்கோ ஜே.வி.பிக்கோ எந்தப் பாதிப்புமில்லை. இங்கே வேடிக்கை என்னவென்றால், தங்களுடைய கட்சிக்குள் அல்லது அரசியற் கூட்டுக்குள் எந்தப் பிரச்சினையுமில்லை. தேசிய மக்கள் சக்திக்குள்தான் குத்து வெட்டுகளும் இழுபறிகளும் என்பதைப் போல கதை விடுவது தான்.

எல்லாக் கட்சிகளுக்குள்ளும் உள் முரண்பாடுகளும் கொதி நிலைகளும் இருப்பது வழமை. உள் முரண்பாடுகளால் தமிழரசுக் கட்சி நீதிமன்றத்திலேயே போய் நிற்கிறது. ஐ.தே.க உள் முரண்பாட்டினால் நீண்டகாலம் இழுபறிப்பட்டதை யாரும் மறக்க மாட்டார்கள். இனித் தாக்குப் பிடிக்க முடியாது என்ற நிலையில் தான் ரணில் — சஜித் அணி என்று பிளவு ஏற்பட்டது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உள் முரண்பாடுகளும் உட்கொதிப்புகளும் உலகறிந்தவை. தமிழ் முற்போக்குக் கூட்டணிக்குள், முஸ்லிம் காங்கிரசுக்குள் எல்லாம் உள் முரண்பாடுகள் அல்லது கொதிப்பான நிலை இருந்தபடியால் தான் அவற்றிலிருந்து சிலர் வெளியேறும் நிலை உருவானது. விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் நிகழ்ந்த உள்முரண்பாடுகள் பல.

உமாமகேஸ்வரன் பிரபாரன் முரண்பாடு, மாத்தயா பிரபாகரன் முரண்பாடு, கருணா பிரபாகரன் முரண்பாடு என பல அடுக்குகள் உண்டு. முரண்பாடும் கொதிப்புகளும் எந்தக் கட்சியிலும் எந்தக் கூட்டிலும் இருக்கும். அதைக் கடந்து, தமது அரசியல் முன்னெடுப்பில் குறித்த தரப்பு எப்படிச் செயற்படுகிறது? எப்படி வெற்றிகளைப் பெறுகிறது? எப்படி முன்செல்கிறது என்பதே அரசியல் பெறுமானமும் அரசியல் வெற்றியுமாகும்.

தேசிய மக்கள் சக்தியும் ஜே.வி.பியும் தமக்குள் உள்ள முரண்பாடுகளை எப்படித் தீர்த்துக் கொள்கின்றன என்று வெளியே தெரியவில்லை. அவற்றுக்குள் நிகழ்ந்து கொண்டிருக்கும் கொதிப்புகளின் தன்மையைச் சரியாக உணர முடியவில்லை. நிச்சயமாக புகைச்சல்களும் முரண்களும் இருந்தே தீரும். ஆனால், அரசியல் ரீதியாக இரண்டும் முன்செல்வதை யாரும் மறுக்கவே முடியாது. இதையே நாம் கவனிக்க வேண்டும்.

இதற்கு முதற்காரணம் வரலாற்றிலிருந்து படிப்பினைகளைப் படித்துக் கொண்ட ஒரு பேரமைப்பாக ஜே.வி.பி இன்றிருப்பதாகும். தன்னுடைய லட்சியவாதத்துக்கும் நடைமுறைகளுக்கும் இடையிலான தூரத்தையும் (இடைவெளியையும்) முரண்பாடுகளையும் இயலாமைகளையும் அது கற்றுள்ளது. அப்படிக் கற்றுக் கொண்டபடியால் தான் அதனால் தன்னை நெகிழந்து கொடுக்க முடிந்திருக்கிறது. அதற்கு ஏராளம் உதாரணங்கள் உண்டு. அண்மைய (இந்த வார) உதாரணம், ரில்வின் சில்வாவின் இந்தியப் பயணமும் அது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்களுமாகும்.

இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பிய ரில்வினிடம் 'இந்து' பத்திரிகை கேள்வி எழுப்பிய போது, ''ஜே.வி.பி இந்தியாவுக்கு எதிரானது என்று நீண்ட காலமாக நிலவி வரும் கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டி வந்து விட்டது. காலப்போக்கில் எமது நிலைப்பாட்டில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார் ரில்வின். மட்டுமல்ல, கொழும்பு 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை எழுப்பிய ஜே.வி.பியின் முதல் தலைவரான ரோஹண விஜேவீர இந்தியாவுக்கு எதிராக எடுத்த நிலைப்பாட்டை நீங்கள் கைவிட்டு விட்டீர்களா? என்ற கேள்விக்குப் பதில் சொல்லும் போது, இலங்கைக்குப் பாதகமாக அமையக் கூடிய கொள்கைகளைக் கடைப் பிடித்த இந்திய அரசாங்கங்களை எதிர்த்தோமே தவிர, நாம் ஒரு போதுமே இந்தியாவை எதிர்க்கவில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

இது எதைக்காட்டுகிறது? முந்திய ஜே.வி.பி யிடமிருந்து இப்படி ஒரு சொல் வருமா? அதைப்போல இன்றைய ஜே.வி.பியிடமிருந்து முன்பைப் போலக் கடுமையான ஒரு வார்த்தை வரவே வராது. இது தான் படிப்பினை. இது தான் மாற்றம். இது தான் விவேகம். இதுதான் வெற்றிக்கான வழிமுறை.

புறச் சூழலின் யதார்த்தத்தை ஜே.வி.பி கற்றுத் தேர்ந்துள்ளது. அதனால் தான் ரில்வின் இந்தியாவைக் குறித்து அவ்வாறு சொல்ல வேண்டியிருக்கிறது. மட்டுமல்ல, இந்தியாவுக்கு அவர் பயணம் செய்தது கூட யதார்த்தத்தை உணர்ந்ததன் விளைவே. இந்தியாவை தூர வைத்துக் கையாள முடியாது என்று அவருக்குத் தெரியும்.

அதுமட்டுமல்ல, ரில்வினின் இந்தியப் பயணம் ஜே.வி.பிக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் மிகப் பெரிய வெற்றியே. ஒன்று, நல்லுறவை வலுப்படுத்துவதில். இரண்டாவது, பொருளாதார உதவி மற்றும் அபிவிருத்திக்கான பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதில். மூன்றாவது, இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக இந்தியாவின் அழுத்தத்தைக் குறைப்பதில்.

ஏற்கனவே அநுரகுமார திசநாயக்க,
(18ம் பக்கம் பார்க்க)

# தேசிய மக்கள் சக்தி - இன்றைய ஜே.வி.பியை தமிழ்த் தரப்பு புரிந்து கொள்ள வேண்டும்!

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



(17ம் பக்கத் தொடர்ச்சி) ஹரிணி அமரசூரிய போன்றவர்கள் சென்று நிலைமையைச் சுமுகமாக்கியிருந்தனர். இப்பொழுது ரில்வின் இந்தியாவுக்குப் போய் வந்திருக்கிறார். இப்படிப் பல உயர்மட்டத் தலைவர்களும் இந்தியாவுக்கு விஜயம் செய்வதை இந்தியாவும் வரவேற்கிறது. இதில் இரண்டு தரப்புக்கும் வெற்றியே உண்டு. இந்திய எதிர்ப்பைத் தன்னுடைய வரலாறாகக் கொண்ட ஒரு இயக்கத்தை — அதனுடைய ஆட்சியைத் தன் வசப்படுத்தியுள்ளது இந்தியா. அதைப் போல, தான் முந்திய நிலைப்பாட்டைப் போல இந்திய எதிர்ப்பில் தான் இல்லை என்று காட்டுவதன் மூலம் இந்தியாவின் சந்தேகத்தையும் பகைமையையும் இல்லாமற் செய்துள்ளது ஜே.வி.பி. கூடவே தனக்கு ஏற்படவுள்ள நெருக்கடிகளையும் அழுத்தத்தையும் குறைத்துள்ளது அல்லது இல்லாமற் செய்துள்ளது.

ஆக இந்தியா, மேற்குலகம், சீனா, யப்பான், ஐ.எம்.எவ் என அனைத்துத் தரப்புகளையும் கையாளும் நுட்பத்தை தேசிய மக்கள் சக்தியும் ஜே.வி.பியும் கற்றுக் கொண்டுள்ளன. 'டு போர்ட் அரசாங்கம் ஓராண்டைத் தாக்குப் பிடிப்பதே கஸ்ரம்' என்று கேலி செய்த ரணில் விக்கிரமசிங்கவைக் காணவேயில்லை.

இப்படியெல்லாம் சொல்லும் போது, தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் விழுந்தடித்துக் கொண்டு, மகிழ்ச்சி ஆரவாரம் செய்ய வேண்டியதில்லை. அப்படி அவர்களால் செய்யவும் முடியாது. அதைப்போல தேசிய மக்கள் சக்தியை எதிர்ப்பவர்கள், இந்தக் கட்டுரை தேசிய மக்கள் சக்தியையும் ஜே.வி.பியையும் கண்ணை மூடிக் கொண்டு ஆதரிக்கிறது என்று கொதிக்கவும் தேவையில்லை. அப்படியான எந்த ஆபத்தையும் இந்தக் கட்டுரை உருவாக்கவில்லை.

ஏனெனில் நாம் மேலும் ஊன்றிக் கவனிக்க வேண்டிய சங்கதிகள் உள்ளன. மேலே சொல்லப்பட்டவையெல்லாம் தேசிய மக்கள் சக்தி ஜே.வி.பி ஆகியவற்றின் புதிய தோற்றமும் புதிய அணுகுமுறைகளும் என்பது உண்மையே. அதே அளவுக்கு இவற்றின் இன்னொரு பக்கமும் உண்டு.

முக்கியமாக வெளிநாட்டில் தம்முடைய உறவை நல்லபடி பார்த்துக் கொள்ள முயற்சிக்கும் தேசிய மக்கள் சக்தியும் ஜே.வி.பியும் உள்நாட்டில் சிறுபான்மைத் தேசிய இனங்களின் விடயங்களில் சரியாகச் செயற்படவே இல்லை. அதனால் தமிழ்பேசும் மக்கள் ஏமாற்றத்திற்குள்ளாகியுள்ளனர்.

வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் பேசும் சமூகத்தின் மத்தியிலும் தேசிய மக்கள் சக்திக்கான ஆதரவுத் தளம் ஒன்று உருவாகியுள்ளது என்பதை வைத்துக் கொண்டு, குறித்த சமூகங்களின் அரசியல் உரிமைகளையும் அபிலாஷைகளையும் புறக்கணிக்கவும் முடியாது. அதை வேறு விதமாக இனவாத அடிப்படையில் கையாளவும் கூடாது. ஆனால், அப்படித்தான் தேசிய மக்கள் சக்தியும் ஜே.வி.பியும் தவறாகச் செயற்படுகின்றன.

இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பற்றி அரசாங்கம் வாயே திறக்கவில்லை. குறைந்த பட்சம் மாகாணசபைகளுக்கான தேர்தல் பற்றி ஜனாதிபதியோ பிரதமரோ எத்தகைய உத்தரவாதத்தையும் வழங்கவில்லை. இனப்பிரச்சினை தீர்வு உள்ளடங்கலாக, பல பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்கு ஏதுவான அரசியலமைப்பை மாற்றம் செய்வதற்கு ஆலோசிக்கப்படுவதாகச் சொல்லப்பட்டாலும். அது தொடர்பாக மேலும் எந்த நடவடிக்கையையும் காணவில்லை. ஏன், பொருளாதார மறுசீரமைப்போ, புதிய பொருளாதாரக் கொள்கையோ, மாற்றுப் பொருளாதார விருத்தித் திட்டங்களோ உருவாக்கப்படவும் இல்லை.

ஆக மொத்தத்தில் முந்திய அரசாங்கங்களைப் போல சிங்களப் பெரும்பான்மையினரின் விருப்பத்தை நிறைவேற்றுவதிலேயே அரசாங்கம் (ஜே.வி.பியும் தேசிய மக்கள் சக்தியும்) அக்கறையாக உள்ளது. ஆனாலும் அப்படிக் காட்டிக் கொள்ளாமல் முற்போக்கு முலாம் பூசிச் சிரிக்கிறது. இது கபடத்தனமாகும். இந்தக் கபடத்தனத்தோடு வெற்றிகரமாக ஆட்சியை நடத்தலாம். ஆனால், நாட்டை அமைதியாக்கவோ முன்னேற்றவோ முடியாது.

இப்பொழுது எல்லாமே சரியாக நடப்பதாக முன்னோக்கிச் செல்வதாக ஒரு தோற்றம் காண்பிக்கப்படுகிறது. இது தான் ஜே.வி.பி தேசிய மக்கள் சக்தி ஆகியவற்றின் வெற்றியாகும். அடிப்படையில் எந்த மாற்றங்களையும் செய்யாமல், மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. மாற்றம் நிகழ்ந்து விட்டது என்று நம்ப வைக்கப்படுகிறது. System Change என்பதற்கே மக்கள் தேர்தல் ஆணையை தேசிய மக்கள் சக்திக்கு வழங்கினார்கள். அந்த ஆணையின் அடிப்படையில் அநுர குமார அணி எந்த வகையில் System Change ஐச் செய்துள்ளது? அல்லது அப்படியொரு மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கிறது? இதை தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் தெளிவாகச் சொல்ல வேண்டும்.

இப்பொழுது நடக்கும் இந்த அரசியல் வித்தைக்கு எவ்வளவு காலம் ஆயுள் என்று உடனடியாகச் சொல்லத் தெரியவில்லை. ஆனால், தந்திரங்களுக்கும் சூதான அரசியலுக்கும் மயானம் வெகு தொலைவில் இல்லை.

இப்பொழுது நாம் இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் சொல்லப்பட்டதை மீள நினைவுபடுத்திக் கொள்ளலாம். தமிழ்த் தரப்பினர் தமது அரசியலைச் சரி செய்ய வேண்டும் என்றால், மெய்யாகவே முன்கொண்டு செல்ல வேண்டும் என்றால், தேசிய மக்கள் சக்தியைப் புரிந்து கொள்ள வேண்டும். தேசிய மக்கள் சக்தியை (அதாவது இன்றைய அரசாங்கத்தை) புரிந்து கொள்ள வேண்டும் என்றால் இன்றைய ஜே.வி.பியைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதை.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகவும் கைப்பற்றிய அதிகாரத்தைத் தக்க வைப்பதற்காகவும் ஜே.வி.பி தன்னை நெகிழ்த்தியுள்ளது. 'ரில்வின் இந்தியாவிடம் சரணடைந்து விட்டார்' என்று கூடச் சிலர் கடுந்தொனியில் பேசலாம். கைகொட்டிச் சிரிக்கலாம். அரசியலில் என்னவும் நடக்கலாம். எப்படியும் நடக்கலாம். அதிகாரத்துக்கு வேண்டியவை எவையோ அவற்றைச் செய்ய வேண்டும் என்ற யதார்த்தமே இங்கே முக்கியமானது. அதையே ஜே.வி.பியும் தேசிய மக்கள் சக்தியும் செய்கின்றன.


இனப்பிரச்சினை தீர்வுக்கும் மாகாண சபைத் தேர்தலுக்கும் இந்தியாவின் ஆதரவையும் உதவியையும் பெற வேண்டிய தமிழ்த் தரப்பு இந்தியாவைக் கையாளத் தெரியாமல் தடுமாறுகிறது. இலங்கை அரசுடன் நெருங்கவும் முடியாமல் திணறுகிறது. போருக்குப் பிறகான அரசியலை எப்படி முன்னெடுப்பது? இதுவரையான அரசியற் பயணத்தில் கற்றுக் கொண்டது என்ன? பெற்றுக் கொண்டது என்ன? இலங்கையில் மெய்யாகவே சாத்தியப்படக்கூடிய அரசியற் தீர்வு என்ன? அதை எப்படிப் பெற்றுக் கொள்ளது? சர்வதேச ஆதரவை எப்படிப் பெறுவது? அதனுடைய சாத்தியப்பாடுகளும் வரையறைகளும் என்ன? என எதைப்பற்றியும் அது படித்தறியவும் இல்லை. பட்டறியவும் இல்லை. இப்பொழுதும் அந்தப் பழைய நைந்துபோன சில பல சொற்களை வைத்துக் கொண்டு வார்த்தைகளால் அரசுக்கு எதிராகப் பீரங்கிகளை அடிக்கின்றன. தினமும் சமூக வலைத்தளங்கள், பத்திரிகைகள், ஊடக மாநாடுகளில் எல்லாம் குற்றச் சாட்டுப் போஸ்டர்கள் ஒட்டப்படுகின்றன. அதாவது தாம் எந்த நிலையிலும் நெகிழவோ மாறவோ மாட்டோம் என்ற விதமாக தோற்றம் காட்டுகின்றனர் தமிழ் அரசியற் தரப்பினர். இது சுத்தமான அரசியற் கோமாளித்தனமாகும். நெகிழவோ மாறவோ மாட்டோம் என்ற பிடிவாதத்தினால் தான் விடுதலைப்புலிகள் தம்மையே பலியிட நேர்ந்தது. அதற்கான விலையை இன்னும் பல ஆண்டுகளுக்குத் தமிழ் மக்கள் கொடுக்க வேண்டியுள்ளது. அந்தக் காலத்தை நீடிப்பதும் குறைத்துக் கொள்வதும் தற்பொழுது அரங்கில் உள்ள தமிழ்க் கட்சிகளின் கைகளில்தான் உள்ளது.



ஆனால், அந்தத் தலைமைகளோ வரலாற்றிலிருந்தும் எதையும் படிக்கத் தயாரில்லை.(22ம் பக்கம் பார்க்க)

# நல்ல கண்ணுகளும் தமிழ்கூறும் நல்லுலகும்!

தமிழ்நாட்டின் மூத்த கொம்யூனிஸ்ட் தலைவராகிய நல்லகண்ணு அண்மையில் இயற்கை எய்தினார்.தன் பெயருக்கு ஏற்ப நல்ல கண்ணுவாக வாழ்ந்தவர் அவர். உண்மையான கொம்யூனிஸ்ட் ஒரு சன்னியாசியைப் போல இருப்பார். நல்ல கண்ணு அப்படித் தான் வாழ்ந்தார். அவர் சொத்துச் சேர்க்கவில்லை. புகழுக்கோ பதவிக்கோ போகங்களுக்கோ ஆசைப்படவில்லை. எளிமையாக வாழ்ந்தார். அவருடைய எளிமையை. சந்நியாசத்தை தமிழ்நாட்டில் யாரும் கேள்விக்கு உட்படுத்தியதில்லை. அவருடைய உடலுக்கு அஞ்சலி செலுத்திய தமிழ்நாட்டு முதலமைச்சர் ஸ்டாலின். அஞ்சலி செலுத்திய பின் அவரை வாழ்நாள் போராளிக்கு வீர வணக்கம் என்று கூறி முழக்கமிட்டார்.



இந்த இடத்தில் ஒரு முக்கிய கேள்வி எழுகிறது. தமிழ்நாட்டின் முதலமைச்சரால் வாழ்நாள் போராளி என்று அழைக்கப்பட்ட ஒருவர். தன் வாழ்நாளில் என்றைக்குமே தமிழ்மக்களால் தமது பிரதிநிதியாக தெரிவு செய்யப்படவில்லை. ஏன்?

மேற்கு வங்கத்தில் திரிபுராவில் மகத்தான கொம்யூனிஸ்ட் தலைவர்கள் மக்களால் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். திரிபுராவில் அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட மிக எளிமையான. ஒரு சன்னியாசி போல வாழ்ந்த முன்னாள் முதலமைச்சர் ஒருவரைப் பற்றி சமூக வலைத்தளங்களில் வாசிக்கலாம். அவர் எவ்வளவு எளிமையாக வாழ்ந்தார்? தனக்கென்று சொத்துக்களை சேர்த்துக் கொள்ளவில்லை. அவருடைய மனைவி முச்சக்கர வண்டியில் தான் அலுவலகத்துக்கு போவார் என்றெல்லாம் போற்றப்படுகிறது.

இந்தியாவில் மகத்தான கொம்யூனிஸ்ட் தலைவர்கள் இருந்தார்கள் இருக்கிறார்கள் .அவர்களில் ஒருவர் தான் நல்லகண்ணு.அவர் நூற்றியொரு வயதுவரை வாழ்ந்தார். ஆனால் போட்டியிட்ட தேர்தல்களில் அவர் வெற்றி பெறவேயில்லை. தமிழ்நாட்டு மக்கள் அவரை தமது பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கவில்லை? ஏன்?

வாழ்நாள் போராளிகளாக வாழ்ந்த. வாழ்கின்ற நல்லகண்ணுக்கள் ஏன் தமிழ் மக்களின் கண்களுக்கு தெரிவதில்லை? கெட்ட கண்ணுகள் தானே அதிகமாகத் தெரிகிறார்கள்? தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகளில் எத்தனை பேர் நல்லகண்ணுகள்? எத்தனை பேர் கெட்ட கண்ணுகள்? தமிழ் வாக்காளர்கள் ஏன் பெரிய அளவுக்கு நல்லகண்ணுகளை தமது தலைவர்களாகத் தெரிந்தெடுப்பதில்லை?

திரை நட்சத்திரங்களுக்காகத் தீக்குளிக்கும் மக்கள்.திரை நட்சத்திரங்களுக்காக தலையை மழிக்கும் பெண்கள். திரை நட்சத்திரங்களுக்காக மீசையை மளிக்கின்ற ஆண்கள். நாக்கை. விரலை வெட்டுகின்ற. விரதம் இருக்கின்ற.படித்த. படிக்காத ரசிகர்களைக் கொண்ட ஒரு சமூகம். நல்லகண்ணுகளை ஏன் தேர்ந்தெடுக்காமல் விடுகிறது?

ரணா படத்தில் வரும் சீக்கிய போலீஸ் அதிகாரி கூறுவது போல தமிழ் மக்களில் அதிகமானவர்கள் சென்ரிமென்ரல் இடியட்களா? நல்லகண்ணுகளை தேர்ந்தெடுக்க அவர்களால் முடியாதா?

அல்லது நல்லகண்ணுகளால் வெற்றிகரமாக தேர்தல் அரசியலை முன்னெடுக்க முடியவில்லையா? ஏன் முடியவில்லை?

ஈழத் தமிழ் அரசியலில் நான் திரும்பத் திரும்பக் கூறும் ஓர் உதாரணம் உண்டு. நல்ல தங்கத்தை வைத்து ஆபரணங்களை. நகையைச் செய்ய முடியாது. அதை வேண்டுமென்றால் அயர்ன் சேவில் பாதுகாக்கலாம். தங்கத்தை அதன் பிரயோக நிலைக்கு கொண்டு வருவது என்றால் அதாவது ஆபரணங்கள் செய்வதென்றால் அங்கே ஏதோ ஒரு விகிதம் செப்பைக் கலக்க வேண்டும்.அதாவது தூய தங்கத்தை வைத்து ஆபரணங்களைச் செய்யமுடியாது. அதன் தூய்மையைக் கெடுக்கும் செப்பைக் கலப்பதன் மூலம் தான் அதனை மக்கள் மயப்படுத்தலாம்.

இது தங்கத்துக்கு மட்டுமல்ல. நல்ல கண்ணுகளுக்கும் பொருந்தும். நூறு விகிதம் நல்லகண்ணுகளாக இருந்தால் தேர்தல் அரசியலில் இறங்க முடியாது. இறங்கினாலும் வெல்ல முடியாது. தேர்தல் அரசியலில் வெல்வதற்கு சாதி வேண்டும் சமயம் வேண்டும் ஊர் வாதம் வேண்டும் பிரதேச வாதம் வேண்டும் அல்லது இதுபோல ஏதோ ஒரு குருட்டு சென்ரிமென்ரல் வாதம் வேண்டும். ஆனால் நல்லகண்ணுகள் அப்படிப்பட்ட தீய தேர்தல் உபாயங்களை நோக்கிச் செல்ல மாட்டார்கள். மக்களுக்கு விழிப்பூட்ட வேண்டும் மக்கள் மத்தியில் கருத்தாக்கம் செய்ய வேண்டும் அதன் மூலம் கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் அது சக்தியாக உருவெடுக்கும் என்று அவர்கள் நம்புவார்கள் உழைப்பார்கள்.

ஆனால் துயரம் என்னவென்றால். ஆசிய. ஆபிரிக்க. லத்தீன் அமெரிக்க நாடுகளில் மட்டுமல்ல. உயர்ந்த ஜனநாயகங்கள் என்று போற்றப்படும் மேற்கு நாடுகளிலும் கூட கருத்து மக்களைப் பற்றிக் கொள்வதை விடவும். அறிவு மக்களைப் பற்றிக் கொள்வதை விடவும். உணர்ச்சிகரமான நிறம்.இனம்.மதம். மொழி போன்ற குருட்டு விசுவாசங்கள் தான் எளிதாகப் பற்றிக் கொள்கின்றன.

ஜனநாயகப் பரப்பில் அறிஞர்களும் நல்லகண்ணுகளும் அரிதாகவே தெரிவு செய்யப்படுகிறார்கள். அவர்களுக்கு நடிக்கத் தெரியாது. அவர்களுக்குப் பொய் சொல்லத் தெரியாது. அவர்களுக்கு வேஷம் போடத் தெரியாது. அதாவது அவர்கள் மக்களை ஏமாற்ற விரும்பவில்லை. இங்கே பிரச்சினை அவர்களுடைய நேர்மை தான் அவர்களுடைய ஒழுக்கம் தான் அவர்களுடைய பற்றின்மைதான்.

நடிகர்கள் திரையிலும் நடிக்கிறார்கள் அரசியலிலும் நடிக்கிறார்கள். ஆனால் அறிஞர்களோ. நல்லக்கண்ணுகளோ மக்களை ஏமாற்ற விரும்புவதில்லை. அதனால் தேர்தல் அரசியலில் அவர்கள் பெரும்பாலும் தோற்கிறார்கள்.

அது மட்டுமல்ல. அதைவிட முக்கியமாக தேர்தல் அரசியல் ஒரு தொழிலாக வளர்ந்து விட்டது. அதற்குரிய தொழில் திறன்களை கொண்டிருப்பவர்கள் தான் அதில் வெல்லலாம். எல்லா நல்லகண்ணுகளுக்கும் அந்தத் தொழில் திறன் இருப்பதில்லை.

இது தமிழகத்துக்கு மட்டுமல்ல. தமிழகத்திலிருந்து சிறிய பாக்கு நீரிணையால் பிரிக்கப்பட்டிருக்கும் ஈழத்தமிழர்கள் மத்தியிலும் நிலைமை அது தான். அரசியலை அறிவியல் ஒழுக்கமாகப் பயில்பவர்கள். மக்களைக் கருத்தாக்கம் செய்ய வேண்டும். விழிப்பூட்ட வேண்டும் என்று உழைப்பவர்கள். தேர்தல் அரசியலுக்கு வரத் தயங்குகிறார்கள்.தேர்தல் அரசியலுக்குள் வந்தால் தங்களுடைய தூய தங்கத் தன்மை கெட்டுவிடும் என்றும் பயப்படுகிறார்கள். சொம்பு கலந்த ஒரு வாழ்க்கையை அவர்கள் விரும்பவில்லை. செம்பு கலந்த அரசியலுக்கும் அவர்கள் தயாரில்லை.

இந்தத் தூய்மைவாதம்– அப்படித்தான் அதை கூறவேண்டும்– காரணமாகத் தான் ஒப்பீட்டளவில் நல்ல கண்ணுகளாக இருப்பவர்கள் தேர்தல்களில் வெல்ல முடியாமல் இருக்கிறார்கள். கெட்ட கண்ணுக்கள் தான் பெரும்பான்மை தமிழ் மக்களின் கண்களுக்குத் தெரிகிறார்கள். கெட்ட கண்ணுகள் தான் தமிழ் மக்களுக்குக் கவர்ச்சியாகத் தெரிகிறார்கள்.

அல்லது ஓரளவுக்கு தங்களை தேர்தல் அரசியலில் சுதாகரித்துக் கொள்ளத் தயாராக காணப்படும் நல்லகண்ணுகள் மக்கள் பிரதிநிதிகளாக வருகிறார்கள்.

இலங்கைத் தீவில் சில ஆண்டுகளுக்கு முன் நடந்த மக்கள் எழுச்சிகளை பின்னின்ற இயக்கியது முன்னிலை சோசலிசக் கட்சியும் குறிப்பிட்ட சில மக்கள் அமைப்புகளும் ஆகும். ஆனால் இந்த அமைப்புகள் ஒன்றிணைந்து உருவாக்கிய குடைச் சின்னத்தின் கீழ் போட்டியிடும் கூட்டமைப்பானது தேர்தலில் வெற்றி பெற முடியவில்லை. அது அவமானகரமான ஒரு தோல்வி என்பதை விடவும் ஆபத்தான தோல்வி. அந்தக் கூட்டமைப்பு இன்றுவரை தேர்தல் அரசியலில் வெற்றி பெற முடியவில்லை.

ஆனால் அந்த மக்கள் எழுச்சிகளின் கனிகளை தேர்தல் மேடைகளில் பொருத்தமாக மொழி பெயர்க்கத் தெரிந்த அனுர ஜனாதிபதியாக வந்து விட்டார். தேசிய மக்கள் சக்தி ஆளுங் கட்சியாக வந்துவிட்டது.

அப்படித் தான் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போர்க்களத்தில் நின்று அவயவங்களை இழந்த முன்னாள் இயக்கத்தவர்கள் தேர்தல் கேட்டார்கள். அவர்களுக்காகப் பிரச்சாரம் செய்த முன்னால் இயக்கத்தவர் ஒருவர் சொன்னார். குறைந்தது 15.000 வீடுகளுக்கு நாங்கள் ஏறியிறங்கி இருப்போம் என்று. ஆனால் அந்த வேட்பாளர்களுக்கு கிடைத்த வாக்குகளோ கிட்டத்தட்ட 2000 தான். தங்களுக்காகப் போராடப் போய்.தங்களுக்காக உறுப்புகளை இழந்தவர்களுக்கு தமிழ்மக்கள் கொடுத்த வாக்குகள் அவை.


நல்லகண்ணுகள் தூய நல்லகண்ணுகளாக இருக்கும் வரை அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது. அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவது என்பது 100வீத தூய்மையான ஒரு நடவடிக்கையும் அல்ல. அது ஒரு வகைச் சூழ்ச்சி ஒரு வகைச் சதி ஒரு வகை தந்திரம் ஒரு வகை வியாபாரம்ஒரு வகை தொழில் தேர்ச்சி. நல்லகண்ணுகள் அதைக் கற்றுத் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் பெரும்பாலான நல்லகண்ணுகள் அதைக் கற்றுக்கொள்ளத் தயாரில்லை. தங்களைத் தூய தங்கங்களாக வைத்துக் கொண்டிருக்கவே அவர்கள் விரும்புகிறார்கள்.

நல்லகண்ணுவின் மறைவு தமிழகத்தில் அதிர்வுகளை ஏற்படுத்திய அதே காலப்பகுதியில் நடிகர் விஜேயினுடைய மனைவி விவாகரத்துக் கேட்டு நீதிமன்றத்துக்குச் சென்ற செய்தி வெளியே வந்தது.

அந்தச் செய்தி நல்ல கண்ணுவின் மறைவுச் செய்தியை விடவும் அதிகம் வைரல் ஆகியது. தமிழ்ப் பொதுப் புத்திக்கு விழிப்பூட்டாத நடிகர்களைப் பற்றிய செய்திகள் எளிதாக வைரல் ஆகின்றன. ஆனால் தமிழ்ப் பொதுப் புத்திக்கு விழிப்பூட்ட வேண்டும். தமிழ்ப் பொதுப்புத்தியை கருத்தாக்கம் செய்ய வேண்டும் என்று கனவு காணும் நல்லகண்ணுகளை தமிழ்ப் பொதுப் புத்தி எப்பொழுது போற்றும் கொண்டாடும்?

# நாம் தமிழர் கட்சியும் நமது தமிழ்க்கட்சிகளும்

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- க. அருந்தவபாலன்



தமிழ்நாட்டில் கடந்தவார இறுதியில் சீமான் தலைமையிலான நாம் தமிழர்கட்சி பாரிய மாநாடு ஒன்றை நடத்தியதுடன் அம்மேடையில், வரவிருக்கும் அம் மாநிலத் தேர்தலுக்கான 234 வேட்பாளர்களையும் அறிமுகப்படுத்திய செய்திகளையும் காட்சிகளையும் பார்க்க முடிந்தது. அம்மாநாட்டின் சிறப்புத் தொடர்பாக தமிழ் நாட்டில் மட்டுமன்றி



இந்தியாவில் தேசிய அளவிலும் உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்கள் மத்தியிலும் இன்றுவரை சிலாகித்துப் பேசப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. அக்கட்சியின் கொள்கைகள், வெளிப்பாடுகள் தொடர்பான நேர்மறையான, எதிர்மறையான விமர்சனங்களை ஒரு புறம் வைத்து விட்டு அக்கட்சியின் தலைமைத்துவம், அதன் வளர்ச்சி, கட்சித் தொண்டர்களின் பண்பு மற்றும் குறித்த மாநாட்டின் ஒழுங்கமைப்பு போன்ற விடயங்களை நமது தமிழ்க்கட்சிகளின் செயற்பாடுகளுடன் ஒப்பு நோக்குவதே இப்பத்தியின் நோக்கமாகும்.

நாம் தமிழர் கட்சி 2010 இல் இயக்குனரும் நடிகரும் தமிழ்த் தேசியவாதியுமான சீமான் தலைமையில் உருவாக்கப்பட்டது. எனினும் அக்கட்சி 2016 ஆண்டிலேயே முதன் முதல் தேர்தலில் போட்டியிட்டது. அவ்வாண்டில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட்டு 1.1வீத வாக்குகளைப் பெற்றது. பின்னர் அதே போல 2021 இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அக்கட்சியின் வாக்கு எண்ணிக்கை 6.7வீத ஆக உயர்ந்தது. அதே போன்று 2024 நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அதன் வாக்கு எண்ணிக்கை 8.2வீத ஆக அதிகரித்துள்ளது. அக்கட்சி தனது மக்கள் ஆதரவுத்தளத்தை 8 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 8 மடங்காக உயர்த்தியுள்ளதைக் கண் முடியும்.

தமிழ்நாட்டு அரசியலில் அக்கட்சியினது இந்த வளர்ச்சி என்பது ஒரு சாதனையாகவே கருதப்பட வேண்டும். தமிழ் நாட்டில் பரந்த அடிப்படையில் மாநிலம் முழுவதும் செல்வாக்குள்ள கட்சிகள் இரண்டு தான். ஒன்று திராவிட முன்னேற்றக்கழகம்(தி.மு.க). மற்றது அண்ண திராவிட முன்னேற்றக்கழகம்( அ.தி.மு.க). இந்த இரண்டு கட்சிகளும் தற்போதுள்ள தலைவர்களால் உருவாக்கி வளர்க்கப்பட்டவையல்ல. தி.மு.க அறிஞர் அண்ணாவினால் தொடக்கப்பட்டு கலைஞர் கருணாநிதியால் வளர்க்கப்பட்டு பின்னர் ஸ்ராலினிடம் கையளிக்கப்பட்டுள்ளது. தி.மு.கவின் மக்கள் ஆதரவுத் தளத்தை பெருமளவு உருவாக்கிய புகழ்மிக்க நடிகர் எம்.ஜி.ஆர் அக்கட்சியிலிருந்து வெளியேறித் தொடக்கிய புதிய கட்சியான அ.தி.மு.க பின்னர் பிரபல நடிகை ஜெயலலிதாவினால் வளர்க்கப்பட்டு இப்போது எடப்பாடி பழனிச்சாமியின் கையிலுள்ளது. இந்த வகையில் இப்போதுள்ள அக்கட்சித்தலைவர்கள் அக்கட்சிகளின் நிறுவினர்கள் அல்லர். அக்கட்சிகளின் மேலாளர்கள் மட்டுமே. முன்னவர்களினால் நட்டு வளர்க்கப்பட்ட மரத்தில் இலகுவாகக் கனி பறிப்பது போல. அது மட்டுமன்றி நீண்டகால ஆட்சி, மத்திய அரசில் பங்காளர்கள். அவற்றால் தனிப்பட்ட ரீதியிலும் கட்சி ரீதியிலும் பெற்றுக் கொள்ளப்பட்ட பணபலம், ஊடகங்கள் எனப் பலவழிகளிலும் இவ்விரு கட்சிகளும் கொழுத்துள்ளன. இவற்றுக்கு மேலாக சாதி அடிப்படையில் பாட்டளி மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் போன்றனவும் ஏலவே பலம்பெற்ற கட்சிகளாக உள்ளன. சமகாலத்தில் மத்தியில் ஆட்சியிலுள்ள பாரதிய ஜனதா கட்சி தனது ஆட்சியதிகாரச் செல்வாக்கினால் ஒருபுறத்திலும் இந்திய தேசிய காங்கிரஸ் நீண்டகால பாரம்பரியக் கட்சி என்ற வகையிலும் கணிசமான செல்வாக்கை கொண்டுள்ளன.

இவ்வாறானதொரு அரசியல் சூழ்நிலையில் அக்கட்சிகள் போல எந்தவொரு பின்புலமோ, வாய்ப்புக்களோ இல்லாதவொரு நிலையில் தமிழ்நாட்டில் புதிய கட்சியொன்றை உருவாக்கி, புதிய கொள்கைகளின் அடிப்படையில் வளர்த்தெடுப்பது என்பது இலகுவான ஒரு காரியமில்லை. அதுவும் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இவ்விரு திராவிடக்கட்சிகளுக்கு எதிராக மட்டுமன்றி மத்திய அரசின் சிந்தாந்தங்களுக்கு மாறான வகையிலும் தனித்துவமாக, தனியாகநின்று வளர்வதென்பது எவ்வளவு கடினமானது என்பதைத் தமிழக அரசியலின் நடப்புப் பண்புகளை அறிந்தவர்களுக்கு நன்கு விளங்கும்.

இவ்வாறான ஒரு நிலையில் திரையுலக மற்றும் அரசியல் பிரபலங்கள் எவருமின்றி வரையறுக்கப்பட்ட நிதிவளங்களுடன் சீமான் தன்னந்தனியாக நின்றே நாம் தமிழர் கட்சியினை இன்றைய நிலைக்கு உயர்த்தியுள்ளதைக் காணமுடியும்.

இவ்வாறு தமிழ் நாட்டில் சீமான் தேனீ கூடுகட்டுவது போல 2010 இலிருந்து சிறுகச் சிறுக நாம் தமிழர் கட்சியை வளர்க்கும்போது இங்கு அதற்கு எதிர்மறாக நமது தமிழ்க்கட்சிகள் ஏலவே கட்டப்பட்ட தேன்கூட்டைக் கலைப்பது போல அரசியல் கட்சிகளைச் சிதைத்து வருவதையே காணமுடிகிறது. அதுவும் தமிழ்நாட்டில் சீமானின் கட்சிக்கு இருப்பதை போல பிற கட்சிகளின் சவால்கள் இக்கட்சிகளுக்கு இல்லாத ஒரு நிலைமை இல்லாதிருந்தும் கூட 2010 இற்குப் பின்னரான குறிப்பாக யுத்தத்துக்கு பின்னரான காலப்பகுதியில் தமிழத்தேசியக் கட்சிகளின் நிலையை அல்லது வளர்ச்சிப் போக்கினை அவதானித்தால் அந்த வளர்ச்சி எதிர் கணியமாக அதாவது வளர்ச்சிக்குப் பதிலாக அவை வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கே தென்படுகிறது. இது கட்சிகளின் கூட்டுக்களுக்கு மட்டுமன்றி தனிக்கட்சிகளுக்கும் பொருந்தும். தமிழ் மக்களின் பாரம்பரிய கட்சிகளான இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கும் தமிழ்நாட்டின் தி.மு.க மற்றும் அ.தி.மு.க கட்சிகளுக்கும் இடையில் சில ஒத்த பண்புகள் காணப்படுகின்றன. இக்கட்சிகளின் இன்றைய தலைவர்கள் யாரும் அவற்றின் நிறவுனர்கள் அல்லர். அத்துடன் ஏதோவொரு வகையில் அக்கட்சிகளின் தலைமைப் பதவிகளைக் கையகப்படுத்தியுமுள்ளனர். மேலும் தி.மு.கவைப் போலவே இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் இப்போது குடும்பக் கட்சியாகும். இதன் முக்கிய விளைவு என்னவெனில் இக்கட்சிகளை உருவாக்கி வளர்ப்பதற்கு செலுத்தப்பட்ட உழைப்பையும் அர்ப்பணிப்புகளையும் இக்கட்சிகளின் தற்போதைய தலைவர்கள் உணரும் நிலையில் இல்லை என்பது. ஆனால் சிறிய வேறுபாடு ஸ்ராலின் இளமைப் பருவத்திலிருந்தே திமு.க கட்சிச் செயற்பாடுகளில் முக்கிய பங்கு வகித்து வந்தமையால் அக்கட்சியை கட்டிக்காப்பதிலும் வளர்ப்பதிலும் அவரது அணுகுமுறை மேம்படுகிறது.

மிகவும் கஷ்டப்பட்டு உழைத்துச் சொத்துக்களைச் சேகரிக்கும் ஒரு தந்தைக்கு அச்சொத்துக்கள் மீது இருக்கும் மதிப்பும் அதைப் பேணும் அக்கறையும் அத்தந்தையின் மகனிடம் காணப்படுவதில்லை என்பது எமது சமூகத்தில் காணப்படும் பொதுவானதொரு பண்பு. அந்த மகனைப் போலவே இன்றுள்ள கட்சித் தலைவர்கள் கட்சி தொடர்பாக கொண்டிருக்கும் அக்கறையீனம் காணப்படுகிறது. இது தனிக்கட்சிகளில் மட்டுமல்ல, கட்சிகளின் கூட்டுக்களிலும் காணப்படுகிறது. தமிழ் மக்களுக்கான அரசியலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது வழமையான அரசியல் கூட்டுக்களிலிருந்து. குறிப்பாக வழமையான தேர்தல் கூட்டுகளிலிருந்து வேறுபட்ட ஒன்றாகும்.

இக்கூட்டு தமிழ்த்தேசியத்தின் ஓர் ஜனநாயக வடிவம். இதன் நோக்கம்,அதனை உருவாக்குவதில் இருந்த சவால்கள், அதனை மக்கள் மத்தியில் ஆழவேரூன்றச் செய்வதற்குச் செய்யப்பட்ட உழைப்பு போன்றவை இப்போதுள்ள பல தலைவர்களுக்கு, குறிப்பாக அக்கூட்டமைப்பைச் சிதறச் செய்த பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

கூட்டமைப்புக்கு மட்டுமில்லை, அதிலுள்ள கட்சிகள் சிலவற்றுக்கும் அதே நிலை தான். தமிழ் மக்களின் பிரதான அரசியல் கட்சியான தமிழரசின் இன்றைய நிலை என்ன? இக்கட்சியின் இன்றைய முக்கிய தலைவர்களில் எத்தனைபேர் இக் கட்சியை வளர்ப்பதற்கு பாடுபட்டுள்ளனர். குறைந்தது இக்கட்சியின் முன்னைய தலைவர்களின் அர்ப்பணிப்புகள் தொடர்பில் மிகச் சிறியளவேனும் உணர்வுகளைக் இவர்கள் கொண்டிருக்கிறார்களா? அப்படி இருந்தால் அக்கட்சியை இந்த நிலைக்குத் தள்ளுவார்களா? அல்லது அதற்கு அனுமதிப்பார்களா? முதலில் கூட்டமைப்புச் சிதைக்கப்பட்டது. இப்போது தனிக் கட்சி சிதைக்கப்படுகிறது. வழிப்போக்கர்களின் கையில் கட்சி அகப்பட்டால் இப்படித்தான் நடக்கும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர்கள் ஆதங்கப்படுவதில் உண்மையுள்ளதா? இது தமிழரசுக் கட்சியில் பெரிதாகத் தெரிந்தாலும் ஏனைய கட்சிகளும் இதிலிருந்து விலக்கானவை அல்ல. ஆயுதப் பாராளிகளாகளாக இருந்து ஜனநாயகப் பாதைக்குத் திருப்பியதாகச் சொல்லப்பட்ட EPRLF TELO போன்ற கட்சிகளும் கூட இதேபோலத்தான் பல பிரிவுகளாகச் சிதைந்தன.

2010 இல் கட்சியைத் தொடக்கி 2016 இல் முதன் முதல் தேர்தலில் இறங்கிப் பெற்ற 1.1 வீத வாக்குகளை கடந்த எட்டு ஆண்டுகளில் 8.2வீதமாக சீமான் தனியொரு ஆளாக நின்று உயர்த்திய காலத்தில் நமது தமிழ்க் கட்சிகள் கூட்டாக 2010இல் பெற்ற 22 பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 2024 இல் கூட்டாகவன்றி கூட்டுவதன்மூலம் 10 ஆகப் பெற்றுள்ளன. அங்கு ஒரு கட்சி ஒரு தலைவன். இங்கு பல கட்சி பல தலைவர்கள் ஆனால் விளைவு எதிர்க் கணியம். அங்கு ஒரு தலைவன் கட்சியைப் படிப்படியாக கட்டி வளர்க்கிறான். இங்கு நன்கு கட்டிவளர்த்து ஒப்படைக்கப்பட்ட கட்சியை, கூட்டமைப்பைப் பல தலைவர்கள் சிதைத்துச் சின்னாபின்னமாக்கி விட்டார்கள் என்பதே உண்மை. ஏனிந்த நிலைமை? இந்தகைய போக்கைத் தொடர்ந்தும் அனுமதிப்பதன் மூலம் ஏற்படும் மோசமான விளைவுகள் தொடர்பாக தலைவர்கள் மறந்தாலும் தமிழ் மக்கள் விரைந்தும் ஆழமாகவும் சிந்திக்க வேண்டிய நேரமிதுவல்லவா? தவறவிட்டால் தந்தை செல்வா போன்ற தலைவர்களாலும் தலைவர் பிரபாகரனாலும் கட்டி வளர்க்கப்பட்ட தமிழ்த்தேசியம் கரைந்து போவதும் அதன்வழி தமிழினம் தனது தனித்தவத்தை இழந்து போவதும் மட்டும் உறுதி.

நாம் தலைவர்கட்சி இவ்வளவு சிறப்பான முறையில் தனது மாநாட்டை நடத்தியதென்றால் அதன்பின்னாலிருந்த அதனடிப்படைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். மற்றைய கட்சிகளைப் போலன்றி தானாகச் சேர்ந்த கூட்டமாக மக்கள் திரண்டிருந்ததுடன் அவர்கள் ஒழுங்கான முறையில் ஒரு பயிற்சிக்களம் போல செயற்பட்டிருந்தார்கள். இதன் பின்னாலிருக்கும் விடயங்களில் முக்கியமானவையாக இரண்டைப் பார்க்க முடிகிறது. ஒன்று அடிமட்டத்தில் மக்களிடையேயான கட்சியின் ஊடாட்டம்.இரண்டாவது கட்டுக் கோப்பாக தொண்டர்களை வளர்ப்பது. இது இங்கு தற்போது ஆட்சியிலுள்ள ஜே.வி.பி(தேசிய மக்கள் சக்தி)யிடமும் காணக்கூடிய ஒரு பண்பு. இவ்வாறானதொரு அடிமட்டக் கட்டமைப்புகள் இங்குள்ள தமிழ்க்கட்சிகளிடம் உள்ளனவா? அத்தகைய கட்டமைப்புகளை உருவாக்குவதில் அக்கட்சிகளின் தலைவர்கள் எந்தளவு அக்கறை காட்டுகிறார்கள்? (12ம் பக்கம் பார்க்க)

# ஈரானின் பாதுகாப்பு பலவீனங்களும் காமேனியின் இறுதி நிமிடங்களும்





மத்திய கிழக்கின் அரசியல் வரைபடம் கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி முதல் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

ஈரானின் ஆன்மீக மற்றும் அரசியல் அதிகாரத்தின் உச்சமாகத் திகழ்ந்த அயதுல்லா அலி காமேனி, இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் துல்லியமான கூட்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

பல தசாப்தங்களாக உலகின் மிகவும் பாதுகாக்கப்பட்ட மனிதர்களில் ஒருவராகக் கருதப்பட்ட காமேனியின் வீழ்ச்சி, நவீன உளவுத்துறையின் வெற்றியையும் ஈரானிய பாதுகாப்பு கட்டமைப்பின் மறைமுகப் பலவீனங்களையும் அம்பலப்படுத்தியுள்ளது.

காமேனியின் பாதுகாப்பு என்பது வெறும் ஆயுதங்களைக் கொண்டது மட்டுமல்ல, அது 'இரகசியம் மற்றும் கணிக்க முடியாத தன்மை' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டது. இருப்பினும், இந்தத் தாக்குதலில் அந்த அடிப்படைத் தூண்களே தகர்க்கப்பட்டன.

மேற்கத்திய உளவு அமைப்புகளால் கூட காமேனியை ஒரு தருணத்தில் பிடிக்க முயலவில்லை. மாறாக, பல ஆண்டுகளாக அவரது 'வாழ்க்கை முறை தாளத்தை' அவர்கள் அவதானித்து வந்தனர். அவர் எப்போது தனது நிலத்தடி பதுங்கு குழிக்குள் செல்வார், எப்போது முக்கிய அதிகாரிகளைச் சந்திப்பார் என்பது போன்ற தரவுகள் திரட்டப்பட்டன.'

நாங்கள் ஒருவரைப் பிடிக்கப் பார்ப்பதில்லை, அவரைச் சுற்றியுள்ள அமைப்பைப் புரிந்து கொள்ளப் பார்க்கின்றோம்' என்ற உளவுத்துறை அதிகாரி ஒருவரின் கூற்று, இத்தாக்குதலின் ஆழத்தை உணர்த்துகிறது.

அடுத்து உளவுத்துறையின் சமிக்ஞை நுண்ணுக்கம் மிக முக்கியமானது. காமேனியின் தகவல் தொடர்புகள் அனைத்தும் மிக உயர்தரக் குறியீடாக்கம் செய்யப்பட்டவை. அவ்வாறான நிலையில் ஆனால், நவீன உளவுத்துறை செய்தியின் உள்ளடக்கத்தை விட செய்திகள் பரிமாறப்படும் சூழலை அதிகம் நம்பியது. காமேனியின் அலுவலகத்தில் இருந்து திடீரென தகவல் பரிமாற்றம் அதிகரிப்பதும், முக்கியமான இராணுவத் தளபதிகளின் இருப்பிடங்களில் இருந்து சமிக்ஞைகள் ஒரு புள்ளியில் குவிவதும் ஒரு பாரிய கூட்டம் நடைபெறப் போவதை உறுதிப்படுத்தின. இந்த 'சமிக்ஞைகளின் அடர்த்தி' காமேனியின் இருப்பிடத்தைத் துல்லியமாகக் காண்பித்துள்ளது.

மனித உளவுத்துறையின் ஊடுருவலும் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. தொழில்நுட்பத்தின் பங்களிப்பு ஒரு பக்கம் இருக்க, ஈரானின் மிக உயர் மட்டப் பாதுகாப்புப் பிரிவான இஸ்லாமிய புரட்சிகர காவல்படையின் உள்ளே இருந்தே தகவல்கள் கசிந்திருக்கலாம் என்ற சந்தேகம் வலுவாக காணப்படுகின்றது.

காமேனி தனது பதுங்கு குழிக்குள் இருக்கும் நேரத்தைத் துல்லியமாகக் கணித்து, ஏவுகணைகள் பாயும் நேரத்தை நிர்ணயித்தது தக்குதலை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றால் உள்வீட்டுத் தகவலின்றி அது சாத்தியமில்லை என்று நிபுணர்கள் கருதுகின்றனர். இது ஈரானிய பாதுகாப்பு அமைப்பிற்குள் ஊடுருவியுள்ள அமெரிக்க, இஸ்ரேல் உளவுத்துறை வலைப் பின்னலை வெளிப்படுத்துகிறது.

இதேநேரம், 2025இல் நடைபெற்ற போரின் படிப்பினைகள் மிக முக்கியமானவை. 2025 ஜீன் மாதம் இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே நிகழ்ந்த குறுகிய கால மோதல், ஒரு 'நிஜ உலகத்தில் நடைமுறை ரீதியான அழுத்தச் சோதனையாக' அமைந்தது.

அந்த நெருக்கடியான நேரத்தில் ஈரான் தனது தலைவர்களை எப்படி இட மாற்றம் செய்கிறது, அவர்கள் பயன் படுத்தும் பாதுகாப்பான பாதைகள் எவை என்பதை இஸ்ரேலிய உளவுத் துறை கவனமாகப் பதிவு செய்து கொண்டது. அந்தத் தரவுகளே பெப்ரவரி 28 தாக்குதலுக்கு வரைபடமாக அமைந்திருக்கின்றன.

பெப்ரவரி 28 காலை 9:40 மணியளவில், இஸ்ரேலிய வான்படை மற்றும் அமெரிக்காவின் ஏவுகணைப் பிரிவுகள் ஒருங்கிணைந்து தாக்குதலைத் தொடுத்தன. தெஹ்ரானின் மையப்பகுதியிலுள்ள 'பெயிட் ரக்பாரி' வளாகம் பல திசைகளில் இருந்து தாக்கப்பட்டன.

ஈரானின் எஸ்–300 மற்றும் எஸ்–400 வான் பாதுகாப்பு அமைப்புகள் செயற்படுவதற்கு முன்னரே, ஸ்டெல்த் தொழில்நுட்பம் கொண்ட விமானங்கள் மற்றும் அதிவேக ஏவுகணைகள் இலக்கை எட்டின.

தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட ஏவுகணைகள் நிலத்தடியில் பல மீட்டர்கள் ஆழத்தில் உள்ள பதுங்கு குழிகளைத் துளைத்துச் செல்லும் திறன் கொண்டவையாக இருந்தன.

காமேனி தனது அலுவலகத்தில் இருந்த அதே தருணத்தில் இத்தாக்குதல் நடத்தப்பட்டதால், அவர் தப்பிச் செல்ல எந்த வாய்ப்பும் இருக்கவில்லை. ஒரு நாட்டின் அதியுயர் தலைவராகக் காமேனி எதிர் கொண்ட மிகப்பெரிய சவால், பாதுகாப்பிற்கும் நிர்வாகத்திற்கும் இடையிலான சமநிலையாகும். அவர் முற்றிலும் தனிமைப்படுத்தப்பட்டிருந்தால் நாட்டை ஆள முடியாது. அதிகாரிகளுடன் அவர் நடத்திய நேரடிச் சந்திப்புகள், பாதுகாப்பில் தவிர்க்க முடியாத அளவுக்கு ஓட்டைகளை உருவாக்கின. நவீன செயற்கைக்கோள் தொழில்நுட்பம் மற்றும் ஆளில்லா விமானங்களின் வளர்ச்சியால், ஒரு மனிதன் நீண்ட காலத்திற்குத் தன்னை மறைத்துக் கொள்வது சாத்தியமற்றதாகி விட்டது.

அதாவது, நிர்வாகத் தேவைகளுக்காகத் தலைவர்கள் ஓரிடத்தில் குவியும் போது, அதுவே அவர்களின் மிகப்பெரிய பலவீனமாக மாறுகிறது. ஈரானின் பாதுகாப்பு அமைப்பானது காமேனியின் உடலைக் காப்பதில் காட்டிய தீவிரத்தை, அவரது இருப்பிடம் குறித்த தகவலைக் காப்பதில் காட்டத் தவறி விட்டது.


அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இத்தாக்குதலை உறுதிப்படுத்தியதோடு, 'ஈரானிய மக்களின் விடுதலையும், அணு ஆயுத அச்சுறுத்தலின் முடிவும் தொடங்கி விட்டது' என்று அறிவித்தார். அமெரிக்காவின் இந்த நேரடித் தலையீடு, பிராந்தியத்தில் புதிய சகாப்தத்தை உருவாக்கியுள்ளது. ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மற்றும் ஏவுகணைத் தளங்கள் மீதும் தொடர் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இஸ்ரேலிய தரப்பில், காமேனியின் மரணம் 'தீமையின் அச்சினை உடைப்பதற்கான முதல்படி' எனக் குறிப்பிடப்பட்டு கொண்டாடப்படுகிறது.


(22ம் பக்கம் பார்க்க)

KANTHARMADAM MAKKAL ONTRIUM
- CANADA -
கந்தர்மடம் மக்கள் ஒன்றியம் - கனடா
யாழ்/கந்தர்மடம் மக்கள் ஒன்றியம் கனடா
YAZH/KANTHARMADAM MAKKAL ONTRIUM - CANADA
குளிர்கால ஒன்றுகூடல்
Winter Get Together
2026
Starting @ 6:00pm
MAR
SAT 07 2026
Estate Banquet Hall
430 Nugget Ave,
Scarborough, ON M1S 4A4
$50


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். எதிர்ப்புகள் அகலும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். பயணங்கள் சாதகமான பலன் தரலாம். குடும்பத்தில் வீண் பிரச்னை ஏற்பட்டு நீங்கும். வாழ்க்கை துணையின் செயல்கள் உங்களுக்கு அதிருப்தியை ஏற்படும். பிள்ளைகள் நீங்கள் சொல்வதை கேட்டு நடப்பது ஆறுதலை தரும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகளுக்கான தடைகள் அகலும்





ரிஷபராசி அன்பர்களே! மனதில் துணிச்சல் அதிகரிக்கும். எடுத்த காரியங்களை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எங்கும் எல்லோரிடத்திலும் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். அடுத்தவர்களுக்காக உதவிகள் செய்வதில் உற்சாகம் உண்டாகும். வழக்கு விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். குடும்பத்தில் சந்தோஷமும் மன நிம்மதியும் இருக்கும். உறவினர்கள், நண்பர்களின் ஆதரவும் கிடைக்கும். நிதானமாக பேசுவது நல்லது.





மிதுனராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிக்க இருந்த தாமதம் நீங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. கணவன் மனைவிக்கிடையே மன மகிழ்ச்சி ஏற்பட அனுசரித்து செல்வது நல்லது. பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்துவது நன்மையை தரும். வழக்கு விவகாரங்களில் ஈடுபடாமல் தவிர்ப்பது நல்லது.




கடகராசி அன்பர்களே! மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். சாமர்த்தியமாக செயல்பட்டு காரிய வெற்றி காண்பீர்கள். குடும்பத்தில் சந்தோஷம் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களால் அதிகப்படி வருமானம் இருக்கும். கணவன், மனைவிக்கிடையே சுமூகமான உறவு காணப்படும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக பாடுபடுவீர்கள். தாய், தந்தையரின் உடல் நிலையில் கவனம் தேவை.





சிம்மராசி அன்பர்களே! தைரியம் தன்னம்பிக்கை அதிகரிக்கும். பூமி வீடு மனையால் லாபம் ஏற்படும். சுபகாரியங்கள் நல்லபடியாக நடக்கும். அடுத்தவர்கள் மூலமாக நடக்க வேண்டிய காரியங்கள் நல்லபடியாக நடக்கும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கும். கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வீர்கள்




கன்னிராசி அன்பர்களே! வீண் செலவுகள் குறையும். பணவரத்து அதிகரிக்கும். எதையும் எதிர்த்து நிற்பதை தவிர்த்து அனுசரித்து செல்வது முன்னேற்றத்திற்கு உதவும். அடுத்தவர்களின் நலனுக்காக உழைக்க வேண்டி இருக்கும். சொத்துக்களை வாங்கும் போதும், விற்கும்போதும் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபப்படாமல் நிதானமாக பேசி அனுசரித்து செல்வது நல்லது.





துலாம்ராசி அன்பர்களே! மன திடம் அதிகரிக்கும். சுபச்செலவுகள் வந்து சேரும். அடுத்தவர்களுக்காக உதவி செய்வது மற்றும் அவர்களுக்காக பரிந்து பேசும் போது கவனம் தேவை. குடும்பாதிபதி சுக்கிரன் ராசியில் இருக்கிறார். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே சிறு பூசல்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளிடம் நிதானமாக பேசுவது நல்லது. தொழில் ஸ்தானத்தை புதன் பார்ப்பதால் சிறு பிரச்னைகள் தோன்றி மறையும்.





விருச்சிகராசி அன்பர்களே! சுபச் செலவுகள் அதிகமாகும். வீண் பேச்சை குறைப்பது நன்மை தரும். அடுத்தவருக்கு ஜாமீன் கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தினரது செய்கைகள் உங்களது கோபத்தை தூண்டும்படியாக இருக்கலாம். நிதானத்தை கடைபிடிப்பது வீண் பிரச்னை ஏற்படாமல் தடுக்கும். வாழ்க்கை துணை ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வது நன்மை தரும். எதைப் பற்றியும் விவாதிப்பதை தவிர்ப்பது நல்லது.








தனுசுராசி அன்பர்களே! கடும் முயற்சிக்கு பிறகு எந்த ஒரு காரியத்திலும் லாபம் உண்டாகும். வெளியூர் அல்லது வெளி நாட்டு பயணம் மூலம் நன்மை உண்டாகும். தொலை தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்ல தகவல்களாக வந்து சேரும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். குடும்பத்தில் அவ்வப்போது ஏதாவது சிறு மனஸ்தாபங்கள் ஏற்பட்டு மறையும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் உண்டாகும்.




மகரராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் நன்மை உண்டாகும். செய்யும் காரியத்தை சிறப்பாகவும், நேர்மையாகவும் செய்து முடித்து மற்றவர்களிடம் பாராட்டு பெறுவீர்கள். சிலருக்கு உங்கள் செல்வாக்கை கண்டு பொறாமை உண்டாகலாம். எதிர்ப்புகள் விலகும். காரிய தடைகள் நீங்கும். வீடு மனை சம்பந்தப்பட்ட விஷயங்களில் இருந்து வந்த சுணக்க நிலை மாறும். தடைபட்டிருந்த வீடுப் பணிகள் நிறைவடையும்.




கும்பராசி அன்பர்களே! காரியங்களில் இருந்த சுணக்க நிலை மாறும். முயற்சிகளில் நல்ல பலன் காண்பீர்கள். சகோதரர்கள் வழியில் இருந்த பிரச்னைகள் நீங்கும். குடும்பத்தினரின் செயல்கள் நன்மை அளிக்கக்கூடிய வகையில் இருக்கும். எந்த விஷயத்தையும் கணவன், மனைவிக்கிடையே திட்டமிட்டு செய்வது நன்மை தரும். குழந்தைகள் உங்கள் சொற்படி கேட்டு நடப்பது மனஅமைதியை தரும்.




மீனராசி அன்பர்களே! நீங்கள் செய்யும் காரியங்கள் வெற்றியை தரும். சாதுர்யமாக பேசி எதிலும் வெற்றி காண்பீர்கள். அனுபவப்பூர்வமான அறிவுத்திறன் அதிகரிக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். குடும்பத்தில் மனம் மகிழும்படியான நிகழ்ச்சி நடக்கும். வீடு, வாகனம் வாங்கும் எண்ணம் அதிகரிக்கும். கணவன் மனைவிக்கிடையே ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வதன் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## தேசிய மக்கள் சக்தி - இன்றைய ஜே.வி.பியை...

(18ம் பக்கத் தொடர்ச்சி) வாழ்க்கை அனுபவங்களில் இருந்தும் எதையும் கற்றுக் கொள்ள முயல்வதில்லை. குறைந்த பட்சம் தம்மை, தம்முடைய கட்சியை அல்லது இயக்கத்தை ஒரு தடவையேனும் மறுபார்வைக்குட்படுத்திச் சீர்ப்படுத்த முயற்சிப்பதில்லை. தமிழ்த்தரப்பில் தலைமைத்துவத்துக்கான ஒரு முகத்தைக்கூடக் காணவில்லை. இருக்கின்ற முகங்களை மாறி மாறி ஒவ்வொரு தரப்பும் சிதைப்பதிலேயே குறியாக உள்ளன. தலைமைக்குரிய ஒரு முகத்தை யாவது அடையாளப்படுத்தி வளர்த்தெடுக்க வேண்டும் என்ற எண்ணம் எவரிடத்திலும் இல்லை. இந்தப் பிழையான குணத்தினால் இயல்பினால் மூடத்தனத்தினால் இந்தியாவையும் எதிர்த்தரப்பாகிய சிங்களர்களிடத்தில் ஒப்படைத்து விட்டு ஒப்பாரி வைக்கின்றன.

இந்த (இன்றைய) உலகத்தில் ஒப்பாரிக்கு எந்தப் பெறுமானமும் இல்லை. அது புலம்பலுக்கு ஒப்பானது. புலம்பல்களை யாரும் செவி கொள்வதில்லை. உங்களுடைய விருப்பங்களும் தேவைகளும் நியாயங்களும் நிலைப்பாடும் எவ்வளவோ பெறுமதிக்குரியனவாக இருக்கலாம். அவை எல்லாவற்றையும் பெறுவதற்கான யதார்த்தம் எப்படி உள்ளது என்பதே முக்கியமானது. ஜே.வி.பி பல பத்து ஆண்டுகளாக கடைப்பிடித்த நிலைப்பாட்டையெல்லாம் மூடையாகக் கட்டி ஓரத்தில் வைத்து விட்டு, தன்னை நெகிழ்த்தி, தேசிய மக்கள் சக்தியாகி, இன்று உலகத்தோடு ஒத்து ஓடுகிறது. தமிழர்களோ?

## வேலையற்ற பட்டதாரிகளை உற்பத்தி செய்யும்

(14ம் பக்கத் தொடர்ச்சி) ஆசிரியர் சொன்னார், இரண்டாவது பட்டப்படிப்புக்காக ஆங்கிலம் பயிலவரும் பெரும்பாலானவர்கள் புலப்பெயர்ச்சியை நோக்கமாகக் கொண்டவர்கள் என்று. ஓர் இளம் தலைமுறையினரின் மனதில் புலப்பெயர்ச்சி ஒரு கனவாகத் தொடர்ந்து காணப்படுகிறது. ஆனால் இந்த விடயத்தில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களில் உள்ள தொழில் முனைவோரும் தொழில் அதிபர்களும் தாயகத்தில் முதலீடு செய்யலாம். புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கலாம். புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் நிதி ரீதியாக பிரகாசமான ஒரு முன்னுதாரணமாகத் திகழும் இந்த சமூகத்தில், அதே புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தில் வெற்றி பெற்ற தொழில் முனைவோர் தாயகத்தில் முதலீடுகளைச் செய்வதன் மூலம் தமது முன்னுதாரணங்களைப் பின்பற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கையை தொழில் முனைவோரின் எண்ணிக்கையை அதிகப்படுத்தலாம்.

தன் சொந்த பலத்தில் தன் சொந்தக் காலில், தனது வேரிலேயே நிலைத்து நிற்கத் தேவையான துணிச்சலையும் நம்பிக்கையையும் புதிய தலைமுறைக்கு வழங்குவது தமிழ்த் தேசியவாத நோக்குநிலையில் கட்டாயமானது. அது தேசத்தைக் கட்டி எழுப்புவதன் ஒரு பகுதி. தனது வேர்களை அறுத்துக் கொண்டு ஓர் இளைய தலைமுறை புலம்பெயர முயற்சிப்பது என்பது தமிழ்த் தேசிய அரசியலின் தோல்வி. எனவே இந்த விடயத்தில் விசேஷமாக புலம் பெயர்ந்த தமிழ்த் தொழில் முனைவோருக்கு ஒரு பொறுப்பு உண்டு. அது அரசியல் அர்த்தத்தில் தேசத்தைக் கட்டியெழுப்பும் ஒரு பொறுப்புத் தான். தமிழ்த் தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் ஒரு பொறுப்புத் தான்.

## ஈரானின் பாதுகாப்பு பலவீனங்களும் காமேனியின் இறுதி நிமிடங்களும்

(21ம் பக்கத் தொடர்ச்சி) தற்போது, அலிரேசா அரா:ஃபி, இடைக்கால தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் தனது கடமையை பொறுப்பேற்று 24 மணிநேரம் நிறைவடைவதற்கு முன்னரே கொல்லப்பட்டு விட்டதாகவும் கூறப்படுகின்றது. ஆனால் ஈரானிய தரப்பில் அவை உறுதிப்படுத்தப்படவில்லை.

எவ்வாறாயினும் தலைமைத்துவ வெற்றிடத்தால் ஈரான் நிலைதடுமாறினாலும், அந்நாட்டு இராணுவம் இஸ்ரேல் மீது பாரிய ஏவுகணைத் தாக்குதல்களைத் தொடுத்துள்ளது. லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேலின் வடக்கு எல்லைகளில் ஊடுருவ முயற்சி செய்து வருகிறது.

யேமனின் ஹஜீதி கிளர்ச்சியாளர்கள் செங்கடல் பகுதியில் அமெரிக்கக் கப்பல்களை இலக்கு வைத்துள்ளனர். இதனால் மத்திய கிழக்கு பிராந்தியம் முழுவதும் முழு அளவிலான போர்க்களமாக மாறியுள்ளது.

ஈரானின் புரட்சிகர காவல்படை, காமேனியின் படுகொலைக்கு ‘வரலாறு காணாத பதிலடி’ கொடுக்கப்படும் என்று சூளுரைத்துள்ளது. அதற்கமைய அது மத்திய கிழக்கில் உள்ள தளங்களை இலக்கு வைத்து தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது.

இந்த மோதலால் உலகப் பொருளாதாரம் பெரும் சரிவைச் சந்தித்துள்ளது. ஹோர்முஸ் நீரிணை வழியாகச் செல்லும் கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளதால், கச்சா எண்ணெய் விலை ஒரு பேரலுக்கு 150 டொலர்கள் அதிகரித்துள்ளது.

இது இலங்கை போன்ற ஆசிய நாடுகளில் கடும் எரிபொருள் தட்டுப்பாட்டை உருவாக்கியுள்ளது. விமான போக்குவரத்துப் பாதைகள் மாற்றப்பட்டுள்ளதால், சர்வதேசப் பயணங்கள் மற்றும் சரக்குக் கையாளல் செலவுகள் பல மடங்கு அதிகரித்துள்ளன.

மத்திய கிழக்கில் உள்ள இலட்சக்கணக்கான புலம்பெயர் தொழிலாளர்களின் வாழ்வாதாரமும் பாதுகாப்பும் இப்போது பெரும் கேள்விக்குறியாகியுள்ளது.

காமேனியின் படுகொலை என்பது ஒரு தனிநபர் மீதான தாக்குதல் மட்டுமல்ல, அதுவொரு சித்தாந்தத்தின் மீதான தாக்குதலாகவே பார்க்கப்படுகிறது.

ஈரானின் பாதுகாப்பு அமைப்பின் பலவீனம் என்பது அதன் ‘நிர்வாகத்தேவை’ மற்றும் ‘அதிகாரப் பகிர்வு’ ஆகியவற்றில் அடங்கியுள்ளது. நாட்டை ஆள வேண்டிய கட்டாயம் ஒரு தலைவரைத் தனிமைப்படுத்துவதைத் தடுக்கிறது. அந்தத் தருணங்களே அவருக்குப் பலவீனமாக மாறுகின்றன.

இந்தப் போர் எங்கு போய் முடியும் என்பது தெரியவில்லை என்றாலும், மத்திய கிழக்கில் ஈரானின் ஆதிக்கம் ஒரு பாரிய சரிவைச் சந்தித்துள்ளது என்பது மட்டும் உறுதி.

உளவுத்துறையும் தொழில்நுட்பமும் இணைந்து ஒரு பேரரசின் தூணையே வீழ்த்திவிட்டன. 2026ஆம் ஆண்டின் இச்சம்பவம், எதிர்காலப் போர்கள் இரத்தத்தால் மட்டுமல்ல, தகவல்களாலும் தீர்மானிக்கப்படும் என்பதை மீண்டும் ஒரு முறை உலகிற்கு நிரூபித்துள்ளது.

# இலங்கையின் கடற்பரப்பில் நீர்மூழ்கிக் கப்பல் தாக்குதலில்

2ம் பக்கத் தொடர்ச்சி0) வெளிநாட்டு ஊடகங்கள் வெளியிட்ட தகவலை நிராகரிக்கின்றோம்.' என்று கூறினார். இரானிய கப்பலின் நிலை பற்றி பிபிசி சிங்களா விசாரித்தபோது, கடற்படை சென்ற சமயத்தில் கப்பல் முழுவதும் மூழ்கியதாக அவர் தெரிவித்தார்.

அபயக் குரல்கள் எங்களுக்கு கிடைத்த போது சம்பவம் நடந்த இடத்திற்கு கடற்படை கப்பல் சென்றடைந்தன, ஆனால் அங்கு எண்ணெய் படலங்கள், சில உயிர்காக்கும் படகுகளை மட்டுமே கண்டோம். அங்கு எந்த இரானிய கப்பலும் இல்லை. அது மூழ்கியிருந்தது.' என்றும் தெரிவித்தார். கப்பல் மூழ்கியதற்கான காரணத்தை தற்போது வரை இலங்கை இராணுவத்தால் உறுதி செய்ய முடியவில்லை.

தொடர்ந்து பேசிய அவர், 'விபத்துக்குள்ளான கப்பலில் காணாமல் போயுள்ளவர்களை மீட்கும் பணிகள் தற்போதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. 32 பேரை பாதுகாப்பாக மீட்டெடுத்துள்ளோம். தொடர்ந்தும் தேடுதல்கள் முன்னெடுக்கப்படுகின்றன.' என்றார்.

கப்பல் மூழ்கி வரும் இடத்திலிருந்து சில உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். ''இந்தச் சந்தர்ப்பத்தில் குறித்த கடலை அண்மித்த பகுதியிலிருந்து உயிரிழந்த சில மனித உடல்களை நாங்கள் மீட்டுள்ளோம். இந்த சடலங்கள் கப்பலில் கடமையாற்றிய ஊழியர்களுடையதாக இருக்கலாம் என நாங்கள் சந்தேகிக்கின்றோம். எனினும், எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளின் ஊடாகவே இந்த சடலங்கள் இந்த கப்பலில் பணியாற்றியவர்களுடையதா என்பது உறுதிப்படுத்தப்படும் என அவர் குறிப்பிடுகின்றார். இரானிய கப்பல் விபத்தில் சிக்கியதற்கான உண்மையான காரணம் தெரியவில்லை என, பாதுகாப்பு இணை அமைச்சர் அருணா ஜெயசேகரா பிபிசி சிங்கள மொழி சேவையிடம் தெரிவித்துள்ளார்.

கடற்படை இதனை விசாரித்து வருகிறது. காரணம் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. அதே நேரத்தில், உறுதியான காரணத்தை எங்களால் கண்டறிய முடியவில்லை,' என்று அவர் கூறினார். கப்பலின் நிலை பற்றி தற்போது கருத்து தெரிவிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கப்பலில் இருந்தவர்களில் காயமடைந்த 32 பேர் காலி தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக, மருத்துவமனையின் இயக்குநர் மருத்துவர் எஸ்.டி.யு.எம் ரங்கா பிபிசியிடம் தெரிவித்தார்.

32 நோயாளிகள் உள்ளனர். பலருக்கு வெட்டுக் காயங்களும், தீக்காயங்களும் எலும்பு முறிவும் ஏற்பட்டுள்ளது. அதில் ஒருவரின் நிலை மோசமான நிலையில் உள்ளது. 7 பேருக்கு மிதமான அளவிலும் மற்றவர்களுக்கு சிறிய அளவிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன. காயம் ஏற்பட்டதற்கான காரணத்தை உறுதியாக கூற முடியவில்லை' என்றும் அவர் தெரிவித்தார்

அந்தக் கப்பல் குழுவினரை மீட்க இலங்கை கடற்படை மற்றும் விமானப்படை கூட்டாக இணைந்து செயல்பட்டதாகவும் சம்பத் துய்யகொந்தா தெரிவித்தார். இலங்கையின் கடல் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் அந்தக் கப்பல் ஆபத்தில் இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

கப்பலில் உள்ள குழுவினரை மீட்க இலங்கை கடற்படை கப்பல் ஒன்று அனுப்பப்பட்டதாக, கடற்படை செய்தித் தொடர்பாளர் புத்திக்க சம்பத் தெரிவித்தார். சம்பவம் நிகழ்ந்த பகுதியில் கண்காணிப்பு மேற்கொள்ள இலங்கை விமானப் படையின் விமானம் (மார்ச் 4) அனுப்பப்பட்டதாக, விமானப் படை செய்தித் தொடர்பாளர் நலின் வெவாகும்புரா தெரிவித்தார்.

இரானிய கடற்படைக்குச் சொந்தமான ஐஆர்ஐஎஸ் டேனா 'விபத்துக்கு உள்ளானதாக' இலங்கை வெளியுறவு அமைச்சர் விஜிதா ஹெராத் நாடாளுமன்றத்தில் கூறினார். காலை 05:08 மணிக்கு கப்பல் மூழ்குவதாக கடற்படைக்கும் கடலோரக் காவல் படைக்கும் தகவல் கிடைத்தது என்றும் அவர் தெரிவித்தார். காலை 6 மணிக்கு இலங்கை கடற்படை மற்றும் விமானப்படை தலையிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

'6 மணிக்கு முதல் கடற்படை கப்பல் சென்றது, 7 மணிக்கு இரண்டாவது கப்பல் சென்றது. இந்த மீட்புப் பணியில் விமானப்படையும் கடற்படையும் ஈடுபட்டது,' என்றார் விஜிதா ஹெராத். கப்பலில் 180 பேர் வரை இருந்ததாகவும் 30 பேர் தீவிர ஆபத்தில் இருந்ததாகவும் தகவல் கிடைத்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐஆர்ஐஎஸ் டேனா கப்பல் இரானிய கடற்படையின் 86 பிரிவைச் சேர்ந்தது. மிகவும் பேசப்பட்ட இந்தக் கப்பல் 2022-2023 ஆண்டுகளில் இரானிய கடற்படையின் பலத்தைக் காட்டுவதற்காக உலகம் முழுவதும் 65,000 கிமீ கடல் பயணத்தை மேற்கொண்டது.

இந்தக் கப்பல் முழுவதும் இரானால் உருவாக்கப்பட்டது. இரானின் பண்டர் அப்பாஸில் உள்ள ஷாஹித் டார்விஷ் கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்டது. 1,500 டன் எடை கொண்ட இந்தக் கப்பல் 95 மீட்டர் நீளம் கொண்டது.

இந்தக் கப்பலில் நூர் அல்லது காதர் என்று அழைக்கப்படும் கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள், 76 மிமீ ஃபஜர்-27 கடற்படை துப்பாக்கி, 30மிமீ ஆயுத அமைப்பு, ஆயுதங்கள் மற்றும் தளத்திலிருந்து வான் நோக்கிச் செலுத்தும் ஏவுகணைகள் ஆகியவை உள்ளன.

உலகளாவிய வர்த்தகத்தை காப்பதிலும் கடற்கொள்ளையை எதிர்கொள்வதிலும் மற்றும் நீண்ட தூர கடற்சார் திட்டங்களை நடத்துவதிலும் இரானின் திறன்களை மேம்படுத்துவதற்காக இந்தக் கப்பல் வடிவமைக்கப்பட்டுள்ளது என இரான் கடற்படை தெரிவிக்கிறது.

இந்தியா வந்திருந்த கப்பல் இந்தக் கப்பல் கடந்த பிப்ரவரி 17-ஆம் தேதி இந்தியாவில் விசாகப்பட்டினம் வந்திருந்தது. இந்திய கடற்படையின் எக்ஸ் தளப் பதிவின் படி, இந்த கப்பல் கடற்படை பயிற்சியில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தது.நன்றி:- பிபிசி


Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- Vistation
- Funeral & Memorial Service
- Reception
- Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

EMOTIONAL BENEFITS
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com




# ஈரானில் 2000 இலக்குகள் தரை மட்டம்! அமெரிக்கா பலத்த பதிலடி! ஈரானுக்குள் ஊடுருவிய குர்திஷ் போராளிகள்! புதிய களமுனை திறப்பு

மத்திய கிழக்கில் போர் மேகங்கள் சூழ்ந்துள்ள நிலையில், ஈரானின் இராணுவக் கட்டமைப்புகளை முடக்கும் நோக்கில் அமெரிக்கா முன்னெடுத்து வரும் "Operation Epic Fury" இராணுவ நடவடிக்கையின் தற்போதைய நிலவரங்களை அமெரிக்க மையக் கட்டளை (CENTCOM) வெளியிட்டுள்ளது. ஈரானின் வான் பாதுகாப்பு, ஏவுகணைத் தளங்கள் மற்றும் கடற்படை ஆகியவற்றிற்கு ஈடுசெய்ய முடியாத அளவிற்குப் பலத்த சேதங்கள் விளைவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க கடற்படைத் தளபதி அட்மிரல் பிராட் கூப்பர் விடுத்துள்ள உத்தியோகபூர்வ அறிக்கையின்படி, ஈரானுக்கு எதிரான இந்தப் போரில் அமெரிக்கா தனது முழு இராணுவ பலத்தையும் களமிறக்கியுள்ளது.

50,000க்கும் மேற்பட்ட தரைப்படை வீரர்கள், 200க்கும் மேற்பட்ட அதி நவீன போர் விமானங்கள், இரண்டு மாபெரும் விமானம் தாங்கிக் கப்பல்கள் மற்றும் போர் குண்டுவீச்சு விமானங்கள் இந்த நடவடிக்கையில் பங்கேற்றுள்ளன. இது கடந்த 20 ஆண்டுகளில் மத்திய கிழக்கில் அமெரிக்கா மேற்கொண்ட மிகப்பெரிய இராணுவக் குவிப்பாகக் கருதப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை போர் தொடங்கியதிலிருந்து இதுவரை ஈரானுக்குள் சுமார் 2,000 இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இலக்குகள் அமெரிக்க மற்றும் இஸ்ரேலியப் படைகளால் துல்லியமாகத் தாக்கி அழிக்கப்பட்டுள்ளன. 2003ஆம் ஆண்டு ஈராக் போரின் போது நடத்தப்பட்ட 'Shock and Awe' குண்டுவீச்சுகளை விடவும் இரண்டு மடங்கு அதிக வீரியத்துடன் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாக அட்மிரல் கூப்பர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்தாக்குதலில் ஈரானியக் கடற்படை வரலாறு காணாத இழப்புகளைச் சந்தித்துள்ளது. குறிப்பாக, ஈரானின் ஒரு நீர்மூழ்கிக் கப்பல் உட்பட மொத்தம் 17 போர்க்கப்பல்களை அமெரிக்கக் கடற்படை நடுக்கடலில் வைத்து மூழ்கடித்துள்ளது. இதன் மூலம் பாரசீக வளைகுடா மற்றும் இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் ஈரானின் கடற்படை ஆதிக்கம் பெருமளவு முடக்கப்பட்டுள்ளது.

ஈரானின் வான் பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் ஏவுகணை ஏவுதளங்களை நாங்கள் சிதைத்துள்ளோம். இதனால் ஈரானின் பதிலடி கொடுக்கும் திறன்வேகமாகச் சரிந்து வருகின்றது' என்று அட்மிரல் கூப்பர் தெரிவித்துள்ளார். ஈரான் இதுவரை 500க்கும் மேற்பட்ட ஏவுகணைகளையும் 2,000-க்கும் மேற்பட்ட ட்ரோன்களையும் ஏவியிருந்தாலும், அமெரிக்காவின் வான் பாதுகாப்பு அமைப்புகள் அவற்றை வெற்றிகரமாக முறியடித்து வருவதோடு, ஈரானின் ஏவுதளங்களையும் தொடர்ச்சியாக அழித்து வருகின்றன.



அமெரிக்காவின் இந்த அதிரடித் தாக்குதல்கள் ஈரானை ஒரு தற்காப்பு நிலைக்குத் தள்ளியுள்ளது. ஈரானின் முக்கிய இராணுவ மையங்கள் மற்றும் கடற்படை தளவாடங்கள் அழிக்கப்பட்டுள்ளதால், பிராந்தியத்தில் அமெரிக்காவின் மேலாதிக்கம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை ஈரானுக்குள் ஊடுருவிய ஆயிரக்கணக்கான குர்திஷ் போராளிகள்: ஈராக் எல்லையில் புதிய போர் முனை ஒன்றைத் திறந்துள்ளனர்.

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ள நிலையில், ஈராக்கின் வடக்குப் பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கான குர்திஷ் போராளிகள் ஈரானிய எல்லைக்குள் நுழைந்து புதிய தரைவழிப் போர்முனை ஒன்றை திறந்துள்ளனர். கடந்த புதன்கிழமை (மார்ச் 4) இந்த ஊடுருவல் தொடங்கியுள்ளதை அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.ஈரானிய குர்திஷ் போராளி அமைப்புகள் (Kurdish Militias) கடந்த சில நாட் களாகவே அமெரிக்க அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வந்த நிலையில், தற்போது மேற்கு ஈரானில் உள்ள பாதுகாப்புப் படைகளைக் குறி வைத்து இந்தத் தாக்குதலை ஆரம்பித்துள்ளனர். ஈரானுக்குள் குர்திஷ் படைகள் ஏற்கனவே போர்த் தளங் களை அமைத்து முன்னேறி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதலுக்குப் பின்னணியில், கடந்த பிப்ரவரி 22ஆம் தேதி உருவாக்கப்பட்ட ஈரானிய குர்திஸ்தான் அரசியல் சக்திகளின் கூட்டணி'' செயல்பட்டு வருகிறது. எட்டு மாத கால பேச்சுவார்த்தைக்குப் பிறகு ஐந்து முக்கிய எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து இந்தக் கூட்டணியை அமைத்துள்ளன. ஈரானில் தற்போது நிலவும் குழப்பமான சூழலைப் பயன்படுத்தி, ஒரு மக்கள் கிளர்ச்சியைத் தூண்டுவதே இவர்களின் நோக்கமாகக் கருதப்படுகிறது.

மத்திய புலனாய்வு முகமை குர்திஷ் படைகளுக்கு ஆயுதங்களை வழங்கி வருவதாகச் செய்திகள் வெளியான போதிலும், வெள்ளை மாளிகை அதனைத் திட்டவட்டமாக மறுத்துள்ளது. அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவத் தளம் குறித்து மட்டுமே குர்திஷ் தலைவர்களுடன் பேசியதாக ஊடகச் செயலாளர் கரோலின் லெவிட் தெரிவித்துள்ளார். பாதுகாப்புச் செயலர் பீட் ஹெக்செத் கூறுகையில், அமெரிக்காவின் இலக்குகள் எந்தவொரு குறிப்பிட்ட படைக்கும் ஆயுதம் வழங்குவதை அடிப்படையாகக் கொண்டவை அல்ல என்று விளக்கமளித்துள்ளார்.

இதற்குப் பதிலடியாக, ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படை வட ஈராக்கில் உள்ள குர்திஷ் தளங்கள் மீது ட்ரோன் தாக்குதல்களை நடத்தியுள்ளது. குறிப்பாக கொய்ஸின்ஜாக் மாவட்டத்தில் உள்ள முகாம்கள் மற்றும் மருத்துவமனைகள் இலக்கு வைக்கப்பட்டுள்ளன. இதில் பல போராளிகள் காயமடைந்துள்ளதாகவும், ஆயுதக் கிடங்குகள் சேதமடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மோதலை துருக்கி மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. துருக்கியில் தடைசெய்யப்பட்ட "முமு அமைப்புடன் தொடர்புடைய "துயுமு போன்ற குழுக்கள் இந்த கிளர்ச்சியில் ஈடுபடுவது, துருக்கியின் உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையலாம் என அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஹக்கான் ஃபிடான் கவலை வெளியிட்டுள்ளார். ஈரான் துண்டு துண்டாகச் சிதறினால், அது தனது எல்லைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால், வடமேற்கு ஈரானில் இராணுவத் தலையீட்டை மேற்கொள்ளவும் துருக்கி ஆலோசித்து வருவதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

தற்போது சுலைமானியா மாகாணத்தில் உள்ள ஈரானிய எல்லைப் பகுதிகளில் குர்திஷ் படைகள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன. ஈரானின் உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் பிராந்திய அரசியலில் இந்தத் தரைவழித் தாக்குதல் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

